
GOKULAM அக்டோபர் '96 ரூ.5/-

கோகுலம்





எங்கப்பா!
இறங்கு சீக்கிரம்!



கோகுலம்

1996 அக்டோபர் இதழ்
மலர் : 14 இதழ் : 8

உயிர்களிடத்தில் அன்பு வேணும் -
தெய்வம்
உண்மையென்றும் தானறிதல் வேணும்
— பாரதியார்.



அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

புதிய தொடர்கதையின் ஆரம்பத்தைப் பாராட்டி கடிதங்கள் குவிந்து வருகின்றன. உதயன் கண்டிப்பாக உங்கள் இதயத்தைத் தொடுவான் என்பது உறுதி.

உலகமெங்கும் வன்முறை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. பஸ்ஸில், ரயிலில் பயணிப்பவர்களும், விமானத்தில் பயணம் செய்பவர்களும் முழுசாக; பத்திரமாக வீடு திரும்புவோமா என்று சந்தேகப்படும் பத்திரமில்லாத நிலை வளர்ந்து வருகிறது. தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள வன்முறை வழியைப் பயன்படுத்துபவர்களால் ஏற்படும் விளைவு இது. இதன் காரணமாக கணக்கற்ற குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் பலியாகி வருகிறார்கள். இந்த நிலை வளர்ந்தால் மனிதர்கள் நடமாடக் கூட முடியாத நிலை ஏற்பட்டாலும் அதிசயம் இல்லை. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மனித நேயம் இல்லாமையும்; அன்பின் வலிமையில் நம்பிக்கை இல்லாமையும்தான். அன்பால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை என்பதை காந்தியடிகள் உலகுக்கு உணர்த்தினார். சகிப்புத்தன்மைக்கும், சகோதரத்துவத்துக்கும் அவரே முன் மாதிரியாக நடந்து வழிகாட்டினார். இதன் அவசியம் இன்று அதிகம் உணரப்படுகிறது. அந்த அன்புச் சுடர் உலக மக்கள் அனைவரும் அமைதியாக வாழ வழிகாட்ட வேண்டும் என்று வேண்டுவோம்.

வீட்டிலும், பள்ளியிலும், தெருவிலும் சண்டையிட்டுக் கொண்டு உலக சகோதரத்துவம் வளர வேண்டும் என்று விரும்புவதில் பொருள் இல்லை. முதலில் நம் வகுப்பில், நம்முடன் படிப்பவர்களை, பழகுபவர்களை மனதார நேசிக்கிறோமா என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும். அவர்களுக்கு நம்மால் விட்டுக் கொடுக்க முடிகிறதா என்பதைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். கருத்து வேறுபாடு வந்தால், மனம் விட்டுப் பேசித் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்து பார்க்க வேண்டும். முடியவில்லை என்றால், முடிய வேண்டிய அளவுக்கு நம்மை நாமே மாற்றிக் கொள்ள வேண்டும். இந்த உணர்வு வளர்ந்தால் நாம் உலக சகோதரத்துவத்தை நோக்கி ஓர் அடி எடுத்து வைத்து விட்டோம் என்று மன நிறைவு கொள்ளலாம். இதுவே நமது நாட்டில் தோன்றி, நமக்காகவே வாழ்ந்து மறைந்த உத்தமர் காந்தியடிகளுக்கு நாம் செலுத்தும் காணிக்கை. இதை இப்போதே ஆரம்பிப்போமே?

அன்புடன்

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)




கோகுலம்


1996 அக்டோபர்

இந்த இதழில்...


* காட்டில் அறிவொளி இயக்கம் பக்கம் 7



* துடுப்பில்லாத படகோட்டி (நாடகம்) பக்கம் 65



* தாயன்பை அறியுமா தாமரைக் கோழி? - பக்கம் 27







காந்திஜி

சாந்தமே உருவ மாக,
சத்திய வடிவ மாக
காந்திஜி இந்த நாட்டின்
கடவுளாய் வந்தி ருந்தார்

சுமையென அழுத்து கின்ற
துயர்பல மறைந்து போக,
அமைதியில் உலகு வாழ
அவர் பெரும் கனவு கண்டார்

உயிர்வதை புரிந்தி டாத
உயர்நிலை மலர வேண்டி
பயிரென அன்பு மண்ணில்
பதமுடன் வளர வாழ்ந்தார்.

இரத்தமே சிந்தி டாமல்
இந்தியர் அடிமை நீங்க
அறவழி உதவி கொண்டே
அற்புதப் போர்பு ரிந்தார்

பகட்டிலா ஆடை பூண்டு
பாரதம் சுற்றி வந்தார்
திகட்டுதல் சிறிதும் இன்றி
தியாகமோ பலபு ரிந்தார்.

எளிமையின் சின்ன மாக
இறுதிநாள் வரையில் வாழ்ந்தார்
அருமையாய் அவரை எண்ணி
அனைவரும் புகழ வாழ்ந்தார்

- புவனை கலைச்செழியன்



சித்தப்பாவின் கடிதம்!

வானில் மேகங்கள் சூரியனை சுத்தமாக மறைத்து மழையை இப்பொழுது பொழியலாமா வேண்டாமா எனப் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருந்தன. குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது.

மணீஷ்குமார் தன் வீட்டு மொட்டை மாடியில் நின்று தூரத்தில் தெரிந்த, யாரோ பறக்க விட்டுக் கொண்டிருந்த பட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தான்.

"மணீஷ் அண்ணா! கொஞ்சம் கீழே இறங்கி வாயேன்" என்று தங்கை சுவாதி அழைத்ததைக் கேட்ட மணீஷ் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தான்.

"என்ன சுவாதி?"

"உனக்கு சித்தப்பா கடிதம் போட்டிருக்காங்க!" என்றபடி அந்த இன்லண்ட் கவரை மணீஷிடம் கொடுத்தாள் சுவாதி.

கடிதத்தை வாங்கிய மணீஷ்குமார் அனுப்புனர் முகவரியைப் பார்த்தான். அவன் சித்தப்பா முகவரி எழுதியிருந்தது.

பம்பாயில் இருந்த மணீஷ்குமாரின் சித்தப்பா வேதியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர். இப்பொழுதும் கூட ஏதோ ஆராய்ச்சிதான் செய்து கொண்



டிருந்தார்.

கடிதத்தை அவசரமாகப் பிரித்தான் மணீஷ். பிரித்தவன் திகைத்தான். காரணம் கடிதத்தில் ஒன்றுமே எழுதப்படவில்லை!


"கடிதம் எழுதி விட்டோம் என்று மறதியாக சித்தப்பா இதை அனுப்பியிருப் பாரோ!" என்று நினைத்தான் மணீஷ்.

சித்தப்பா எத்தனையோ நாட்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளைக் கூடச் சரியான தேதியுடன் சொல்லக்கூடியவர். அவர் மறந்துபோய் இப்படி அனுப்புவது சாத்தியமில்லை.

ஒன்றும் புரியாத மணீஷ் கடிதத்தை முன்னும், பின்னும் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அது, வெற்றுக் காகிதமாகத் தான் இருந்தது.

என்ன செய்வது என யோசித்த

பா. அகிலா



"ஒரு நாள் மேட்ச்சுல கண்டிப்பா அந்த அணி ஜெயிச்சிடும்னு சொன்னியே, ஆனா, தோத்துடிச்சே?"

"என்னைக்காவது ஒரு நாள் மேட்ச்சுலே ஜெயிச்சிடுவாங்கன்னுதானே சொன்னேன்!"

– சீர்காழி வி. ரேவதி

மணீஷ், அம்மா அழைக்கும் குரல் கேட்கவே கடிதத்தை அம்மாவிடம் காட்ட எடுத்துச் சென்றான்.

"சித்தப்பாவிற்கே இதைப் பற்றி ஒரு கடிதம் எழுது" என்று அம்மா யோசனை கூற, 'சரி' என்றான் மணீஷ். அதன்பின் அக் கடிதத்தைப் பற்றியே மறந்து விட்டான். அதைத் தனது கணக்கு நோட்டில் வைத்தான்.

அன்று இரவு ஏழு மணி இருக்கும்.

வெளியே மழை பயங்கரமாகக் கொட்டிக் கொண்டிருந்தது.

மணீஷ்குமாரும், சுவாதியும் பள்ளியில் முந்தின நாள் நடத்திய பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தனர்.

"மணீஷ் அண்ணா, நாளைக்குத் தேதி என்ன?"

"2.4.96. ஏன் கேட்கிறே சுவாதி?"

"இரண்டாம் தேதி அறிவியல் தேர்வு.. அதுதான் கேட்டேன்."

"அப்படியா!" என்று மணீஷ் சொல்ல, அதே நேரம் கரண்ட் போய் விட்டது.

"அண்ணா! நான் அறிவியல் பரீட்சைக் குப் படிக்கணும். கரண்ட் போய் விட்டதே? என்ன செய்ய?"

"எனக்கும்கூட நிறையப் படிக்க வேண்டியதிருக்கு சுவாதி. மெழுகுவத்தி வைச்சிப் படிப்போமா?"

"சரிண்ணா!"

மணீஷ் ஒரு மெழுகுவத்தியை எடுத்துப் பற்றவைக்க சுவாதியும் தன் புத்தகத்துடன் அதன் அருகே வந்து அமர்ந்தாள்.

கணக்குப் போடுவதற்காகத் தனது கணக்கு நோட்டை எடுத்தான் மணீஷ். அதன் உள்ளே வைத்திருந்த சித்தப்பா போட்ட கடிதம் கீழே விழுந்தது.

அதை எடுப்பதற்காகக் கையை நீட்டிய சுவாதி தவறுதலாக அங்கிருந்த மெழுகுவத்தியைத் தட்டிவிட, அது கடிதத்தின் மீது விழுந்தது.

அந்தக் கடிதத்தில் தீப்பற்றி விடுமே என்று பதறிய மணீஷ், தீயை அணைக்க முற்பட்டபோதுதான் அதனைக் கவனித்தான்.

இதுவரை ஒன்றுமே எழுதப்படாமல் இருந்த அந்தக் கடிதத்தில் இலேசாக எழுத்துகள் தெரிந்தன.

அதைப் பார்த்து ஆச்சர்யப்பட்ட மணீஷ் அந்தக் கடிதத்தை மெழுகுவத்திச் சுடரில் இலேசாகக் காட்டினான்.

அடுத்த விநாடி,

எழுத்துக்கள் பளிச்சென்று தெரிந்தன. மணீஷ் அதனைப் படித்தான்.

"ஹாய் மணீஷ்! இன்றைக்கு தேதி என்ன தெரியுமா? ஏப்ரல் முதல் நாள்! அது தான் இப்படி ஒரு கடிதம்! இந்த எழுத்துக்கள் சாதாரண மையினால் எழுதப்பட்டவை அல்ல. "கோபால்ட்டஸ் குளோரைடு" என்ற வேதிப் பொருளை மையாகப் பயன்படுத்தி எழுதப்பட்டது. கோபால்ட்டஸ் குளோரைடை" வைத்து எழுதினால் எழுத்துகள் சாதாரணமாகத் தெரியாது. ஆனால் எழுதப்பட்ட காகிதத்தை லேசாக சூடுபடுத்தினால் எழுத்துகள் நன்கு தெரியும். அதுதான் கோபால்ட்டஸ் குளோரைடின் சிறப்பு. மணீஷ், நீ இதைக் கண்டுபிடித்து விட்டால் முட்டாள் அல்ல.

இப்படிக்கு,
என்றும் அன்புடன்,
சித்தப்பா.

கடிதத்தைப் படித்த மணீஷ், "சித்தப்பா நான் முட்டாள் இல்லை!" என்று மனத்தில் மகிழ்ச்சியுடன் கூறியவாறு சித்தப்பாவுக்கு பதில் கடிதம் எழுத ஆயத்தமானான்.

காட்டிலும் அறிவொளி இயக்கம்!

அமைச்சர் புலியார், ஆசிரியர் கரடியாரை யோசனையோடு பார்த்தார்.

''ஜாம்பவான் போன்ற எனது புகழ் பெற்ற முன்னோர்கள் நன்கு கல்வி கற்றவர்கள். சொல்லச் சொல்ல மகாபாரதத்தை எழுதும் அளவுக்கு யானையாரின் முன்னோர்கள் கல்வி பயின்றவர்கள். பாம்புகளின் பேராசராகிய ஆயிரம் நாக்குகள் படைத்த ஆதி சேஷன், வேதங்களைக் கூட அறிந்தவர். அதலால் விலங்குகள் கல்வி அறிவு பெறுவது என்பது புதுமையே அல்ல. யாரோ சிலர் செய்த சதியால், கல்வி கற்கும் பழக்கம் மறைந்து விட்டது. காலம் போகிற போக்கில், நம் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் கல்வியறிவு மிக மிக அவசியமாகி வருகிறது'' என்றார் கரடியார் பணிவுடன்.

''நீங்கள் கூறுவதில் உள்ள உண்மையை நானும் உணர்கிறேன் கரடியாரே. நாட்டில் மனிதர்கள் நடத்துவது போலவே காட்டிலும் எழுத்தறிவு இயக்கம் ஒன்றை நடத்துவது மிக மிக அவசியம் என்று நானும் எண்ணு





இறேன். உங்கள் கருத்து மிக அவசியமான யோசனை. ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, சிங்கராஜாவுக்கு இதில் ஆர்வம் இல்லை. விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் எதற்காகக் கல்வியறிவு தர வேண்டும்? எழுதப் படிக்க அறிவதால் இவைகளுக்கு என்ன பயன்? என்று எதிர்க் கேள்வி கேட்கிறார்!" என்றார் புலியார்.

"சிங்க ராஜாவுக்கு உங்களிடம் அளவில்லாத மதிப்பும், அன்பும் உண்டே? நீங்கள் எது கூறினாலும் தட்டாமல் ஏற்பவர் ஆயிற்றே சிங்கராஜா!"

''உண்மைதான். நான் கூறுவதை மறுக்காமல் ஏற்கக்கூடிய பண்புடையவர்தான் சிங்கராஜா. ஆனால், காட்டில் எழுத்தறிவு இயக்கத்தை நடத்த வேண்டும் என்பதை மட்டும் அவர் ஏனோ பிடிவாதமாக ஏற்க மறுக்கிறார்.

"அமைச்சர் பெருமானே, சிங்க ராஜாவை வழிக்குக் கொண்டு வருவது எப்படி என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று குழைந்தார் கரடியார்.

"சரி சரி! இப்படியெல்லாம் எனக்கு ஐஸ் வைக்க வேண்டிய அவசியமே இல்லை. காட்டு மிருகங்களின் நல்வாழ்வுக்கு எவை அவசியம் என்று தோன்றுகிறதோ அவைகளை எப்பாடு பட்டாவது கண்டிப்பாகச் செய்ய முயல்வேன். நீங்கள் சிறிது பொறுமையாக இருங்கள்'' என்று ஆறுதலளித்த புலியார், "கரடியாரே, நீங்கள் போகும்போது பட்டத்து யானையாரை என்னை வந்து பார்த்து விட்டுப் போகச் சொல்லுங்கள்," என்றார்

இன்னும் இரண்டு நாட்களில்

சிங்கராஜாவுக்குப் பிறந்த நாள். காட்டுக் குடிமக்களின் நலனைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து, நீதி நெறிதவறாது ஆட்சி புரியும் மன்னரின் ஆட்சி என்பதால், இந்தப் பிறந்த நாளை பெரிய திருவிழாவாகக் கொண்டாட பலமான ஏற்பாடுகள் நடந்தன. அதில் முக்கிய நிகழ்ச்சி மன்னரின் ஊர்வலம். அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானையில் சிங்கராஜா பவனி வர இருந்தார். பவனி முடிந்ததும் கோவில்களில் சிறப்புப் பிரார்த்தனை, அன்னதானம். மாலையில் கலை நிகழ்ச்சி எல்லாம் இருந்தன.



பிறந்த நாளுக்கு முன்தினம். சிங்க ராஜாவின் அரசவை கூடியிருந்தது. ஏதோ முக்கிய பிரச்சினையை விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

காவல் படைத் தளபதி குரங்கார் ஓடோடி வந்தார். அவர் முகத்தில் ஓரே கலவரம்.

"என்ன ஆச்சு குரங்காரே?" என்று கேட்டார் புலியார்.

"ஒரு வருந்தத் தக்க செய்தி அமைச்சர் அவர்களே!" என்று தலை குனிந்தார் குரங்கார்.

எல்லோரும் கலங்கிப் போய் குரங்காரைப் பார்த்தனர்.

"தென்கோடிப் புதைகுழியில் இன்று ஒரு விபத்து. நம் முடைய பட்டத்து யானையார் புதை குழியில் விழுந்து விட்டார்!"

"என்ன ஆச்சு? யானையாரைக் காப்பாற்ற முடிந்ததா?" என்று பதைபதைப்புடன் கேட்டார் சிங்கராஜா.

"இல்லை மகாராஜா! மரத்தில் கயிற்றைக் கட்டிப் பிடித்துக் கொள்ளச் சொன்னோம். ஆனால், உடல் கனம் தாங்காது யானையார் புதை குழியில் மூழ்கி விட்டார்!"

"ஐயோ!" என்று வாய் விட்டு அழுதார் சிங்கராஜா. அடுத்த நொடியில் அவர் முகத்தில் கடுமை நிறைந்தது.

"குரங்காரே.. காவல் பொறுப்பு உங்களுடையது தானே? புதைகுழி அபாயத்தை விளக்கி அங்கே அபாய அறிவிப்புப் பலகை ஒன்றை எழுதி வைக்கச் சொன்னேனே? வைத்திருந்தால். பட்டத்து யானைக்கு இந்த முடிவு ஏற்பட்டிருக்காதே?"

"மகராஜா, மன்னிக்க வேண்டும். புதைகுழியின் நான்கு பக்கங்களிலும் அபாய அறிவிப்புப் பலகையே கொட்டை எழுத்தில் எழுதி வைத்திருக்கிறேன்"

"பட்டத்து யானையார் அவைகளைப் பார்க்கத் தவறி விட்டாரா? எச்சரிக்கைப் பலகை இருந்தும் இந்த விபரீதம் எப்படி ஏற்பட்டது?"- சிங்க ராஜாவுக்கு அத்தனை கோபம் வந்து யாருமே பார்த்ததில்லை.

குரங்கார் நடுங்கிப் போனார்.



''காந்தி தாத்தான்னா ரொம்பப் பிடிக்குமா? எப்படிச் சொல்றே?''

''அவர் பிறந்த நாளைக்குத்தானே லீவு விடறாங்க ஸ்கூல்ல?''

– பாசி. கோகுலன்

"மகராஜா, தவறு என் மேல் இல்லை. பட்டத்து யானையாருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அதனால் அவர் புதை குழியில் சிக்கி பலியாகி விட்டார்."

சிங்கராஜா அதிர்ந்து போய் குரங்காரைப் பார்த்தார்.

"மகராஜா, அபாயங்களை விளக்கி எச்சரிக்கைப் பலகையை மட்டும் வைத்தால் போதுமா? அவைகளில் எழுதியிருப்பது என்ன என்பதை அறிந்து கொள்ள எழுதப் படிக்கத் தெரிய வேண்டாமா?"

சிங்கராஜா தலை குனிந்து கலங்கினார்.

வாயிலில் ஏதோ சப்தம் கேட்டது. ஒற்றர் படைத் தளபதி நரியார் தலைவிரி கோலமாக ஓடி வந்தார். எல்லோரும் கவலையுடன் பார்த்தனர்.

''பதினைந்து புள்ளி மான்களையும், இருபது முயல்களையும் வேட்டைக்காரர்கள் சுட்டு விட்டார்கள்"

"வேட்டைக்காரர்கள் தலையைக் கண்டால், மறு அறிவிப்பு வரும்வரை பறவை மிருகங்களை வெளியே தலை காட்டாமல் பதுங்கி இருக்க வேண்டும் என்று அபாய அறிவிப்பை வெளியிடும்படி உங்களுக்கு உத்தரவிட்டிருந்தேன் அல்லவா? ஏன் அதைச் செய்யவில்லை? செய்திருந்தால் இப்படிப் பதினைந்து புள்ளிமான்களையும், இருபது முயல்களையும் பறி கொடுத்திருக்க மாட்டோமே?"

அதிகாரிகளின் அசட்டையால் விலை மதிப்பில்லாத உயிர் பலியாகி விட்டதே!

சிங்கராஜா கண்கலங்கினார்.

"மகராஜா, நீங்கள் நினைப்பதுபோல் ஒற்றர் படை அசட்டையாக இல்லை. வேட்டைக்காரர்களின் தலையைக் கண்ட உடனேயே அபாய அறிவிப்புச் செய்து விட்டோம்.. இருந்தும் அசட்டுத்தனமாகப் பலியாகியுள்ள மான்களும் முயல்களும் எழுதப் படிக்கத் தெரியாதவை."

"போதும் போதும்" என்று தலையைப் பிடித்துக் கொண்ட சிங்கராஜா, "புலியாரே!" என்று கர்ஜித்தார்.

புலியார் பணிவாக எழுந்து நின்றார்.

"எழுதவும் படிக்கவும் தெரிந்திருப்பது மனிதர்களுக்கு மட்டுமே அவசியம் என்று தவறாக எண்ணிவிட்டேன். என் கண்கள் திறந்து விட்டன. எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது நம் காட்டு விலங்குகளுக்கும், பறவைகளுக்கும்கூட மிக அவசியம் என்பதை நம்மை விட்டுப் பிரிந்துவிட்ட பட்டத்து யானையும், மான்களும் முயல்களும் உணர்த்திவிட்டன. எழுத்தறிவு இயக்கத்தைத் தீவிரமாக்க உடனடியாக ஏற்பாடுகள் செய்யுங்கள். சிறந்த முறையில் எழுத்தறிவுத் தொண்டாற்றும் மிருகங்களுக்கு சிறப்புப் பரிசை அறிவியுங்கள். இதுவே நான் என் பிறந்த நாளன்று காட்டு விலங்குகளுக்குத் தரும் பரிசாக இருக்கட்டும்" என்றார் சிங்க ராஜா.

எல்லோரும் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர்.

"மகிழ்ச்சி ஆரவாரம் வேண்டாம். எழுத்தறிவு இயக்கத்துக்கு ஆதரவுதராத என் பிடிவாதத்திற்கு, முப்பத்தி ஆறு உயிர்களை இழந்து தவிக்கிறேனே? இது மகிழ்ச்சியான நிகழ்ச்சியா? என் பிடிவாதத்துக்கு பலியானவைகளின் ஆன்மா அமைதியடைய ஒரு நிமிடம் நின்று மௌன அஞ்சலி செய்வோம்!"

சிங்கராஜா எழுந்து நின்றார்.

''மௌன அஞ்சலிக்கு அவசியமே இல்லை மகாராஜா. கல்லாமையின் விபரீதமானவிளைவையும், எழுத்தறிவு இயக்கத்தின் இன்றியமையாத் தன்மையையும் உங்களை உணர வைக்க வேண்டும் என்பதற்காக நான் ஏற்பாடு செய்த நாடகம்தான் இது. பட்டத்து யானையார் நன்றாகவே இருக்கிறார். வேட்டைக்காரர்களுக்கு ஓர் உயிர்கூடப் பலியாகவில்லை!" என்றார் புலியார்.

''என் ஆட்சியின் பெருமைக்குக் காரணமே உங்கள் தொண்டுதான் புலியாரே!" என்று அரசவை என்றும் பாராமல் அந்த முதிர்ந்த அனுபவ சாலியை கைகூப்பி வணங்கினார் சிங்கராஜா.

மணி ஏழு முப்பத்தைந்து.

பானையில் இருந்த பழைய கஞ்சியை அவசர அவசரமாகத் தூக்குச் சட்டியில் நிரப்பிக் கொண்டான் சுந்தர்.

கால் ஒச்சமான வயது முதிர்ந்த அம்மா நோய் முற்றிக் கிழிந்த பாயில் படுத்திருந்தாள்.

"அடுப்புல சுடுகஞ்சி போட்டிருக்கேன்; பல்லத் தேச்சிட்டுச் சாப்புடும்மா. வேலைக்குப் போயிட்டு வர்றேன்."

ஓட்டமும் நடையுமாகப் பஸ் ஸ்டாப்பை நோக்கி ஓடினான் சுந்தர்.

நல்லவேளை, இன்னும் பஸ் வரவில்லை! 'அப்பாடா' என்று பெரு மூச்சு விட்டான்.

'அடடா! வாசலில் உள்ள செடிக்குத் தண்ணீர் ஊத்த மறந்து போச்சே!' – மின்னலைப் போல் நினைப்பு வர நாக்கைக் கடித்துக் கொண்டான்.

ஆறு மாதங்களுக்கு முன் அந்த ஊருக்கு ஒரு துறவி வந்து இருந்தார். மாரியம்மன் கோவில் திருவிழாவில் அவருடைய சொற்பொழிவைக் கேட்கும்

செந்தமிழ்க்கிழார்

வாய்ப்பு சுந்தருக்குக் கிடைத்தது. எந்த வகை யிலாவது பிறருக்கு உதவி செய்யாவிட்டால் மனி தப் பிறவி எடுத்ததற்கு அர்த்தமே இல்லை என்ற அவரது பேச்சைக் கேட்டுச் சிரிப்புத்தான் வந்தது அவனுக்கு.

சுந்தரின் அம்மாவுக்கு ஒரு கால் ஒச்சமாக இருந்தது. பிச்சை எடுப்பதுதான் அவளது தொழில். விவரம் தெரிகிற நாள் வரையும் சுந் தரும் அதைத்தான் செய்து வந்தான். இருந் தாலும் அடுத்தவர்களிடம் பல்லைக் காட்டி, கெஞ்சிக் கூத்தாடி நிற்பது அவனுக்கென்னவோ அருவருப்பாகத்தான் இருந்தது.

ஒருநாள் தெருக் கடைசியில் இருபது முப்பது சிறுவர்கள் தூக்குச் சட்டியைக் கையில் வைத்துக் கொண்டு மொத்தமாகப் பஸ் ஏறுவதைப் பார்த்தபோது அவனுக்கு ஆச்சர்ய மாய் இருந்தது.

ஒரு பையனிடம், "எல்லாரும் எங்க போறாங்க?" என்று கேட்டான்.

"வேலைக்குத்தான்! ஒரு நாளைக்கு அஞ்சு ரூபா சம்பளம்."

"அஞ்சு ரூபாயா? நான் வந்தாலும் சேத்



துக்குவாங்களா?"

"எங்கூட வாயேன்? மாஸ்டர் பஸ்லதான் ஒக்காந்திருக்கார். அவருகிட்ட சொல்லிப் பாக்குறேன்."

சுந்தருக்கு அப்போதே வேலை கிடைத்து விட்டது.

இரண்டு வருடத்தில் சம்பளம் பத்து ரூபாயாக உயர்ந்து விட்டது. பத்து ரூபாய் அவனுக்கும் அவன் தாயாருக்கும் பாதி வயிறு கஞ்சி குடிக்கப் போதுமானதாக இருந்தது.

எந்த வகையிலாவது பிறருக்கு உதவ வேண்டும் என்று துறவி சொன்னபோது, தன்னால் யாருக்கு எந்த உதவி செய்ய முடியும் என்பதை நினைத்து சுந்தருக்குச் சிரிப்பு வந்தது.

துறவி பெரிய அறிஞர் ஆயிற்றே? காரணம் இல்லாமலா சொல்லுவார்? அவரிடமே கேட்டுப் பார்த்தால் என்ன என்ற துணிவும் கூடவே வந்தது.

சுந்தர் எதையோ கேட்க நினைக்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட துறவி, "என்னப்பா வேணும்?" என்றார் அன்பொழுக.

சுந்தர் தன் கதையை முதலில் சொல்லி முடித்தான்.

"எந்த வகையிலயாவது, யாருக்காவது உதவி செய்யணும்னு சொன்னீங்க. என்னால கூடவா யாருக்காவது உதவி செய்ய முடியும்?"

"நிச்சயமா முடியும்ப்பா. பிறருக்கு உதவி செய்யப் பணம் தேவை இல்லே; மனம் இருந்தால் போதும்."

துறவி, ஒரு வேப்பங்கன்றை அவன் கையில் கொடுத்தார்.

"இத ஒங்க வீட்டு வாசல்ல நட்டு வை. தினமும் இதுக்குக் கொஞ்சம் தண்ணி ஊத்தி வா. இது உன்னால முடியுமில்லே?"

"நிச்சயம் முடியும்."

மகிழ்ச்சியாய் அந்தக் கன்றைக் கையில் வாங்கிக் கொண்டான். துறவிக்கு வணக்கம் செலுத்தி விட்டு வீட்டுக்கு விரைந்தான். வாசலில் ஒரு குழியைத் தோண்டினான். கன்றை அதில் நட்டு வைத்தான். சுற்றிலும் குச்சியை நட்டான். கிழிந்த துணியால் பந்தல் போட்டான். ஒவ்வொரு நாளும் வேலைக்குப் போகும் போது மறக்காமல் தண்ணீர் ஊற்றி விட்டுத்தான் போவான்.

ஆரம்பத்தில், துறவி சொன்னார் என்பதற்காக வேடிக்கையாய்த்தான் செய்ய ஆரம்பித்தான். நாளடைவில் அதுவே அவனுக்குப் பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்தது.

ஆறு மாதத்தில் அவன் நட்ட கன்று ஆள் உயரத்திற்கு வளர்ந்திருந்தது. ஒருநாள் கூட தண்ணீர் ஊற்றாமல் இருந்ததில்லை. இன்றைக்கு மட்டும் அது எப்படி மறந்து போயிற்று?

மனத்தில் வலி ஏற்பட்டது. யோசித்துப் பார்த்தான்; புரிந்து விட்டது.

வேலை பார்க்கும் இடத்தில் நேற்று அவனை அறியாமலேயே சிறு தவறு நடந்து விட்டது. முதலாளி வாயில் வந்தபடி திட்டினார். அதுதான் அவனது மனத்தைப் பாதித்து இருக்கிறது.

வீட்டுக்குப் போய்த் திரும்பி வரும் வரையில் பஸ் நிற்காது. இதுவே லேட். அடுத்த பஸ்ஸில் போனால் வேலைக்கு லேட் ஆகிவிடும். என்ன செய்வது?

யோசித்துக் கொண்டு இருக்கும்போதே பஸ் வந்து விட்டது.

ஸ்டாப்பில் ஒரே கூட்டமாக இருந்தது. பஸ்ஸிலிருந்து இறங்க வேண்டியவர்கள் இறங்குவதற்கு முன்பாகவே முண்டியடித்துக் கொண்டு ஏறினார்கள்.

சுந்தரும் சளைக்கவில்லை.

சிறுவனாக இருந்ததால் கூட்டத்திற்குள் தலையை நுழைத்து, பொந்துக்குள் எலி



நுழைவதைப் போல் நுழைந்து ஏறினான்.

கண்டக்டர் கத்தினார். "ஆளு இறங்கி ணப் பெறகு ஏறுனா என்னய்யா?"

பக்கத்திலிருந்த ஒருவர் சுந்தரை மேலே ஏறவிடாமல் அவன் சட்டையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். சுந்தர் திரும்பிப் பார்க்காமலே அவரது கையை விலக்கி விட்டு வேகமாக ஏறுவதிலேயே குறியாக இருந்தான்.

கண்டக்டர் சுந்தரைப் பிடித்துக் கீழே தள்ளினார். அவன் திமிறிக் கொண்டு, நுழைந்து ஓடிப் போய் காலியாக இருந்த ஒரு சீட்டில் உட்கார்ந்து கொண்டான்.

கூட்டம் முழுவதும் ஏறி முடித்தது. பஸ்ஸில் நின்றவர்கள் மூச்சுப் போகக் கூட இடமில்லாமல் திணறினார்கள்.

சுந்தர் இரண்டு பக்கமும் பார்வையை ஓட விட்டான். வயதான ஒரு பெரியவர் கையில் துணிப்பையை வைத்துக் கொண்டு நிற்க முடியாமல் தள்ளாடினார்.

"தாத்தா, இங்க வாங்க. ஒக்காருங்க."

அவன் அவர் கையில் இருக்கிற துணிப் பையை வாங்கிக் கொண்டு எழுந்து இடம் கொடுத்தான்.


இந்தக் காட்சியைக் கண்ட கண்டக்டர் அப்படியே உருகிப் போய்விட்டார். அவனைத் திட்டிய தனது அறியாமைக்காக வெட்கிப் போனார்.

பஸ் சீறிக் கொண்டு புறப்பட்டது.

சுந்தருக்கு மனது நிறைவாக இருந்தது.

செடிக்குத் தண்ணீர் ஊற்றாமல் வந்த பாவத்திற்குக் கைமாறாக, ஒரு பெரியவருக்கு உட்கார இடம்பிடித்துக் கொடுத்து விட்டோம் என்ற எண்ணம் மகிழ்ச்சியாகவே இருந்தது.

ஸ்டாப் வந்ததும் பஸ்ஸை விட்டு இறங்கினான். கண்டக்டர் அவனைப் பெருமையாகப் பார்த்தார். அதைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை. அந்தத் துறவிதான் அவனுக்கு நினைவில் வந்தார்.



சாலை ஓரத்தில் ஒரு பிச்சைக்காரன் சுருண்டு கிடந்தான். பாவம், சாப்பிட்டு எத்தனை நாளாயிற்றோ?

இரக்கப்பட்டான் அவன்.

'பெரியவருக்கு இடம் பிடித்துக் கொடுத்ததால் மனம் திருப்தி அடைந்தது என்னவோ உண்மைதான்! இதனால் செடிக்குப் பசி நீங்கி விடுமா?'


யோசித்தான் ஒருகணம்.

தூக்குச் சட்டியில் இருந்த பழைய கஞ்சியை அப்படியே பிச்சைக்காரன் பாத்திரத்தில் கொட்டினான்.

'செடி பட்டினி கிடப்பதைப் போலவே இன்று நானும் பட்டினியாய் வேலை செய்வதுதான் நியாயம். அப்போதுதான் இதே தவறை மறுபடி செய்ய மாட்டேன்!'

உற்சாகமாய் வேலைக்கு விரைந்தான் சுந்தர்.

ராஜாவால் ஆபத்து!



விசித்திரபுரம் என்ற ஊரில் நூறு வேலிக்கும் அதிகமான நல்ல விளைச்சல் நிலம் இருந்தது. வயல்களைச் சுற்றி ஆயிரக் கணக்கான எலிகள் வசித்து வந்தன. எலிகளுக்குள் ஒரு அரச எலியும் இருந்தது.

ஒருமுறை எலி ர்ராஜாவை நாய் ஒன்று வேகமாக வயல் வரப்பில் துரத்தியது. ஒரு நிலையில் எலி ராஜா தொடர்ந்து ஓடாமல் நின்று, நாயைப் பார்த்து முறைத்தது. இதைச் சற்றும் எதிர்பார்க்காத நாய், திடுக்கிட்டு நின்றது. பிறகு மேலும் துரத்தாமல் வந்த வழியே திரும்பி ஓடிவிட்டது. மற்ற எலிகள், நாயைக் கண்டு அஞ்சாமல் துணிந்து நின்ற எலிராஜாவைப் பாராட்டி சபையைக் கூட்டி "நாயை விரட்டிய நல்ல ரசன்" என்ற பட்டத்தையும் அளித்தன.

உண்மையில், எலிராஜா நாயை துணிவுடன் முறைத்துப் பார்க்கவில்லை முன்னுக்கு ஓடியபோது ஒரு இடத்தி மாட்டுச் சாணம் இருந்தது. தெரியாமல் அந்த இடத்திற்கு அரச எலி தாவி விட்டது. அதனால் ஏற்பட்ட அருவருப்பில் வெறுப்புற்று, தன்னை நாய் கவனித்து விட்டதோ எனத் திரும்பி பார்த்தது ஆனால் அது அப்படிப் பார்த்ததை, மற்ற எலிகள் வீரத்தின் எடுத்துக்காட்டா நினைத்தன! போற்றிப் புகழ்ந்தன! அ எலி ராஜா தனக்குச் சாதகமாக எடுத்து கொண்டு மனத்திற்குள் சிரித்துக் கொண்டது.

அந்த எலி ராஜ்யத்தில் சட்டதிட்டங்கள் அதிகம். எலிகள் சேகரித்து வரும் உணவு வகையில் இருபது சதவிகிதத்தை அரசனுக்குத் தந்துவிட வேண்டும். மேலும் நெல்லுடன் கோதுமை சோளம் பயறு துவரை பட்சணங்கள் மளிகை சாமான்கள் பல வகை துணி மணிகள் பொருட்களையும் தனித்தனியாகச் சேகரித்து அரச கஜானாவுக்கு கொண்டு வந்து சேர்க்க தனித் தனி எலிப் படைகள் நியமிக்கப்பட்டிருந்

ராஜிராதா



தன. அதோடு எந்நேரமும் அரச எலியைக் காக்க என்று தற்கொலை எலிப் படையும் உண்டு.

எலிகளுக்குள் திருமணம் நடக்கும் போது மணப் பெண்ணும் பிள்ளையும் எலி ராஜாவின் பாதங்களைக் கழுவி விட வேண்டும். பாத பூஜை பண்ண வேண்டும்! இந்தச் சட்டம் பல எலிகளுக்குப் பிடிக்கவில்லையென்றாலும்... நாயையே எதிர்த்த மாவீரனாயிற்றே என அதை எதிர்த்துச் செயல்படத் துணிவில்லாமல் மனத்திற்குள் புழுங்கியபடி வாழ்ந்து வந்தன!


ஒரு சமயம் அந்த வயல்வெளிப் பக்கம் எதேச்சையாக வந்த பூனை யொன்று எலிகளின் நடமாட்டத்தைக் கவனித்து விட்டது. உடனே இரண்டு எலி களைப் பிடித்துத் தின்று விட்டது! பிறகு அடிக்கடி வர ஆரம்பித்தது. இந்த விஷ யம் எலி ராஜாவின் கவனத்துக்கு வந்தது. உடனே பூனையைத் தீர்த்துக் கட்ட தற் கொலைப் படைக்கு உத்தரவிட்டது.

பூனை அடுத்த முறை வயலுக்கு வந்த போது, ஒரு தற்கொலைப்படைஎலி வேண்டுமென்றே அதன் எதிரில் அதற்குப் போக்குக் காட்டி ஓடியது. பூனை அதைத் துரத்தியது. மறு நிமிடம், நூற்றுக்கணக் கான தற்கொலைப்படைஎலிகள், பூனை யைச் சூழ்ந்து கொண்டு சுற்றி வந்தன. கடிக்கத் துவங்கின. கதிகலங்கிப் போன பூனை, உயிர் பிழைத்தால் போதும் என்று ஓடியே போய் விட்டது! அதற்குப் பிறகு பூனை அந்தப் பக்கமே தலைகாட்ட வில்லை!

அந்த வயலில் ஒரு பாம்பும் வசித்து வந்தது. அதுவும் கூட தினமும் இந்த எலிகளைப் பிடித்துத் தின்று வந்தது. எலிராஜா தன் மந்திரியை அழைத்து இதுகுறித்து ஆலோசித்தது. முடிவில் மனிதர்கள் நடமாடும் வேளையில், மனிதர்களைக் கொண்டே அந்தப் பொல் லாத பாம்பைச் சாகடிப்பது என முடிவு செய்யப்பட்டது.

விரைவிலேயே அந்த வாய்ப்புக் கிடைத்தது. நிலத்தைப் பார்வையிட முதலாளி சில ஆட்களுடன் வந்தார். பாம்பைக் கொல்வதற்கு என்று அழைக் கப்பட்ட தற்கொலைப் படை எலிக் குழு உடனே செயலில் இறங்கியது. வேண்டு மென்றே சில எலிகள் பாம்பு வளைக்குள் சென்று எட்டிப் பார்த்தன. உள்ளே ஓய் வெடுத்துக் கொண்டிருந்த பாம்பை அது உசுப்பி விட்டது. அது உடனே சீறிக்






''ஒரே ஒரு பழம் தாண்டா தின்னேன்... அப்படியும் வயிறு ரொம்ப வலிக்குதுடா...''

''என்ன பழம் தின்னே?''

''பழாப்பழம் தான்.''

—நெற்குப்பை கி. மனோகரன்

●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●




''எங்க அப்பா—அம்மா என்னை அஹிம்சை முறையில் ஹிம்சை பண்றாங்கடா!''

''எப்படி?''

''தயவு செய்து படிடா கண்ணான்னு என் கையைப் பிடிச்சு கெஞ்சறாங்களே!''

— சீர்காழி வி. ரேவதி

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



''நெற்றியில் விபூதி பூசியிருக்காரே அவர் கையில் என்ன புத்தகம் வச்சிப் படிக்கறார்?''

''குங்குமம்!''

—பொறையாறு கணேசன்

கொண்டே வெளியே வந்து துரத்திக் கொண்டு ஓடியது. முதலாளியுடன் வந்தவர்கள் அதைப் பார்த்து விட்டனர். ''பாம்பு... பாம்பு'' என அவர்கள் கத்த, மறுவிநாடி ஆட்கள் கைகளில் இருந்த தடிகளினால் பாம்பை அடித்துக் கொன்று விட்டனர்!

எலி ராஜா சுகவாசி. மற்ற எலிகள் அளிக்கும் உணவை அது தின்னும். உணவுக்காக அலையாமலும் உடற்பயிற்சி செய்யாமலும் இருந்து வந்ததால் நாளடைவில் அது கொழுத்து விட்டது!

குண்டாகிப் போன எலி ராஜா ஒரு நரியின் கண்ணில் பட்டு விட்டார். அதனால் அடிக்கடி நரியார் எலி ராஜாவைத் தேடி வருகை தந்து, அவர் அகப்படாததால் கிடைத்த எலிகளைக் கொண்டு போக ஆரம்பித்தார்.

கொழுத்து விட்ட எலி ராஜாவால் மற்ற எலிகளுக்கு ஆபத்து என்பதை உணர்ந்து கொண்ட மந்திரி எலியார், உடலைக் குறைக்க உடற்பயிற்சி செய்யும்படி ராஜாவைக் கேட்டுப் பார்த்தார். எலி ராஜா கேட்கவில்லை. அதன் உடம்பு இன்னும் பெருத்துக் கொண்டே போனது.


''ராஜாவே, நீங்கள் இப்படிக் குண்டாகிக் கொண்டே போனால், உங்களுக்கு மட்டும் அது ஆபத்து இல்லை. எலி இராஜ்ஜியத்துக்கே ஆபத்து'' என்றது அமைச்சர் எலி.

எலி ராஜா கேட்கவில்லை.

வயல்வெளியை ஒட்டி இருந்த முதல் வீட்டில் ஒரு நாய் வளர்க்கப்படுவதை மந்திரி எலி அறிந்திருந்தது. அந்த நாயை அரச எலி வயல் வரப்பில், உள்ள கிணற்றிற்கு நீர்குடிக்க வரும்போது ரகசியமாய் அழைத்து வரத் தன்னிடம் விசுவாசமாய் உள்ள எலியிடம் உத்தரவிட்டது.

அதன்படி அரச எலி வயல் வரப்புக் கிணற்றிற்கு நீர் குடிக்க வந்த போது, இரண்டு எலிகள் நாய்க்கு முன்பாக ஓடி ஆடி, அதை அரச எலி இருந்த இடத்திற்கு அழைத்து வந்தன. நாய், குண்டாகிப் பருத்துக் கிடந்த அரச எலியைப் பார்த்து விட்டது. சும்மா விடுமா? துரத்த ஆரம்பித்தது. எலி ராஜாவின் கதை அங்கேயே முடிந்தது!

திக்... திக்... திக்... கதைகள்! பயமின்றிப் படியுங்கள்!



கொள்ளிவாயன் கோரிக்கை!

குளிர்காற்று, உடலைத் தழுவி, எலும்புக் குருத்து வரை நடுங்க வைத்தது. கருத்த மேகக் கூட்டங்கள் வானில் பறந்தன. எங்கேயோ நரி ஒன்று ஊளையிட்டு சூழ்நிலையின் பயங்கரத்தை அதிகப் படுத்தியது. இரண்டொரு கனத்த மழைத்துளிகள் உடலில் பட்டன.

"என்ன அண்ணா, இப்படி இந்த அத்வானத்தில் கொண்டு வந்து நிக்க வைச்சுட்டே! மனிதப் பூண்டே இல்லாத வனாந்திரம் மாதிரி என்ன இருக்கு?" என்று குரல் நடுங்கக் கூறினாள் மஞ்சு.

"எனக்கு மட்டும் இப்படியாகும்னு ஜோசியமா தெரியும் மஞ்சு? இந்த ஹீரோ ஹோண்டா இதுவரை இருபத்திரண்டாயிரம் கிலோமீட்டர் ஜம்முனு ஓடியிருக்கு. இதை நடுரோட்டில் வைத்து இந்த மாதிரி நான் நின்றதே கிடையாது," என்று அழாத குறையாகக் கெஞ்சினான் முருகு.

"நானும் என்னமாவது உதவி பண்ணட்டுமா அண்ணா? இது கைவிட வேண்டிய கேஸ் என்றால், பெரிய இத்தாப்பு எல்லாம் பார்க்காதே. வண்டியை ஓரம் கட்டிவிட்டு நடக்க ஆரம்பிப்போம். அரைமணி நடந்தால் ஏதாவது சாலையோர கிராமம் வராமல் போகாது"

முருகு பதிலளிக்காமல் மாற்றி மாற்றி என்னவோ வண்டியைக் குடைந்து கொண்டே இருந்தான். பத்து நிமிடங்கள் ஓடின.

"இனிமேல் இதோடு மல்லாட முடியாது மஞ்சு. வா நடக்கலாம்" என்று எழுந்த முருகு வண்டியை ஓரமாக இழுத்து ஒரு மரத்தடியில் நிறுத்தினான். அண்ணனும் தங்கையும் அந்த ஆள் அரவமற்ற பாதையில் வேகமாக நடை போட்டனர்.

அடிக்கடி விட்டு விட்டுத் தூறல் போட்டது. மணல் காற்று சுள்ளென்று முகத்தில் அடித்தது.

"ஏதாவது குடிசை கண்ணில் தெரியும் வரை மழை வலுக்காமல் இருந்தால் நல்லது" என்றான் முருகு.

"அம்மா கிளம்பும்போதே சொன்னாள். அது ஆள் அரவம் இல்லாத அத்வானம். நரியும் பாம்பும்தான் ஓடும். மனித வாடையே இருக்காது. இத்தனை நேரத்திற்குமேல் இப்படிக் கிளம்புவது

சின்னபாபு

புத்திசாலித்தனம் அல்ல. காலையில் வேலுவையும் அனுப்பறேன். மூன்று பேருமே காரை எடுத்துக் கொண்டு போய் விட்டுத் திரும்பலாம். வேலுவுக்கு அந்த இடமெல்லாம் நல்லா பழகிப் போனது. வழிகாட்டுவான். சீக்கிரம் திரும்பி விடலாம்னு அம்மா படிச்சுப் படிச்சுச் சொன்னாங்க. நீதான் கேட்காம, பெரிசா வீம்பு பிடிச்சுக் கூட்டிக் கிட்டு வந்தே!" – மஞ்சு கிட்டத்தட்ட அழக்கூடிய நிலைக்கு வந்துவிட்டாள்.

முருகு, பதில் பேசாமல் நடந்தான். பேசினால் இன்னும் வாக்குவாதம் வளர லாம் என்பதுதான் காரணம். புழுதியும், ஈரப்பதமும் நிறைந்த எதிர்க் காற்றில் நடப்பது பெரிய காரியமாகத்தான் இருந் தது.

காலையிலேயே இது பற்றி அம்மா வுக்கும் அப்பாவுக்கும் வாக்குவாதம் எழுந் தது!

"தொழிற்சாலை ஆரம்பிக்க நிலம் வாங்க இந்தப் பொட்டல் காடுதானா கிடைச்சது? தோண்டின இடமெல்லாம் எலும்புக்கூடுதான் கிடைக்கிறதாம்! அந்த இடத்துக்குப் பெயரே கொள்ளி வாயன் காடாம்! ராத்திரி ஆச்சுன்னா கொள்ளிவாய்ப் பிசாசுக் கூட்டம்! கூடிக்கூடி ஆடுமாம்! இருட்டினால் அந்தப் பக்கமே யாரும் போக மாட்டாங் களாம். மீறிப் போனா, அடிச்சுப் போட்டு டுமாம்! கதை கதையா ஊர்க்காரங்க சொல்லுறாங்க. அந்த ஆபத்தான இடத்திலாபோய் தொழிற்சாலை கட்ட நிலம் வாங்கியிருக்கேங்கன்னு ஊர்க் காரங்க பரிதாபமா கேக்கறாங்க!" என்று அம்மா காலையில் அப்பாவிடம் முறை யிட்டது மஞ்சுவின் நினைவுக்கு வந்தது.

"கொள்ளியாவது பிசாசாவது! நாம்ப வாழறது கம்ப்யூட்டர் யுகம். வேண்டா தவன் எவனாவது கதை கட்டி விட்டிருப் பான். அதையெல்லாம் கேட்டா எங்கே யுமே நிலம் வாங்க முடியாது" என்றார் அப்பா.

"நான் சொன்னபடி எதுதான் இந்த வீட்டில் நடக்கிறது?" என்று அலுத்துக் கொண்டாள் அம்மா.

முருகுவும் மஞ்சுவும் பெங்களூரில் மாமா வீட்டில் தங்கிப் படித்து வந்தார் கள். அப்பா அம்மா சென்னையில். அப்பாவுக்குத் தொழில் மூளை. தொழிற் சாலை அமைக்க இடம் தேடினார்.

அறந்தாங்கி தாண்டி, பொட்டல் காட்டில் "கொள்ளிச் சாவடி" என்று மிக வும் பின்தங்கிய ஊர். பஸ்ஸைக் கூடக் கண்ணால் காணாத மக்கள். அப்பா அந்த இடத்தைத் தேர்வு செய்தபோதே அம்மா தடுத்தாள்." கொள்ளிச் சாவடி என்ற பெயரே அச்சானியமா இருக்கே! வேண்டாம்'' என்று முட்டுக்கட்டை போட்டாள். அப்பா கேட்கவில்லை.

சனி, ஞாயிறு விடுமுறையில் வந்த



முருகுவும் மஞ்சுவும் அப்பா தேர்வு செய்த இடத்தைப் பார்க்க விரும்பினர். அப்பா டெல்லி போயிருந்தார். அதனால் அம்மாவை அவர்கள் அழைத்தனர்.

“இன்னொரு தடவை நான் அங்கே வரவே மாட்டேன். கொள்ளிவாய்ப் பிசாசு வாழும் கொள்ளிக் காடாம் அது. நீங்க ரெண்டு பேரும் அதைப் பார்த்து என்ன பண்ணப் போறீங்க? போக வேண்டாம்" என்று அம்மா தடுத்தாள்.

முருகு கேட்கவில்லை. “அடுத்த மாதம் தேர்வு ஆரம்பம். மறுபடி ஊருக்கு வர இன்னும் இரண்டு மாதம் ஆகும். அப்பா அதற்குள் கட்டட வேலையை ஆரம்பித்து விடுவார். அது இப்ப எப்படி இருக்குன்னு நான் பார்க்கணும்," என்று பிடிவாதமாகக் கிளம்பி விட்டான். அதனால் மஞ்சுவும் கிளம்பி வந்தாள்.

துரைமேடு என்று ஓர் இடம். அங்கே வந்ததும் மோட்டார் சைக்கிளை நிறுத்தி, முருகு வழியை விசாரித்தான்.

''கொள்ளிவாயன் காடா!'' என்று அதிர்ந்து போய்க் கேட்ட ஒரு கட்டை வண்டிக்காரன், “தம்பி, இதுதான் வழி. ஆனா, இருட்டின பிறகு நீங்க அந்த வழியாப் போறது சரியில்லை. ஐயனார் சாமி




யின் கொள்ளிவாயன் என்ற பிசாசு தன் பரிவாரத்தோட சுத்தற இடம் அது தாங்க! இருட்டிப் போச்சு. இப்ப அங்கே போகிறது புத்திசாலித்தனம் இல்லே. காலையில வெளிச்சத்துல வேணுமினா போங்க" என்று தடுத்தான்.

அதை அலட்சியம் செய்துவிட்டு முருகு மஞ்சுவுடன் கிளம்பி விட்டான். வழி தப்பி விட்டது. விசாரிக்கக்கூட ஆள் இல்லை!

'தொப்பென்று' வேணியின்மேல் என்னவோ வந்து விழ, அவன் 'வீல்' என்று அலறினான். மின்னல் வெளிச்சத்தில் அது பெரிய எலி என்பது தெரிந்தது.

"ஆந்தை ஏதாவது கொத்தித் தூக்கிக் கிட்டுப் பறந்து வந்திருக்கும். அது தவறிப் போய் விழுந்திருக்கும்" என்றான் முருகு.



"சென்னையில் மூக்கு மேல விரலை வைக்கிற மாதிரி இடம் ஒண்ணு சொல்லு!"
"கூவம்!"
-கானா.கணேசன், பொறையாறு

மின்னல் வெளிச்சத்தில் கண்ணுக்கு எட்டியவரை மொட்டையாக நின்ற கருவேல மரங்கள் தெரிந்தன. கனத்த மழைத் துளி போட்டுக் கொண்டே இருந்தது.

"தம்பி, வலது கைப்பக்கம் ஓர் இடிந்த கால்வாய் பாலம் வரும். அதன் கரையில் ஒரு இரும்பு சூலம் நட்டு வைத்திருக்கும். அதுதான் எல்லை. கொள்ளிவாயன் காடு" என்று கட்டை வண்டிக்காரன் அடையாளம் சொன்னதை முருகு நினைத்துக் கொண்டான்.

மின்னல் வெளிச்சத்தில் சற்றுத் தொலைவில் இடிந்த கால்வாய்ப் பாலமும், சூலமும் தெரிந்தன.

"மஞ்சு, கொள்ளிவாயன் காட்டுக்கு வந்து விட்டோம். அதோ பாரு இடிந்த கால்வாய்ப் பாலம். சூலம்!" என்று மகிழ்ந்தான் முருகு.

திடீரென்று சாம்பிராணி மணம் சுற்றுப்புறத்தையே மணக்க வைத்தது. 'கலகல' வென்று சலங்கைகள் ஒலிக்கும் ஓசை! தொடர்ந்து "ஹஹ்ஹஹ்ஹா!" என்ற பேய்ச் சிரிப்புக் கேட்டது!

மஞ்சுவுக்கு உடலெல்லாம் நடுங்கியது. முருகுவின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.

சூலம் இருந்த இடத்திற்குப் பின்னால் ஒரு சவுக்குத் தோப்பு இருந்ததைக் காண முடிந்தது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே சவுக்குத்தோப்பின் பின்னால் இருந்து அரைப்பனை மர உயரத்திற்கு ஒரு கரிய உருவம் வெளியே வந்தது. அதன் வாயிலிருந்து "குப் குப்" வென்று அனல் பிழம்பு வெளியில் வந்து கொண்டிருந்தது!

அனல் பிழம்பின் ஒளியில் அந்த முகத்தின் பயங்கரம் நன்கு தெரிந்தது. முறம் போன்ற காதுகள்! பிதுங்கிய கண்கள்! முறுக்கு மீசை! கோரைப் பற்கள்! சிவந்த முகம்!

தலையை ஆட்டி ஆட்டி அந்த பயங்கர உருவம் கோரமாகச் சிரித்தது! அனல் பிழம்பைக் கக்கியது!

"அண்ணா! இது கண்டிப்பா கொள்ளி வாய்ப் பிசாசுதான். நாம போயிடுவோம்" என்று நடுங்கிய குரலில் சொன்னாள் மஞ்சு.

சிரிப்புக் குரல் அட்டகாசமாகக் கேட்டது.

"போங்க போங்க. இது என் ராஜ்ஜியம். தொழிற்சாலை கட்டறதுன்னா அலுங்காபுரத்தில கட்டச் சொல்லு. மீறி இங்க கட்டினா, எல்லாத்தையும் எரிச்சுப் புடுவேன். போங்க போங்க! உயிர் தப்பிச்சுப் போங்க"!

கொள்ளிவாய்ப் பிசாசு சவுக்குத்தோப்புக்குள் மறைந்து போனது!

பயத்தில் மஞ்சு உறைந்து போகும் நிலை! அவளை ஆசுவாசப் படுத்தி தண்ணீர் தெளித்து எழுப்பினான் முருகு.

அடுத்தநாள் காலை முருகு மஞ்சுவுடன் அலுங்காபுரத்தில் இருந்தான். கொள்ளிவாயன் காட்டில் தொழிற்சாலை ஆரம்பிக்க உள்ளவரின் பிள்ளைகள் என்பது தெரிந்ததும் ஊர் மக்கள் பலமாக வரவேற்றனர்.

"எங்க ஊர்லயே தொழிற்சாலையை ஆரம்பிக்கலாமே? உங்க அப்பாகிட்டேச் சொல்லுங்க" என்று இளநீரை வெட்டித் தந்த முண்டாசுக்காரனை முருகு கூர்ந்து கவனித்தான்.

ஸ்டிராவைப் போட வந்த கடுக்கன் அணிந்தவரையும் மாது கூர்ந்து கவனித்தான். இருவரையும் தனியே அழைச்சிக்கிட்டுப் போனான். மஞ்சுவும் கூடவே வந்தாள்.

"ஐயா, மூன்றாவது ஆள் எங்கேங்க? இரண்டு பேர்தானே வந்திருக்கீங்க?"

இருவர் முகத்திலும் கலவரம்; பீதி; குழப்பம்; பயம்! மஞ்சுவுக்கும்கூட ஒன்றும் புரியவில்லை.

"நேற்று இரவு அரைப்பனை உயரம் நின்னு, பயங்கரச் சிரிப்புச் சிரிச்சு அனல் பிழம்பு கக்கினாரே கொள்ளிவாயன், அது இவங்க கூட்டுத் தயாரிப்புதான்! ஒருத்தர் தோள் மேல ஒருத்தர் உட்கார்ந்து, கருப்புத் துணி போர்த்தி உயரமாகக் காட்டி நம்மை புத்திசாலித்தனமா பயப்படுத்தினவங்க இவங்கதான். மண்ணெண்ணையை வாயில் விட்டு, சிகரெட் லைட்டரை ஏத்தி, அதில் மண்ணெண்ணெய்யைக் கொப்பளித்து அனல் பிழம்பைக் கக்கினதும் இவங்கதான். பேய்ச் சிரிப்பு இவங்களோட டேப் ரிகார்டர்" என்றான் முருகு.

"இதை எப்படிக் கண்டுபிடிச்சேண்ணா?

"இடிந்த பாலத்துக்குக் கிழே, மூன்று ஜோடி செருப்பு இருந்தது. எங்கிட்ட இருந்த ஸ்டிக்கரை அதில் ஒட்டி வைச்சேன். மண்ணெண்ணெய் நெடியைக் கண்டுபிடிச்சுடப் போறோமேன்னு தான் இவங்க முதல்லயே சாம்பிராணி போட்டாங்க. அதையும் மீறி மண்ணெண்ணெய் நெடி இவங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டது!"

"இதனால் இவங்களுக்கு என்ன இலாபம் அண்ணா? ஏன் இப்படிச் செஞ்சாங்க?

"தங்கள் ஊருக்குத் தொழிற்சாலை வந்தால் உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்புப் பெருகுமே?"

"தம்பி எங்களை மன்னிச்சிடுங்க. ஊர் நன்மைக்காக இப்படி நடிச்சோம்" என்று தலைப்பாகையும், கடுக்கனும் கைகூப்பினர்!



ஆட்டுக்குட்டி

பட்டுப் போல ஆட்டுக் குட்டி
புல்லை மேயும் பல்லா கெட்டி!
கட்டும் கழுத்து மணியோ பாடும்
காது மெல்ல அசைந்தே யாடும்!

கொட்டும் புல்லைத் தின்னும் குட்டி!
குறும்பு செய்யாது என்னை
முட்டி
தட்டிக் கொடுப்பேன் அதுவோ சுட்டி!
தன்தாய் குரலும் வெல்லக் கட்டி!

கண்ணாடிக் கண் அழகு பாரும்!
காதோ நீண்டு கழுத்தைச் சேரும்
கண்ணாய்க் காப்பேன்
தோளில் எடுத்து!
கருத்தாய் வளர்ப்பேன் தீனி
கொடுத்து

தேன்வண் ணத்தில் தெரியும் கண்ணே!
சின்ன ஆட்டுக் குட்டி அண்ணே!
நான்கொஞ் சிடுவேன் ஆட்டுக்குட்டி!
நான் காத்திடுவேன்
புல்லைக் கொட்டி!

-மின்னூர் சீனிவாசன்

எங்கள் ஊரில் நடந்தது!



யார் போட்ட முட்டை?

எங்கள் பள்ளியில் ஒருநாள் மதியம் நானும் எனது தோழிகளும் பேசிக் கொண்டிருந்தோம். எங்களது பேச்சு சத்துணவில் போடும் முட்டைக்கு மாறியது. சத்துணவில் முட்டை போடும் முறையை யார் முதலில் கொண்டு வந்தது என்ற கேள்வி எங்களிடம் எழுந்தது. "கலைஞர்தான் முதலில் முட்டை போட்டார்" என்று என் தோழிகளில் ஒருத்தி சொன்னாள். மற்றொருவள் "இல்லை, இல்லை. காமராஜர்தான் முதலில் முட்டை போட்டார்" என்று மற்றொரு தோழி மறுத்துச் சொன்னாள். இன்னொருத்தி, "இல்லை, இல்லை" ஜெயலலிதாதான் முட்டை போட்டார்" என்றாள். இதைக்




கேட்டுக் கொண்டே வந்த தோழிகளில் ஒருத்தி, "இவர்களில் யாருமே முட்டை போடவில்லை. ஏன் சண்டை போடறீங்க? கோழிதான் முட்டை போட்டது" என்றாளே பார்க்கலாம். எங்களுக்குச் சிரிப்பு அடங்கவில்லை.

கும்பகோணம், பி. அபிராமி.

5கி.மீ. சொந்தம்!

நானும் என் தம்பியும் என் நண்பன் வீட்டிற்குச் சென்றிருந்தோம். என் நண்பன்



ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தான். அவர், போனதும் "யார் அவர்?" என்று நண்பனிடம் கேட்க, அவனோ "தூரத்துச் சொந்தம்" என்றான். ஒருநாள் நண்பன் எங்கள் வீட்டிற்கு வந்தான். அப்

போது எங்கள் வீட்டிற்கு ஒரு விருந்தாளி வந்திருந்தார். என் தம்பியிடம் "யாரது வந்திருப்பது? என்று என் நண்பன் விசாரித்தான். "இவர் எங்களுக்கு ஐந்து கி.மீட்டர் சொந்தம்" என்றான் என் தம்பி! என் நண்பன் விழித்தான். உடனே என் தம்பி, "இவர், உங்க விருந்தாளி மாதிரி எங்களுக்கு தூரத்து சொந்தம் இல்லை. இங்கிருந்து ஐந்து கி.மீ. தூரத்தில்தான் இருக்கிறார்" என்றானே பார்க்கலாம். எல்லோரும் சிரித்து விட்டோம்.

சித்தம்பூண்டி, பாசி.கோகுலன்.

இரண்டு நாள் ஆகுமா?


எங்கள் ஆசிரியர் மிகவும் கலகலப்பானவர். ஒரு நாள் பாடம் நடத்தும் பொழுது நிறையத் தலை முடி உள்ள ஒரு மாணவனைப் பார்த்து "முடி வெட்டவில்லையா?" என்று கேட்டார். அதற்கு அந்த மாணவன் "சனி ஞாயிறு வெட்டிக்கப் போறேன் சார்" என்று சொன்னான். அதற்கு ஆசிரியர், "உன் முடியை வெட்ட இரண்டு நாள் ஆகுமா?" என்று கேட்டு விட்டு, உடனேயே "ஆகும், ஆகும், மூணு நாள் கூட ஆகும்" என்றார். வகுப்பறையே சிரிப்பில் மூழ்கியது.



வீரபாண்டி, எம். தங்கப்பாண்டி.

எனது பஸ்

பயணம் செய்வதற்காக பஸ்ஸில் ஏறி அமர்ந்தேன். இன்னும் பஸ் கிளம்பவில்லை. சில நிமிடம் ஆகும் என்றார்கள்.



அதற்குள் 'டீ' சாப்பிட்டுவர இறங்கினேன். என் இடத்தை யாராவது பிடித்து விடாமல் இருக்க சீட்டில் கர்ச்சீப்பைப் போட்டுச் சென்றேன். திரும்பி வந்து பார்த்தால் எனது இருக்கையில் யாரோ ஒருவர் அமர்ந்திருந்தார். அவரிடம் நான் கர்ச்சீப் போட்டதைச் சொல்லி அவரை எழுந்திருக்கச் சொன்னேன். அவர் எழுந்து விட்டார். அங்கு வந்த கண்டக்டர் "கர்ச்சீப்பை சீட்டில்போட்டுவிட்டு உங்கள் இடம் என்கிறீர்கள்! நல்லவேளை பஸ் மேல் கர்ச்சீப்பைப் போட்டுவிட்டு, என்னுடைய பஸ் என்று சொல்லாமல் விட்டீர்களே!" என்றார். பஸ்ஸில் இருந்த எல்லோரும் சிரித்தனர்.

வந்தவாசி, பா.ஜெயக்குமார்.

பொருளாதார மகன்!

பள்ளியில் பொருளியல் பாடவேளை. பொருளியல் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மாணவர்களைப் பார்த்து, " 'பொருளாதாரத்தின்' தந்தை என்று ஆடம் ஸ்மித் ஏன் அழைக்கப்படுகிறார்?" என்று கேட்டார் ஆசிரியர்.




பாலாஜி என்ற குறும்பு மாணவன் எழுந்து "ஆடம்ஸ்மித்துக்கு பொருளாதாரம்" என்ற மகன் இருந்திருப்பான் சார். அதனால்தான் அவர் பொருளாதாரத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்" என்றான். வகுப்பறையில் உள்ள அனைவரும் ஆசிரியர் உட்பட சிரிப்புக் கடலில் நீந்தினோம்.

சோழன் மாளிகை, கோ. ஆனந்தன்.

எந்தத் தம்பி?

ஆங்கில ஆசிரியர் அவசர அவசரமாக வந்து, "என்ன, தேர்வுக்குத் தயாரா? என்று கேட்டு, கேள்விகளைக் கொடுத்தார். தேர்வு வைக்கப் போவதாக அவர் முன்னதாகவே,




அதாவது வெள்ளிக் கிழமை அன்றே சொன்னார். நாங்கள் தேர்வை எழுத ஆரம்பித்தோம். படிக்காத காரணத்தால் சிலரால் கேள்விகளுக்கு பதில் எழுத முடியவில்லை. அதைக் கவனித்து விட்ட ஆசிரியர், "இரண்டு நாட்கள் விடுமுறை இருந்தது. நீங்களோ படிக்காமல் டி.வி.யில் (அன்று ஞாயிற்றுக் கிழமை சின்னதம்பி படம்) அந்தத் தம்பி இந்தத் தம்பி என்று பார்த்தீர்களா?" என்று கண்டிப்புடன் கேட்டார். ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து, மிகவும் அமைதியாக, "சார் அந்தத் தம்பியோ இந்தத் தம்பியோ இல்லை சார். சின்னத் தம்பிதான்!" என்றானே பார்க்கலாம். ஒரே சிரிப்புதான்.

வெள்ளையாம்பட்டு, ந. துரை.

பத்துத் தடவை!

ஆசிரியர் எங்களிடம் அடுத்த நாள் கேள்வி பதில் எழுதிவரும்படி கூறினார். ஒவ்வொரு கேள்வியையும் பத்துத் தடவை எழுதி வரச் சொன்னார். எல்லோரும் எழுதிக் கொண்டு போனோம். ஒரு மாணவன் மட்டும் ஒரு தடவை மட்டுமே எழுதிக் கொண்டு வந்தான். ஆசிரியர் காரணம் கேட்டதற்கு, "சார் நான் ஒரு தடவை எழுதினா பத்துத் தடவை எழுதின மாதிரி!" என்றானே பார்க்கலாம். சிரிப்புக்குக் கேட்க வேண்டுமா?

செஞ்சி, வீ. கோவிந்தராசு.



இட்லி புசி!

எல்லோரும் இரவில் படித்துக் கொண்டிருந்தோம். ஐந்தாவது படிக்கும் எனது அத்தை பேரனும் எங்களுடன் உட்கார்ந்து படித்தான். அவன் பெயர் சுப்பையா. அவனுக்கு பூனைக்குட்டி பாடம். "ஐ லவ் லிட்டில் புசி" என்று இருந்தது அதில். அதை அவன், "ஐ லவ் இட்லி புசி" என்று சொன்னதும் ஒரே சிரிப்...



அனந்தபுரம், பி. ரஜினிகாந்த்.

ஆறும் ஏழும்!

ஆங்கில ஆசிரியை அடிக்கடி டெஸ்ட் வைக்கும் பழக்கமுடையவர். அன்றும்

அப்படித்தான். எல்லாரும் டெஸ்ட் எழுதிக் கொண்டிருந்தோம். ஒரு மக்கு மாணவிக்கு 6-ம் எண் கேள்விக்கான விடையும் 7-ம் கேள்விக்கான விடையும் தெரியவில்லை. தனக்கு முன்னால் இருந்த மாணவியிடம் மெதுவா, "ஏய் 6-ம் 7-ம் என்னடி?" என்று கேட்டாள். அவள் என்னதான் மெதுவாகக் கேட்டாலும் அங்கு நிலவிய அமைதி காரணமாக அது எல்லோர் காதிலும் விழுந்தது. உடனே முன்னால் எழுதிக் கொண்டிருந்த



மாணவி எழுதும் அவசரத்தில் "ஆறும், ஏழும் நம்பருடி!" என்றாளே பார்க்கலாம்! ஹாலில் சிரிப்பலை அடங்க சில நிமிடமாயிற்று.

சோழன்மாளிகை, கோ. சாந்தி.

டக்! டக்!

எங்கள் வகுப்பில் ஆங்கில ஆசிரியர் பாடலை நடத்தி விட்டு, எங்களைப்




பார்த்து "நாளை இதே பாடலைக் கேட்பேன். டக், டக் என்று கூற வேண்டும்" என்றார். ஒரு மாணவன் எழுந்து, "பாடலை டக், டக் என்று எப்படி சார் கூற முடியும்?" என்றான். வகுப்பே சிரிப்பில் மூழ்கியது.

செஞ்சி, டி. உதயசங்கர்.

பின்னாடி கண்ணாடி!

நானும் என் சகோதரியும் தாத்தாவுடன் பக்கத்தில் உள்ள திரையரங்கத்திற்குச் செல்வதற்காக பேருந்தில் ஏறினோம். பேருந்தில் இடம் இல்லாத காரணத்தால் நானும் என் சகோதரியும் ஒரு சீட்டிலும், தாத்தா ஒரு சீட்டிலும் உட்கார்ந்தோம். என் தாத்தா கண்ணாடி போட்டிருந்தார். நடத்துனர் எங்களிடம் வந்து பயணச் சீட்டு வாங்கச் சொன்னார். "அதோ எங்க சீட்டுக்குப் பின்னாடி கண்ணாடி போட்டிருக்காரே, அவ



ரிடம் கேளுங்கள்" என்றோம் இருவரும்.

நடத்துனரோ, "அவர் பின்னாடி கண்ணாடி போடலே, முன்னாடிதான் கண்ணாடி போட்டிருக்கார்மா" என்றாரே பார்க்கலாம். ஒரே சிரிப்...

விழுப்புரம், ரா. ரகுராமன்.

சாரி இல்லை!

ஊட்டியில் இருந்து குன்னூருக்குப் பேருந்தில் சென்று கொண்டு இருந்தேன். பேருந்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. உடனே நடத்துனர், "எல்லோரும் உள்ளே போங்க" எனக் கூறினார். உடனே எனது அருகில் பின்னால் இருந்த ஒருவர், என்னை முந்திக் கொண்டு உள்ளே நுழைந்தார். அப்போது அவர் அணிந்திருந்த செருப்பு நான் அணிந்திருந்த பேண்டில் பட்டு அழுக்காக்கி விட்டது. உடனே அவர் என்னைப் பார்த்து, "சாரி தம்பி" என்று



மன்னிப்புக் கேட்டார். உடனே, நான் அவரை பார்த்து, "சார், இது சாரி(சேலை) இல்லை. பேண்ட் சார். அதுனால பேண்ட் தம்பின்னு சொல்லுங்க!" என்றேன். உடனே அருகில் இருந்தவர்கள் அனைவரும் சிரித்து விட்டனர்.

நீலகிரி, மா. கிருஷ்ணராஜ்.

ஒரு பூட்டு

என் தந்தைக்கு திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து வேலூர் என்ற ஊருக்கு மாற்றல் கிடைத்தது. அங்கு போய்ச் சேர்ந்தவுடன் எனது அம்மா பியூனை அழைத்து, "கடையில் போய் வாழையிலை ஒரு பூட்டு வாங்கிவா" என்றார்கள். அவர் சென்று இலையையும் வாங்கிக் கொண்டு, ஒரு பூட்டு சாவியையும் வாங்கி வந்தார். 'இது என்ன!' என்று அம்மா வியப்புடன் கேட்டார். "நீங்கள்தானே வாழை இலை பூட்டு வாங்கச் சொன்னீர்கள்" என்றார்




பியூன். நெல்லை ஜில்லாவில் ஐந்து வாழை இலை சேர்ந்த ஒரு கட்டை "பூட்டு" என் பார்கள் என்பதை அம்மா அவருக்கு விளக்கினார்கள். "இங்கெல்லாம் ஒரு கட்டு இலை என்றுதான் சொல்ல வேண்டும். உங்கள் ஊர்ப் பேச்சுக்கு இங்கு வேறு அர்த்தம்!" என்றார் பியூன். உண்மைதானே?

சென்னை - 40, வி. பொன்னம்மாள்.

இயற்கணிதம்!

எங்கள் கணித ஆசிரியர் எப்பொழுதுமே ஒரு பாடத்தை நடத்தி முடித்துவிட்டு, அதைப் பற்றிக் கேள்விகளைக் கேட்பார்.



"எனக்கும் ஒலிம்பிக் சின்னத்துக்கும் ஒற்றுமை. நான் 5 சப்ஜெக்டுல வாங்கும் முட்டையை வைச்சு, 5 வளையமா வைச்சுக்கிட்டாங்க."

— சீர்காழி. வி. ரேவதி

அன்று, புதிதாக இயற்கணிதத்தைப் பற்றிப் பாடம் நடத்திவிட்டு, கேள்விகளைக் கேட்கத் தொடங்கினார். ஒரு மாணவன் தூங்கிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பி ஆசிரியர், "இயற்கணிதம் என்பது என்ன?" என்று கேட்டார். பாடத்தைக் கவனிக்காத அவன், "எல்லாரும் இயற்றக்கூடிய கணிதமே இயற்கணிதம்" என்றானே பார்க்கலாம். வகுப்பு முழுவதும் ஒரே சிரிப்பலைதான்!

ஈரோடு, ச. மகேஷ்.



தாயன்னை அறியா தாமரைக்கோழி!

வேணி டிபன் பாக்ஸைத் தொங்கு பையில் போட்டுக் கொண்டு வெளியே வந்தாள். நம்பி, சைக்கிளோடு தயாராக இருந்தான்.


"தண்ணீர் எடுத்துட்டிருக்கியா?"

"இரண்டு பாட்டில்ல எடுத்திட்டிருக்கேன் அண்ணா."

வேணி பின்சீட்டில் உட்கார்ந்து கொள்ள, நம்பி சைக்கிளைக் கிளப்ப இருந்தான்.

"தம்பி..." – எதிர் வீட்டுப் பாட்டிதான் நம்பியை அழைத்தாள்.

"என்ன பாட்டி?" – நம்பி, தரையில் ஒரு காலும், பெடலில் ஒரு காலுமாகக் கேட்டான்.



"எனக்கு சாமிக்கு வைக்க ஒரு தாமரைப் பூ வேணும். கிடைக்குமா? நாளைக்கு வைகுண்ட ஏகாதசி. சாதாரணமா தாமரைப் பூவாலேயே சாமிக்கு அர்ச்சனை பண்ணுவேன். இந்த வருஷம் இங்க வந்து சிக்கிட்டேன். தாமரைப் பூ இல்லேன்னா என்ன, மற்ற பூவை வைச்சுப் பண்ணிக்கோன்னு பையன் சொல்லிட்டுப் போயிட்டான். எனக்கு மனசு கேட்கலே. இத்தனை வயசுல ஒரு தடவை கூட தாமரைப் பூ இல்லாம வைகுண்ட ஏகாதசி பூஜையைப் பண்ணலே. எங்கேயாவது ஒரு பூவாவது கிடைக்குமா? என்ன விலையானாலும் தந்துடறேன்?"

பாட்டியைப் பார்க்க இரக்கமாக இருந்தது. புதிதாகத் தொடங்கப்பட்டிருந்த தொழிற்சாலையை ஒட்டி அமைந்திருந்த புதிய குடியிருப்புப் பகுதி அது. பாட்டியின் மகன், தொழிற்சாலையில் பொறியாளர். மருமகள், உள்ளூர் பள்ளியில் ஆசிரியை. கிடைக்கும் வசதிகளை வைத்துக் கொண்டு பூஜையை முடிக்க மனமில்லாது பாட்டி திண்டாடுகிறாள்.

"தம்பி, நீயும் உன் தங்கையும் முயற்சி பண்ணினால் கண்டிப்பாகத் தாமரைப் பூ கிடைக்கும். இங்கே பக்கத்தில் எங்கேயோ தாமரைக் குளம் இருக்கு. அதைக் கண்டுபிடிச்சா, பூவைக் கொண்டு வந்து தரது சுலபம்தானே?" என்றாள் பாட்டி.

"எதை வைச்சு பாட்டி, இங்கே பக்கத்தில் தாமரைக் குளம் இருக்குன்னு இத்தனை உறுதியா சொல்றீங்க! எங்களுக்குத் தெரிஞ்சு இந்த சுற்று வட்டாரத்தில் எந்தக் குளமுமே இல்லையே! எல்லாம் முந்திரிக் காடு தானே?" என்று வியப்புடன் கேட்டான் நம்பி.

பாட்டி உள்ளே சென்று ஒரு புகைப்பட ஆல்பத்தைக் கொண்டு வந்தாள்.

"இதைப் பிரிச்சுப் பார் தம்பி. இதெல்லாம் அக்கம் பக்கத்துல என் பையன் எடுத்த புகைப்படங்கள். மூணாவது படம் தாமரைக் கோழியின் படம்!"

நம்பியும் வேணியும் ஆல்பத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தார்கள். மூன்றாவது பக்க படம் அழகான ஓர் பறவையின் புகைப்படம்.

நீளமான மெலிந்து உயர்ந்த கால்கள். கழுத்து, தலை, மார்பு பகுதிகள் பள பளப்பான கருப்பு. முதுகும் சிறகுகளும்

ரேவதி



இளம் பசுமை கலந்த வெண்கல நிறம். வால் பக்க இறகுகள் சிவப்புக் கலந்த தவிட்டு வண்ணம். பெரிய புறா அளவிலான தலை. வாத்துப் போன்ற, ஆனால் அதைவிடவும் நீண்ட மூக்கு.

"அந்தப் படத்தில் உள்ளது தாமரைக்கோழி தம்பி. இது இருந்தால் பக்கத்தில் எங்கேயோ தாமரைக் குளம் இருக்குன்னு அர்த்தம்" – பாட்டி மிக உறுதியாக அடித்துப் பேசினாள்.

"அண்ணா, இதை நான் ஏரிக்கரையில அடிக்கடி பார்த்திருக்கேன். ஆனால், பெயர் தாமரைக்கோழின்னு தெரியாது" என்றாள் வேணி.

"நான் கூடப் பார்த்திருக்கேன். ஆனால், நான் பார்த்த பறவைக்கு நீண்டு வளைந்த அரிவாள் போன்ற வால் இருக்கும்."

"நம்பித் தம்பி. நான் கேட்டதைக் கொஞ்சம் கவனிப்பா. தாமரைக்கோழி இருக்கிற இடத்துல கண்டிப்பா தாமரைக் குளம் இருக்கும்" என்று தன் வேண்டுகோளை நினைவு படுத்தினாள் பாட்டி.

"அண்ணா, ஒன்பதாவது சி பிரிவுல படிக்கிறாளே பரிமளம், அவ அப்பா வனத்துறை அலுவலர்தான். அவரிடம் இந்த புகைப்படத்தைக் காட்டி, விசாரித்தால் தாமரைக் குளம் இருக்கும் இடத்துக்கு வழி காட்டலாம். பாட்டிக்கும் உதவலாம்" என்று வேணி யோசனை கூறினாள்.

"அந்தப் பரிமளாவை எனக்குத் தெரியாதே!"

"எனக்குத் தெரியும் அண்ணா."

பாட்டி, ஆல்பத்தில் இருந்து, தாமரைக் கோழியின் புகைப்படத்தைக் கழற்றி, நம்பியிடம் தந்தாள்.

"சுசக்காம, பத்திரமா திருப்பிக் கொண்டா. நல்ல செய்தியோட தாமரைப் பூவைக் கொண்டு வா."

பாட்டியின் வாழ்த்துடன் அண்ணனும் தங்கையும் கிளம்பினர்.

"பகல் சாப்பாட்டுக்காக அப்பா வருவார். நாம வீட்டுக்குப் போய்ப் பார்க்கலாம்" என்றாள் பரிமளா.

பரிமளாவின் தந்தை அவர்களை அன்பாக வரவேற்றார். செய்தியை அறிந்து கொண்டு, புகைப்படத்தை வாங்கிப் பார்த்தார்.

"நான் உங்களுக்கு என்ன பண்ணணும் தம்பி?"

"தாமரைக்குளம் இருக்கும் இடம் தெரியணும் சார். தாமரைக்கோழி இருப்பதால், அருகே

தாமரைக் குளம் இருந்தாகணும் இல்லையா?"

பரிமளாவின் தந்தை சிரித்தார்.

"தம்பி, இந்தப் புகைப்படத்தில் இருக்கும் பறவையின் பெயர் தாமரைக் கோழிதான். சந்தேகமே இல்லை. ஆனால், தாமரை இருக்கும் இடத்தில் இவை இருக்கும் என்றோ, இவை இருக்கும் இடத்தில் தாமரைக் குளம் இருக்கும் என்றோ சொல்ல முடியாது!"

"பின்ன ஏன் சார் தாமரைக்கோழின்னு பெயர் வைச்சிருக்காங்க?"

"இது புத்திசாலித்தனமான கேள்விதான் தம்பி!" என்று நம்பியைப் பாராட்டிய பரிமளாவின் தந்தை, "தம்பி, ஒருவர் வானத்தில் பறக்கிறார் என்று வைத்துக் கொள். அவரை நீ எப்படிக் குறிப்பிடுவாய்?" என்று கேட்டார்.

"வானத்தில் பறப்பவர் என்றுதான் குறிப்பிடுவேன்! அதுதானே பொருத்தம்? வித்தியாசமான ஒன்றை அவர் செய்து காட்டுகிறார் இல்லையா?"

"அதே மாதிரித்தான் இந்தத் தாமரைக் கோழியின் சமாச்சாரமும். மற்ற எந்தப் பறவையும் செய்யாத ஒன்றை இது செய்கிறது. அதாவது தாமரை இலையில் கால் வைத்து மூழ்கி விடாமல் இது நீர்மேல் நடக்கிறது!"

"அப்படியா! இதுவரை அதைப் பார்த்தது கிடையாதே!" என்று வியந்தனர் நம்பியும் வேணியும்.

"தாமரைக் குளம் இருந்தால்தானே பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கும்? ஏரி குளங்களைத் தூர்த்து விட்டு, வீடு கட்டும் முயற்சியில்தானே நாம் தீவிரமாய் இருக்கிறோம்?" என்று கேட்ட பரிமளாவின் தந்தை, "தாமரை இலை



அறிவியல் உண்மைகள்

✱ தாமரைக்கோழியின் விலங்கியல் பெயர் மெடோபிடியஸ் (METOPIDIUS INDICUS) ஜெகானிடே குடும்பத்தில் (JACANIDAE), CHARADRIFORMES வரிசையைச் சேர்ந்தவை. வெண்கலச் சிறகு ஜகானா என்ற செல்லப் பெயரும் உண்டு.

✱ வால் இல்லாமல் சுமார் கௌதாரி அளவுக்கு இருக்கும். ஆணைவிடப் பெண் பெரிதாக இருக்கும். குடும்பம் நடத்த விரும்பும் காலத்தில் அரிவாள் வடிவ வால் முளைக்கும். பிறகு இது விழுந்துவிடும்.

✱ நத்தை, சிறிய மீன்கள், குட்டி நண்டுகள், தாவரப் பாசிகள், நீர்ப்பழங்கள் உணவு. இரையைத் தேடி நீர் நிலைகளில் அலையும். துணிச்சலாக மனிதர்களுக்கு அருகிலும் கூட வரும்.

✱ நீண்டு உயர்ந்த கால்கள். கால்களில் உள்ள விரல்கள் நீண்டு பரந்தவை. உடல் கனத்தை ஒரே இடத்தில் அழுத்தி வைக்காது பரவலாக்க இந்த அமைப்பு உதவுகிறது. இதனால் இது தாமரை இலைகளில் அழகாக நடக்கும்.

✱ ஆனால் இது பறக்கும் போது அலங்கோலமாக இருக்கும். அவசியமானால் நீந்தவும் செய்யும்.

✱ கோழி என்று இவை அழைக்கப்பட்டாலும் இவை கோழியைப் போலக் கூவாது.

✱ "சீக் சீக் சீக்", "டிவின் டிவின்" என்று குரல் தரும்.

✱ தாவர வேர்களை ஒன்று திரட்டி மிதக்கும்படி செய்து முட்டை இடும். சரியாக 4 முட்டை! தாமரை இலைகளின் மேலும் கூட முட்டை இடும்.

✱ அடைகாத்து, குஞ்சு பொரித்து, வளர்ப்பது எல்லாமே ஆண் பறவைதான். தாயன்பை அறியாத தாமரைக்கோழிகள்!

மேல் இது நடப்பதால்தான் இதைத் தாமரைக் கோழி என்கிறார்கள். இது தாமரைக் குளத்தின் அருகில்தான் வாழும் என்றோ, இது இருக்கும் இடத்தில் தாமரைக் குளம் இருக்க வேண்டும் என்றோ கட்டாயம் இல்லை. சாதாரணமாக இது நீர் நிலைகளில் உள்ள பூச்சி புழுக்கள், மெல்லிய தாவரங்களை உணவாகக் கொள்ளும்" என்றார்.

"நான் இதே போன்ற ஒரு பறவையை அடிக்கடி ஏரிக்கரை, பாசனக் கிணறுகளுக்கு அருகே பார்த்திருக்கிறேன் சார். இப்படியேதான் இருக்கும். ஆனால், இந்த மாதிரி குட்டையான வால் இல்லை. நீண்டு, வளைந்த பெரிய அரிவாள் போன்ற வால் இருக்கும். மற்றபடி இந்த மாதிரியேதான் இருக்கும்."

"தம்பி, நீ பார்த்ததும் தாமரைக் கோழியேதான். இவைகளுக்குக் குடும்பம் நடத்தும் பருவம் வரும்போது நீண்டவால் ஒவ்வொரு முறையும் தோன்றும். குடும்பம் நடத்தியதும் நீண்டவால் விழுந்து விடும். உடலின் வண்ணமும் மாறுபடும்."

"அதிசயமாக இருக்கே!"

"ஆண் பெண் இரண்டுமே ஒரே மாதிரி இருக்கும். பெண்ணைவிட ஆண், சற்றுச் சின்னதாக இருக்கும்! குடும்பம் நடத்தி முட்டை இட்டதும் அம்மா விடை பெற்றுக் கொண்டு விடும். அடைகாத்துக் குஞ்சு பொரிப்பது, குஞ்சுகளை வளர்ப்பது எல்லாமே அப்பா தான்!"

"அப்போ, தாமரைக் கோழிகளை, தாய் அறியாப் பிறவிகள் என்றுதான் சொல்ல வேண்டும்," என்றான் நம்பி.

"சார், இவை மட்டும் தாமரை இலை மேல் எப்படி விழாமல் நடக்கும்!" என்று கேட்டாள் வேணி.

"இவைகளுக்கு நீண்டு பரந்த விரல்கள் உண்டு. உடல் கனத்தை இவை தாங்கி இலைப் பரப்பு முழுக்க அழுத்தத்தைப் பரவலாக்கி வைக்கின்றன. ஒரே இடத்தில் அழுத்தம் ஏற்பட்டால், உடனே இலை மூழ்கி விடும். அப்படி இல்லாமல், உடல் கனத்தின் அழுத்தம் பரவலாக விநி

யோகிக்கப்படுவதால், இவை நீரில் அமிழ்வதில்லை. இதனால் மிக எளிதாகத் தாமரை இலைகளின் மேல் இவை நடந்து செல்லும்."

"சார், தாமரைக் கோழிகளை நாங்கள் பார்க்க முடியுமா?"

"நம்மூர் ஏரிக்கரையில் தினமும் நீங்கள் பார்க்கலாம். நத்தையைத் தேடி இவை நீரில் காலைத் துழாவிக் கொண்டே இருக்கும். தைரியமா நம்மகிட்டேயே வரும். கவனிச்சிருக்க மாட்டீங்க. அவ்வளவுதான்."

"இவை தாமரை இலை மேல நடக்கும் காட்சியை எங்கே பார்க்கலாம்?"

"தாமரை இருக்கும் குளத்தில்தான் பார்க்கலாம். தாமரை இலைகளில் இவை அசைந்து அசைந்து அடியடியாக எடுத்து வைத்து நடக்கும் அழகை எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் பார்த்து ரசித்துக் கொண்டே இருக்கலாம்" என்று கூறிய பரிமளாவின் தந்தை, "தம்பி, நம்ப வல்வெட்டி ஜமீன்தாருக்குச் சொந்தமான முத்துக்காடு இங்கேதான் அருகில் இருக்கு. அதில் ஓர் அழகான பெரிய தாமரைக் குளமும் இருக்கு. குளக்கரையில் மரக்கிளைகளில் மறைந்து பார்த்தால், தாமரைக் கோழிகள் நடக்கும் அழகைக் காணலாம். ஜமீன்தாரிடம் அனுமதி வாங்கிடறேன். என்னுடைய பைனாகுலரையும் தரேன். பத்திரமா திருப்பித் தந்திடுங்க" என்றார்.


"அப்போ பாட்டிகேட்ட தாமரைப் பூவும் கிடைக்குமா?"

"கண்டிப்பா. ஆனால், குளத்தில் இறங்கி தாமரைப் பூவைப் பறிக்க தனித் திறமை வேண்டும். தாமரைக் கொடி காலில் சிக்கிக் கொண்டால் மூழ்கிச் சாக வேண்டியதுதான்."

பாட்டிக்கு தாமரையும் கிடைத்தது. நம்பிக்கும் வேணிக்கும் தாமரைக் கோழி தாமரை இலை மேல் நடக்கும் அழகைக் காணும் வாய்ப்பும் கிடைத்தது.

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் மிகவும் முன் கோபக்காரனாக இருந்தான். இது பெரிய கெட்ட குணம் என்று தெரிந்தும் அவனால் அதை மாற்றிக் கொள்ள முடியவில்லை.

அந்தக் குணம் எப்படியாவது தம்மிடமிருந்து போக வேண்டும் என்று மன்னன் ஆண்டவனிடம் வேண்டினான். இவனது வேண்டுகோளை ஏற்று ஆண்டவன் அரசன் முன் தோன்றி பொன்னால் செய்த ஒரு குவளையைக் கொடுத்து "கோபம் வரும் போதெல்லாம் இதில் மூன்று முறை தண்ணீர் நிரப்பிக் குடி. பிறகு கோபம்



வராது" என்று கூறி மறைந்தார்.

அதுமுதல் அரசன் கோபம் வரும் போதெல்லாம் குவளையில் மூன்று முறை தண்ணீர் குடித்தான். சில நாட்களில் அவன் கோபம் அவனை விட்டு விலகியது. நாட்கள் சென்றன.

மீண்டும், அரசன் முன் ஆண்டவன் தோன்றினான். மந்திரக் குவளை கொடுத்ததற்காக அரசன் பலமுறை ஆண்டவனுக்கு நன்றி கூறித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான்.

"அரசனே, உன்னை ஏமாற்ற நான் விரும்பவில்லை. அது மந்திரக் குவளையே அல்ல! சாதாரணக் குவளைதான் அது. கோபம் வரும்போது சிந்திக்க நேரம் இருக்காது. சிந்தனை வந்தால் கோபம் தானே குறையும். அந்தக் குவளையிலிருந்து தண்ணீரை மூன்று முறை ஊற்றிக் குடிக்கும் போது, சிறிது நேரம் கிடைக்கும். இப்படிக் கிடைக்கின்ற சற்று நேரப் பொழுதில் சிந்திக்க வாய்ப்புக் கிடைப்பதால் மனம் அமைதி பெறுகிறது. அதனால் கோபம் இருந்த இடம் தெரியாது மறைந்து விடுகிறது" என்று கூறி ஆண்டவர் மறைந்தார்.

-தக்கோலம் அ. முஸ்தபா

மகனுக்காக!



• தேவதாஸ் காந்தி

அந்தச் சிறுவனுக்குப் பதின்மூன்றே வயது. மற்றவரைப் போல் தானும் ஏதாவது விரதம் இருக்க விரும்பினான்.

அவனுடைய தந்தை அடிக்கடி உப்பு சேர்க்காமல் விரதம் இருப்பார். நேராக அவரிடம் போனான். சுயமாக அவரே சமையல் செய்து தானும் உண்டு, அவனுக்கும் போட்டு வந்த நேரம் அது.

அவன் தன் தந்தையிடம், "அப்பா, இன்று முதல் ஒரு வாரம் நானும் உங்களைப் போல் விரதம் இருக்கப் போகிறேன். எனக்கும் உப்பு இல்லாமல் சமைத்து விடுங்கள்...." என்றான்..

தந்தை மகிழ்ந்தார்.

அன்று முதல் அச்சிறுவனுக்கு உப்பில்லாத உணவுதான். முதலில் சிரமமாகத்தான் இருந்தது. இருந்தாலும், பொறுத்துக் கொண்டான்.

மெல்ல மெல்ல நான்கு நாட்கள் ஆயின. அதற்கு மேல் அவனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. நாக்குச் செத்துவிட்டது. தாக்குப் பிடிக்க முடியவில்லை.

ஐந்தாம் நாள் பொழுது விடிந்தது. சிறுவன் நேராகத் தந்தையிடம் போனான்.

"அப்பா, இன்றிலிருந்து எனக்கு உப்புச் சேர்த்தே காய்கறி சமைத்து விடுங்கள். இனியும் தொடர்ந்து உப்பு இல்லா விரதம் இருக்க முடியாது..." என்றான்.

"அதெல்லாம் கூடாது. எந்த விரதத்தையும் தொடங்கிய பிறகு பாதியில் விடக் கூடாது..." என்றார் தந்தை.

"உப்பில்லாத உணவு எனக்கு இறங்கவில்லையே...!" என்றான் சிறுவன் பரிதாபமாக.

உடனே தந்தை, "நானா உன்னை உப்பு இல்லாத விரதம் இருக்கச் சொன்னேன்? நீயாகத் தானே விரதத்தைத் தொடங்கினாய்? அதை நீயாகக் கூடப் பாதியில் முறித்துக் கொள்ளக் கூடாது. அதனால் உனக்கு உப்புச் சேர்த்துச் சமைத்துப் போடமாட்டேன்..." என்று கூறி விட்டார்.

அவர் கூறினால் கூறினதுதான். அத்தனை கண்டிப்பு! சிறுவனுக்குத் தந்தையிடம் கோபம் வந்து விட்டது. "அப்படியானால் எனக்கு உணவே வேண்டாம். பட்டினி கிடந்து விடுகிறேன்..." என்றான்.

தந்தை அதற்கெல்லாம் மசிபவராக இல்லை. அதற்கு அவர், "இதோபார் நீயாக "உப்பில்லாத காய்கறியே தொடர்ந்து சாப்பிடுகிறேன் என்று சொல்லும் வரை நானும் எந்த உணவும் சாப்பிடமாட்டேன்.... பட்டினி கிடக்கப் போகிறேன்..." என்று கூறி விட்டார். அவர் எதையும் சொன்னபடி செய்யக் கூடியவர்.

இந்த நிலையில், இருவருமே அன்று எதுவும் சாப்பிடவில்லை. பட்டினி கிடந்தனர்.

மாலை வந்தது. தந்தையைப் பற்றி ஒன்றுமில்லை. பட்டினி கிடப்பதில் பழக்கப்பட்டவர். ஆனால், மகனால் அவ்வாறு பட்டினி கிடக்க முடியவில்லை. அத்துடன் 'அப்பா இப்படிப் பட்டினி கிடக்கிறாரே; அதற்கு நாம் காரணம் ஆகி விட்டோமே' என்ற மனவேதனை வேறு. எனவே, அவன் மனம் நெகிழ்ந்தது. தன் பிடிவாதத்தை விட்டுக் கொடுத்துவிட முடிவு செய்தான்.

நேராகத் தந்தையிடம் போனான். "அப்பா, நான் விரதத்தைக் கைவிடப் போவதில்லை. எனக்கும் உப்பில்லாத சமையலே சமைத்து விடுங்கள்..." என்றான்.

தந்தை மகிழ்ந்தார். அவரது மகிழ்ச்சியைக் கண்டதும் சிறுவனிடம் ஆனந்தக் கண்ணீர். இருவரும் ஒன்றாக அமர்ந்து உப்பில்லாத காய்கறியைப் புசித்து, விரதத்தைத் தொடர்ந்தனர்.

பரஸ்பரம் பாசம் மிக்க அந்த விநோதத் தந்தை - மகன் யார் என்பது தெரியுமா?


பிற்காலத்தில், நமது விடுதலைப் போராட்டத்தின்போது, பல தடவைகள், அதே உண்ணா விரதம் என்ற அகிம்சை வழியைக் கடைபிடித்து, வெற்றியும் பெற்று நமக்கு விடுதலை பெற்றுத் தந்த, தேசபிதா காந்திஜியும் அவரது மகன் தேவதாஸ் காந்தியுமதான் அவ்விருவரும்!

-ஜானகி மணாளன்


கண்மணி கேட்ட வரம்!


அமைப்பு : ரே   ஓவியம் : சசி







தங்கை கண்மணி நேர்மாறானவள்...
தோட்டக்காரரே, உங்க வேலையை நான் பார்த்துக்கறேன். குழந்தையை வைத்தியரிடம் கூட்டிக்கிட்டு போங்க.
காசுதரேன். வண்டி பிடிச்சுப் போங்க.
பொன்மணியும் கண்மணியும் திருவிழாவில் இருந்து திரும்பும் போது -
என்ன அது?
குரங்கு அடிபட்டுக் கிடக்கும்மா. பாவம்!
வண்டியை நிறுத்துங்கள்.
வண்டி நின்றதும் கண்மணி இறங்கினாள்.
உயிர் இருக்கு. காலில்தான் அடி. கட்டுப் போட்டால் சரியாகிடும்.
இதோட வண்டில ஏறாதே! வண்டியெல்லாம் இரத்தம் பட்டுடும். அசிங்கம்.
வைக்கல் பரப்பி, என் மடியில் வைச்சுக்கறேன் அக்கா....


கூடாது.
கூடையில குரங்கை வைச்சுக் கொண்டு வந்துக்கறேன். வண்டி வேண்டாம். நடந்தே வரேன் நீ போ!
குரங்கின் காயத்தைக் கட்டினாள்.
கூடையில் படுக்க வைத்தாள்.
தூக்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தாள்.
தினமும் மருந்து போட்டாள்.
குரங்கு பூரணமாக குணமடைந்தது.
ஒரு நாள் -
கண்மணி, நான் கிளம்பப் போறேன். உன் உதவியை மறக்கவே மாட்டேன். உனக்கு என்ன வேணும்?


மறுபடி இந்த மாதிரி காயம் பட்டுக்காம இருந்தா, அதுவே போதும்.
உனக்கு, உதவி பண்ணத் துடிக்கும் பொன் மனம். அதுக்கு பரிசு தராம போக மனசு இடம் தரலே.
இதோ.....
அட! மண் குடுவை!
சாதாரண மண்குடுவை இல்லே! இதுல தண்ணீர் விட்டு தெளிச்சு, குடிக்கக் கொடுத்தா தீராத நோய் எல்லாம் தீரும்!
நன்றி குரங்காரே!
இரவானதும் குடுவையைப் போட்டு உடைச்சிடணும்!
அப்படின்னா....?
அதிகாலையில் தினமும் புதுக் குடுவை உன் தலைமாட்டிலேயே வந்து விடும்.
மகிழ்ச்சி குரங்காரே!
நான் வரேன் கண்மணி!
தோட்டக்காரர் வருகிறார் -
ஐயா, உங்க பையனுக்கு எப்படி இருக்கு?
ஜுரம் அதிகமாகி, முடக்கு வாதம் வந்து கால் இழுத்துக்கிட்டதும்மா. என்ன பண்றதுன்னே தெரியலே....?





உடனே கூட்டிக்கிட்டு வாங்க.....
இதோம்மா என் பையன்....!
கண்மணி குடுவையில் நீர் நிரப்பி....
தெய்வமே, இந்தப் பையன் குணமடைய அருள் செய்....
நீரைத் தெளிக்கிறாள்...
இந்தா குடி தம்பி...
என்ன அதிசயம்! இப்படி ஓடறானே!




வந்தது சாதாரணக் குரங்கார் அல்ல. அனுமானேதான்!
செய்தி பரவுகிறது -
கண்மணி தரும் குடுவை நீரால் தீராத நோயெல்லாம் தீருகிறதாம்!
இழந்த பார்வை கூட திரும்பக் கிடைக்கிறதாமே!
காசு கூட வாங்க மறுக்கிறாளாமே! எத்தனை நல்ல மனம்!
தினமும் நோயாளிகள் கூட்டம் வரிசையாக நிற்கிறது!
அரண்மனையில் -
சிறுமி கண்மணி, முடக்கு வாதத்தைக் கூட குணமாக்குகிறாளாம்!
உன் ஆசையைக் கெடுப்பானேன்? அழைத்து வரச் சொல்...!



நோயாளிகள் வரிசை காத்திருக்க!
அரசி வருகிறார் -
வாருங்கள் மகாராணி
கண்மணி, அரண்மனைக்கு வந்து அரசரைக் குணமாக்க வேண்டும். பல்லாக்குக்கூட வந்திருக்கு....
நான் தயார். ஆனால் காத்திருக்கும் கூட்டத்தைப் பாருங்கள்! நான் வந்து திரும்பும் நேரத்தில் இங்கே நாலுபேரைக் குணப்படுத்தி விடுவேன்....
தயவு செய்து அரசரைக் கட்டிலுடன் தூக்கி வாருங்கள்.
உன் நிலை புரிகிறது கண்மணி. அரசரை இங்கேயே அழைத்து வருகிறோம்.
அரசர் கட்டிலுடன் தூக்கி வரப்படுகிறார்.
குடுவை நீரைத் தெளித்து ...
இதைக் குடியுங்கள் அரசே. இன்னும் நீண்ட காலம் மக்களுக்குத் தொண்டாற்ற, நோய் தீர வேண்டும் என்று வேண்டுங்கள்....


அரசர் குணமடைந்து -
என்ன அற்புதம்! நான்தானா கண்மணி! புதுப்பிறவி கொடுத்த உனக்கு, எது வேண்டுமானாலும் தருகிறேன். கேள் மகளே.....?
ஆம் மகளே எது கேட்டாலும் தரத் தயார். இது உறுதி.
இப்ப எதுவுமே வேண்டாம். தேவை ஏற்படும் போது கேட்கிறேன் அரசே.
நீ கேட்க வேண்டும், என்பதற்காகக் காத்திருப்போம்!
மக்கள் -
பேராசை இருந்தால், எத்தனையோ கேட்டிருக்கலாம்!
பெருந்தன்மையாக மறுத்து விட்டாளே!
கண்மணி, நம் நாட்டின் விலை மதிப்பிலா மாணிக்கம்!
ஒரு நாள் -
கண்மணி, உன்னோடு தனியாகப் பேச வேண்டும்.



தனியே வந்ததும்
என்ன ஐயா! என்ன வேண்டும்?
நான் வேழ நாட்டு அமைச்சர். மன்னருக்கு விஷக்காய்ச்சல். வைத்தியர்கள் கைவிட்டு விட்டார்கள்.
அப்படியா?
நீ மனமிரங்கி, மன்னரைக் குணப்படுத்த வேண்டும்.
ஐயா, காத்திருக்கும் கூட்டத்தைப் பார்த்தீர்களா? எப்படி வர முடியும்?
உங்கள் மன்னரே இங்கே வந்தார் என்பதும் எனக்குத் தெரியும்மா. ஆனால்!
உங்கள் அரசரைக் கூட்டிவர என்ன தயக்கம் ஐயா?
தயக்கம் இல்லை அம்மா. தடை!
தடையா!
ஆம். இந்தப் பவளபுரிக்கும் எங்கள் நாட்டுக்கும் தீராத பகை....
பகைக்கு என்ன காரணம்?
இரு நாடுகளும் காலங் காலமாக நட்புடன்தான் இருந்தன. இரண்டுக்கும் இடையே எல்லையாக அமராவதி நதி ஓடுகிறது இல்லையா...?


அது ஒருமுறை வெள்ளத்தால் பெருக்கெடுத்து, தன் போக்கையே மாற்றிக் கொண்டது.
அப்படியா!
பவளபுரி எல்லையில் இருந்த வில்வநாதர் ஆலயம், ஆற்றின் போக்கு மாறியதால் எங்கள் வேழபுரிக்குள் வந்துவிட்டது.
உண்மையாகவா!
பகைக்கு இதுதான் காரணம். வில்வநாதர், பவளபுரி அரசருக்குக் குல தெய்வம். அதனால் மன்னர் வழிபட வரும்போது, வேண்டுமென்றே வம்புக்கு இழுத்து சண்டை போடுவார்கள் எம் நாட்டு மக்கள்.
கேட்கவே வருத்தமாக இருக்கிறது!
இது எத்தனையோ தலைமுறைக்கு முன் நடந்தது என்றாலும் இன்னும் பகை தொடர்கிறது.
என்ன அநியாயம்!
எங்கள் அரசர் இங்கே வந்தால், சும்மா விடுவார்களா?
நோயாளியாக வருபவரிடம் பகை பாராட்டுவது மனிதத் தன்மை அல்ல!
அமைச்சரே, உங்கள் மன்னரிடம் இருந்து சிகிச்சை பெற இங்கே வர அனுமதிக்க வேண்டும் என்று ஒரு கடிதம் எழுதிக் கொண்டு வாருங்கள்.
உங்கள் அரசர் அனுமதிப்பாரா?
அது என் பொறுப்பு ஐயா. இந்தச் சந்திப்பிலாவது பகை தீரட்டும்.
சென்று உடனே திரும்பி வருகிறேன் கண்மணி.


இரண்டு நாட்களுக்குப் பிறகு -
கண்மணி, இதோ நீ கேட்டபடியே எங்கள் அரசர் எழுதிய கடிதம்.
மகிழ்ச்சி ஐயா!
அரண்மனையில்....
வா, கண்மணி! இப்பவாவது எங்களைப் பார்க்க வந்தாயே!
நாடே உன்னைப் புகழ்கிறது கண்மணி! என்ன சாப்பிடுகிறாய்?
உங்கள் அன்புக்கு எப்படி நன்றி செலுத்துவது என்பது தெரியவில்லை. அரசே... நான் கேட்கும் எதையும் தருவீர்கள் அல்லவா?
அந்த உறுதியை இன்னமும் மறக்கவில்லை கண்மணி. என்ன வேண்டும்? சொல்லும்மா?
நீ கேட்கலையே என்பதுதான் எங்கள் வருத்தம். என்ன வேண்டும்மா?
வேழநாட்டு மன்னர், விஷக் காய்ச்சலால் அவதிப் படுகிறாராம்.
அவர்கள் நம்மை பகைவர்களாக எண்ணுகிறார்களே!
இங்கு வந்து சிகிச்சை பெற உங்களிடம் அனுமதி கேட்டிருக்கிறார் வேழ நாட்டு மன்னர். இதோ....



மன்னர் படித்துவிட்டு...
இத்தனை பணிவாக எழுதியிருக்கிறாரே!
அனுமதிக்க வேண்டியதுதான்!
ஆமாம், இதற்கும் நீ கேட்கப் போவதற்கும் என்ன தொடர்பு?
அரசே, வேழ நாட்டு வேந்தரை நீங்கள் உள்ளன்புடன் வரவேற்க வேண்டும். நான் கேட்பது இதுதான்.
நீ கேட்கும் வரம் இதுதானா?
ஆம் அரசே! வீம்புக்காக பகையை வளர்த்து, பாதுகாப்பு காவலுக்காக இரு நாட்டவருமே ஏராளமாகச் செலவு செய்கிறோம். பகையை நீக்கிக் கொள்ள இந்த சந்திப்புப் பயன்படட்டும். மக்களுக்கும் நன்மைதானே?
வேழ நாட்டு மன்னரை வரவேற்பது மட்டுமல்ல, என் விருந்தாளியாகவே அரண்மனையில் தங்க வைக்கிறேன். போதுமா?
மகிழ்ச்சி அரசே! இது போதும்....
விரைவில் வேழநாட்டு மன்னரைக் கட்டிலில் தூக்கி வருகின்றனர்.



கருத்து : உத்தரப் பிரதேச நா[illegible]டிக் கதை



பாபு சர்க்கஸ், டாக்டர் பூவண்ணன், பக். 128, ரூ. 32/- கலை இல்லம், கிரப்பாளையம் - 608 602, தெ.ஆ. வள்ளலார் மாவட்டம்.

சிறுவர் இலக்கியத்தில் துருவ நட்சத்திரமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும் ஆசிரியரின், தொடக்ககால நாவல்களுள் சிறப்பானது இது. குழந்தைக் கவிஞரை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த "பூஞ்சோலை" மாத இதழில் தொடர்கதையாவும் வெளிவந்து பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் பாராட்டைப் பெற்றது. எந்தவிதமான மாற்றத்தையும் செய்யாது அப்படியே புத்தக வடிவில் வந்திருக்கிறது. மாமாவுடன் கல்கத்தா கிளம்பும் பாபுவின் ரயில், விபத்துக்குள்ளாக, பாபு தப்பித்து காட்டுச் சிறுவன் சாபுவின் நட்பையும் ஆதரவையும் பெற்று, இறுதியில் பிரிந்த அப்பாவைக் காண்கிறான். படிப்பவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நாவல் பறக்கிறது. பாசம், நட்பு, சஸ்பென்ஸ் எல்லாம் நிறைந்த படைப்பு!

தேன் சிந்தும் மலர்கள், அ. குலசேகரன், பக். 80, ரூ. 14/- அமிழ்தம் பதிப்பகம், 15, முத்துப் பிள்ளைத் தெரு, வ.உ.சி. நகர், வேலூர் - 632 001.

உலகப் புகழ் பெற்றவர்களின் வாழ்க்கையிலிருந்து சுவையான நிகழ்ச்சிகளை எடுத்து, தக்க திருக்குறளுடன் அதை ஒப்பிட்டு வழங்கியிருக்கிறார் ஆசிரியர். நெப்போலியன், மார்சிம் கார்க்கி, கென்னடி, மைக்கேல் ஆஞ்சிலோ, பாஹுபலி, நபிகள் நாயகம், நியூட்டன், திரு வி.க. தாமினடிகள், லிங்கன், என்று இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. சிறுவர்களுக்கு மட்டுமல்ல பெரியவர்களும் கூட சுவைக்கும் வண்ணம் தந்துள்ள நடை பாராட்டுக்குரியது. உள்ளே ஓரிரு படங்களைச் சேர்த்திருந்தால் நூலின் சிறப்பு இன்னும் கூடியிருக்கும். அட்டைப்படம் புத்தகத்தைப் பார்த்துமே கையிலேடுக்கத் தூண்டுகிறது. அருமையான பயனுள்ள படைப்பு.

அறிவியல் அறிஞர் சர். ஹம்ஃப்ரி டேவி, தி.க. கவியபெருமாள், பக். 64, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

அறிவியல் அறிஞர் வரிசையில் சிறந்த நூல்களைத் தந்து கொண்டிருக்கும் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தின் புதிய தயாரிப்பு இது. நிலக்கரிச் சுரங்கங்களுக்கு பாதுகாப்பு விளக்கைத் தந்த விஞ்ஞானி சர். ஹம்ஃப்ரி டேவியின் வாழ்க்கை வரலாறு. இந்த விளக்கின் முக்கியத்துவம் என்ன, இதைக் கண்டு பிடிக்க இந்த விஞ்ஞானி பட்டபாடு, போன்றவற்றையெல்லாம் ஏதோ ஒரு நாவலைப் படிப்பது போல் மிகச் சிறப்பாக விளக்கியிருக்கிறார் ஆசிரியர். அருமையான படைப்பு.

நேர்மைக்கு ஒருவன், புவனை கலைச் செழியன், பக். 80, ரூ. 20/- கலை இல்லம், கிரப்பாளையம் 608 602.

வசதியான குடும்பத்தைச் சேர்ந்த நேர்மையான சிறுவன் வேலழகன், கால மாறுபாட்டில் தொடரும் துன்பங்களை ஏற்று பல இன்னல்களுக்கு இலக்காகி, திருட்டுப் பட்டமும் பெற்று, கடைசியில் உண்மை தெளிய நல்வாழ்வு பெறுகிறான். வேலழகன் பாத்திரம், இலக்கியக் வேட்கையுடன் படைக்கப்பட்டுள்ளது. நட்பு, உண்மை, விடா முயற்சி ஆகியவைகளுக்கு இலக்கணமாக அவன் திகழ்கிறான். நாவலில் விறுவிறுப்புக்கும் குறைவில்லை. கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரின் தரமான படைப்பு. ஜெயராஜின் படங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன.

சமயம் வளர்த்த சான்றோர் - மாணிக்கவாசகர், தி.க. கவியபெருமாள், பக், 80, ரூ. 15/- பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

திருவாசகம் தந்தருளிய மாணிக்கவாசகரின் வரலாற்றுச் சுருக்கம் இது. சமயகுரவர் ஒருவரது வாழ்க்கையில் உள்ள உள்ளம் உருகவைக்கும் நிகழ்ச்சிகளைப் படிப்போர்க்கு அலுப்புத் தட்டாது வழங்கியுள்ள ஆசிரியரின் திறமையை எத்தனை பாராட்டினாலும் தகும். எளிய சொற்கள். தெளிவான நடை. அழகான படங்கள் நூலுக்கு மேலும் சிறப்பைத் தருகின்றன. மணிவாசகப் பெருமானை சிறுவர்க்கு சுவையாக அறிமுகப்படுத்தும் அழகான படைப்பு.

இதுவரை : ஆழிக்குப்பத்தைச் சேர்ந்த மீனவச் சிறுவன் உதயன். புயல் எச்சரிக்கையை மதிக்காது மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கக் கிளம்புவதை உதயன் தடுக்கிறான். அவர்கள் கேட்பதில்லை. அவர்களோடு உதயனின் தந்தை நல்லையாவும் மீன் பிடிக்கச் சென்று விடுகிறார். உதயன் தவிக்கிறான். அவர்கள் சென்ற படகுகள் புயலுக்கு பலியாகின்றன.



வி.ர. வசந்தன்

2. அப்பாவின் ஆசை!

பொழுது புலர்ந்த போது வானம் பளிச்சென்று துடைத்து வைத்த வெள்ளித் தகடு போலத் தெளிவாக இருந்தது. நீலக் கடலில் தவழ்ந்து வந்த வெள்ளலைகள் கரை மீது துள்ளி விளையாடிக் கொண்டிருந்த காட்சி நேற்று வெறித் தாண்டவமாடிய கடலா இதுவென்று வியக்க வைத்தது.

ஆனால் அதற்கு நேர் எதிராக இருந்தது ஆழிக்குப்பத்தின் நிலை. அந்த கடலோர கிராமத்தில் இருந்த குடிசைகள் எல்லாம் புயலில் பிய்த்து வீசப்பட்டிருந்தன.

மார்பிலும், தலையிலும் அடித்துக் கொண்டு கதறும் மீனவப் பெண்களின் ஓலமும், தங்கள் தாய்மார்களின் அழுகையைப் பார்த்து பயந்து விபரமறியாத குழந்தைகள் அலறிய கூச்சலும், அந்த இடத்தையே கதிகலங்கச் செய்தன. யாரை யார் தேற்றுவது என்று தெரியாமல் திகைத்து நின்ற மீனவர்களின் முகத்தில் வேதனையும் கலக்கமும் பெரிதும் காணப் பட்டன. நேற்று புயல் எச்சரிக்கையை மீறி கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றவர்கள் எவரும் திரும்பி வரவில்லை!

அந்தக் குப்பத்தில் வயது முதிர்ந்தவரும், தலைவருமாகிய கருத்த முத்து தன்னருகே நின்று கொண்டிருந்த சடையனிடம், "நேற்றைக்கு நல்லைய்யாவோட புள்ளை கடலுக்குப் போக வேண்டாம்னு நல்லா சொன்னான். அதை யாரும் கேட்கல... சின்னப்புள்ள பேச்சுன்னு விட்டதாலத்தான் இவ்வளவு விபரீதமும்" என்று சொன்னபோது அவர் குரலில் வருத்தம் தொனித்தது.

"என்ன மூப்பா செய்ய? எல்லாம் பசியோட கொடுமைதான்... மூணு நாளா பட்டினியோட போராடிட்டு இருந்தவங்க, வானம் கொஞ்சம் வெளுத்ததும் துணிவா கடல்ல இறங்கிட்டாங்க.... உதயன் வந்து சேதி சொன்னதும் யாராவது போய்த் தடுத்திருக்கலாம்... ஏற்கனவே தாயில்லாப் புள்ள. இப்ப அப்பனும் இல்லேன்னு அனாதையா நிக்குது. பாவம்" என்று பரிதாபப்பட்டான் சடையன்.


ஒன்றும் பேசத் தோன்றாமல் நின்ற கருத்தமுத்து தலையிலடித்துக் கொண்டு,

"இப்ப அவன் எங்கே?" என்று கேட்டார் ஆற்றாமையுடன்.

"செய்தி கேள்விப்பட்ட நேரத்துல இருந்து அழுகையுடம் புலம்புலுமா வீட்டுக்குள்ளே உட்கார்ந்திருக்கு" என்றான் சடையன்.

"சரி, வா. போய்ப் பார்க்கலாம்" என்று கருத்தமுத்து சடையனை அழைத்துக் கொண்டு உதயனின் குடிசையை நோக்கி நடந்தார்.

முழங்கால்களைக் கைகளால் கட்டிக் கொண்டு அழுது கொண்டிருந்த உதயன் தன் தோளை யாரோ தொடுவதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தான்.



கண்ணீர் வழியும் முகத்தோடு தன்னைப் பார்த்த உதயனை ஆதரவுடன் நோக்கிய கருத்துமுத்துவின் உதடுகள் நடுங்கின. பேச்சுவராமல் குரல் தடுமாறியது.

"உதயா, பதினைஞ்சு வயசுல இருந்து நானும் கடலுக்குப் போனவன் தான். எத்தனையோ புயல்லேயும், மீன் பிடிக்கிறவனுக்கு கடல்தாம்பா தாய்... அவ ஆகாரம் கொடுத்தாத்தான் அவனுக்கு வாழ்வு.... அவ கோபப்பட்டான்னா அப்புறம் ஏதுப்பா நமக்கு வாழ்க்கை...? நல்லைய்யா போயிட்டாலும் நாங்க எல்லாம் உசிரோடத்தான் இருக்கோம். நீ எதுக்கும் கவலைப்படாதே. நாங்க பாத்துக்கறோம்"

கருத்த முத்து தன்னைத் தேற்றுவதற்காக சொன்ன வார்த்தைகளைக் கேட்ட உதயன் விம்மி விம்மி அழுதான். "இயற்கையின் சீற்றத்துக்கு முன்னே யாரும் எதிர்த்து நிற்க முடியாது மூப்பா... எச்சரிக்கையை மீறி கடல்ல இறங்கிட்டு கடலம்மாவுக்கு கோபம் னால் என்ன அர்த்தம்? இந்த மாதிரி மூடநம்பிக்கை தான் நம்ம வாழ்க்கை

யையே கெடுத்து நாசமாக்குது...'' என்று அவன் அரற்றியபோது அவன் குரலில் வேதனையும்., இயலாமையால் எழுந்த ஆவேசமும் கலந்திருந்தது.

அங்கு நின்று கொண்டிருந்த சடையன், "நீ படிச்ச புள்ள, மூட நம்பிக்கைன்னு சுலபமா சொல்லிப் புட்டே... ஆனா, ஒருநாள் நீயும் வலையைத் தூக்கிக்கிட்டு கடலுக்கு வந்துதான் ஆகணும். அதை மறந்துடாதே'' என்றான்.



உதயன் கருத்தமுத்துவைப் பார்த்து திக்கித் திணறியவாறு, "நான் எப்படியாவது படிச்சு முன்னுக்கு வரணும்னு அப்பா ராவும் பகலும் கனவு கண்டுச்சு. நேற்று கடலுக்கு போகறதுக்கு முன்னாடி அதைத்தான் சொல்லிட்டு இருந்துச்சு.... மூப்பா, அவரோட ஆசையை நிறைவேற்றவாவது நான் படிக்கணும்... மீன் வலையைத் தூக்கி, என் தோள் மேல வச்சு, கடலுக்கு அனுப்பிடாதே'' என்று தேம்பினான்.

கருத்தமுத்தவும், சடையனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். சடையன், "இது என்னது, என்னவோ பொழுது போகாம பள்ளிக்குப் போறேன்னு நினைச்சுட்டு இருந்தா, பெரிய படிப்பு படிக்கணும்னு சொல்றியே! கடலை நம்பி வாழுற வரைக்கும் இந்த குப்பத்துல ஒருத்தனும் அனாதை இல்ல... எப்ப கடலை நம்ப மறக்கறோமோ அப்ப அனாதை ஆயிட்டோம்னு அர்த்தம்... படிக்கணும்னா, பணத்துக்கு எங்கே போறது....! என்ன மூப்பா, நான் சொல்றது சரிதானே?'' என்று கேட்டான்.

அவனைப் பேசாமல் இருக்கும்படி சைகை காட்டிய முதியவரான கருத்தமுத்து சற்று நேரம் மௌனமாக இருந்தார். பின், "ஏம்பா, கண்டிப்பா நீ படிக்கணும்னு ஆசைப்படறே? அப்படித்தானே?'' என்று கேட்டார் சிந்தனையுடன்.

உதயன் ஆவலுடன், "ஆமாய்யா! எப்படியாச்சும் நான் படிக்கணும். படிச்சு பெரிய வேலைக்கு வரணும். என் அப்பாவோட கடைசி ஆசையை நிறைவேற்றணும்'' என்றான். அப்போது அவன் கண்களில் சுடர் விட்டுப் பிரகாசித்த ஒளி மனதுக்குள் மூண்டெழுந்து விட்ட இலட்சிய வேகத்தைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியது.

''அப்படின்னா அதுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கு... இந்தக் குப்பத்தையும் எங்களையும் நீ மறந்துட வேண்டியதுதான். ஜோதிபுரத்துல ஒரு வெளிநாட்டு அம்மா 'கருணை இல்லம்'னு அனாதை ஆசிரமம் நடத்தறாங்க... அங்க சேர்ந்துட்டா, பெரிய படிப்பெல்லாம் படிக்கலாம். அவங்களுக்கு வேணும்னா ஒரு கடிதாசு எழுதிப் போடு. விலாசம் வாங்கித் தாரேன்'' என்றார் கருத்தமுத்து.

முதியவர் சொன்னதை ஆர்வமுடன் கேட்ட உதயன், ''அந்த விலாசத்தை உடனே வாங்கிக் கொடு மூப்பா. இன்னிக்கே கடுதாசு எழுதிப் போடறேன்... நான் படிக்கணும். வேற ஒண்ணும் எனக்கு வேண்டாம்'' என்றான் பரபரப்புடன்.

அன்று மாலையே கருத்தமுத்து யாரிடமோ விசாரித்து, அந்த கருணை இல்லத்தின் விலாசத்தையும் ஒரு தபாலட்டையையும் வாங்கிக் கொண்டு வந்தார்.

அந்தத் தபால் அட்டையில் உதயன் தன் நிலையைத் தெரிவித்து, தன்னையும் அந்த இல்லத்தில் சேர்த்துக் கொண்டு படிக்க வைக்குமாறு இரங்கி வேண்டி ஒரு கடிதம் எழுதி, தபாலில் சேர்த்தான்.

ஒரு வாரத்திற்குப் பின் அவன் பெயருக்கு தபாலில் பதில் கடிதம் வந்தது. அதில் கண்ட வாசகங்கள் மிகவும் சுருக்கமாக இருந்தன.

'அன்புள்ள உதயன், உனது நிராதரவான நிலையை விவரித்து நீ எழுதிய கடிதத்தைப் பெற்றுக் கொண்டேன். உன் மனத் துயரில் நானும் பங்கு கொள்கிறேன். உனக்குரிய இடத்தை இந்த இல்லத்தில் நீ பெற்றுக் கொள்ளலாம். ஊர்ப் பெரியவர்கள் இரண்டு பேரை அழைத்துக்




கொண்டு உடனே நேரில் வா. இப்படிக்கு, மார்கரெட்.'

கடிதத்தை மீண்டும் மீண்டும் படித்தான் உதயன். நெஞ்சுக்குள் மகிழ்ச்சி ஊற்று போல் பீரிட்டு எழுந்தது. அதை எடுத்துக் கொண்டு கருத்தமுத்துவின் குடிசையை நோக்கி ஓடியவன், "மூப்பா என்னை வரச் சொல்லி பதில் கடிதம் வந்திருக்கு" என்று உற்சாகத்தோடு கூச்சலிட்டவாறு கடிதத்தை அவரிடம் காட்டினான்.

வியப்புடன் அவனைப் பார்த்த கருத்தமுத்து "அவ்வளவு சீக்கிரமாகவா வரச் சொல்லிட்டாங்க....! எப்படியோ போய் உண்மையா நடந்துக்க... படிச்சு நல்லாயிரு.... நம்ம குப்பத்துல இருந்து ஒரு பையன் பெரிய படிப்புப் படிக்கறான்னா, அது எல்லோருக்கும் பெருமை தானே" என்றார். அப்போது அவர் முகத்தில் நிம்மதியும், மகிழ்ச்சயும் தோன்றியது.

சற்று நேரத்திற்குள் உதயன் ஜோதிபுரத்திலுள்ள அனாதை இல்லத்திற்குப் படிக்கப் போகிற செய்தி அந்தக் குப்பம் முழுவதற்கும் தெரிந்துப் போயிற்று. ஆனால், அதைப் பற்றி ஒருவரும் மகிழ்ச்சியடைந்ததாகத் தெரியவில்லை.

ஒரு மீனவர் அவனிடம் வெளிப்படையாகவே, "ஏண்டா பயலே உனக்கு இந்தப் புத்தி...? பரந்து கிடக்கிற இந்தக் கடல், எத்தனை பேருக்கு வேணும்னாலும் சோறு போடுமே...? இதை விட்டுட்டு அங்க என்ன பிழைப்பு பிழைக்கப் போறே...?" என்று அதிருப்தி தெரிவித்தார்.





''ராமருக்கு பிடிச்ச கிரிக்கெட் வீரர் யாரு?''
'''அணில்' கும்ப்ளேதான்!''
— பா. ஜெயக்குமார்

அவன் வயதொத்த சிறுவர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு, "ஏண்டா, நாம அத்தினி பேரும் அந்த கடலம்மாவோட பிள்ளைங்க... யாரும் அனாதை இல்ல. எங்களையெல்லாம் விட்டுட்டு, அங்க போறேன்னு சொல்றியே! உனக்கு எப்படி மனசு வருது?" என்று கேட்டனர்.

எல்லோரிடமும், உதயன் திரும்பத் திரும்ப நான் படிக்கப் போறேன். என் அப்பாவின் ஆசையை நிறைவேற்றப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டே இருந்தான்.

அன்று மாலை கடற்கரைக்குச் சென்றவன் கடலுக்குள் மறைந்து போன தன் தகப்பானரை நினைத்து கன்னங்களில் கண்ணீர் வழிய வெகுநேரம் உட்கார்ந்து கொண்டிருந்தான். 'உங்க ஆசையை நிறைவேற்ற, இந்தக் குப்பத்தை விட்டு பொறேம்பா... நிச்சயம் ஒருநாள் எல்லாருமே வியக்கிற மாதிரி பெரியவனா திரும்பி வருவேன்' என்று உதட்டுக்குள் முணுமுணுத்தான்.

கால்களில் திரும்பத் திரும்ப வந்து மோதிய வெள்ளலைகளும், கேசத்தைக் கலைத்து விளையாடிய கடற்காற்றும் அவனை வாழ்த்தி வழி அனுப்புவதைப் போலும், பிரிய மனமில்லாமல் தவிப்பதைப் போலும் தங்கள் செயலைத் தொடர்ந்தன.

பொழுது சாய்ந்து, கடல் விளிம்பில் சந்திரன் உதயமாகியது. அதன் மெல்லிய வெளிச்சத்தில் தங்கமாகத் ததும்பிய கடல் நீரையும் வெள்ளி போல் பளிச்சிட்ட மணல் மேடுகளையும் பார்த்துக் கொண்டேயிருந்தான் உதயன். தான் விளையாடிக் களித்த தென்னந்தோப்புகளை ஏக்கத்துடன் பார்த்தவன் இனி என்று இவைகளை மீண்டும் காண்போமோ என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

துருப்பிடித்த ஒரு பழைய தகரப் பெட்டியில் தனது கிழிந்த ஆடைகளை அடைத்துக் கொண்டு, கருத்தமுத்துவையும், சடையனையும் துணைக்கு அழைத்துக் கொண்டு ஜோதிபுரம் வந்து சேர்ந்த அந்தப் புதிய சூழ்நிலை உதயனுக்கு, பிரமிப்பை ஏற்படுத்தியது.

கடைகளும், வாகனங்களும், வீடுகளும் எங்கு பார்த்தாலும் மனிதர்களும் நிரம்பிய ஒரு நெருக்கமான சூழலை அவன் இப்போதுதான் பார்க்கிறான்.

மூவரும் விலாசம் விசாரித்து கருணை இல்லத்துக்கு வந்து சேர்ந்தார்கள். பிரமாண்டமாக தங்கள் முன் எழுந்து நின்ற சிமெண்ட் கட்டடங்களும், கம்பி முள் வேலிக்கு அப்பால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து கிடந்த காய்கறித் தோட்டங்களும் அவர்களை வரவேற்றன.

வெளியே நின்று கொண்டிருந்த பணியாளர் ஒருவர், அவர்களைப் பார்த்து புன்முறுவலுடன். "என்ன வேணும்" என்று கேட்டார்.

கருத்துமுத்து அங்கிருந்து உதயனுக்கு வந்த கடிதத்தை எடுத்து அவரிடம் கொடுத்தார். அதை படித்துப் பார்த்தவர், "சரி வாங்க, அம்மா உள்ளே தான் இருக்காங்க... பார்த்துரலாம்" என்று அழைத்துச் சென்றார்.


அந்தப் புதிய சூழ்நிலை மனதுக்குள் ஒரு அச்சத்தை ஏற்படுத்த, படபடக்கும் நெஞ்சோடு வெளியே காத்துக் கொண்டு நின்ற உதயனின் மனதில், "இவ்வளவு பெரிய இடத்திலா நான் படிக்கப் போகிறேன்...? இந்த வசதி நிறைந்த இடத்தில் அனாதையான என்னை ஆதரிக்க நல்ல மனம் உடையவர்கள் இருக்கிறார்களா?' என்று கேள்விகளும், எதிர்பார்ப்புகளும் மாறி மாறி எழுந்தன.

"அம்மா கூப்பிடறாங்க" என்ற பணியாளரின் கனிவான குரலைக் கேட்டு சுயநிலையடைந்த உதயன் பயத்தோடும், தயக்கத்தோடும், படபடப்போடும் மற்ற இருவரும் பின் தொடர உள்ளே நுழைந்தான்.

(தொடரும்)







படிக்கல்!

சிறிதாய் உளியை வடித்தாலும்
சிறிதும் கவலை அதற்கில்லை - மலை
சிதைக்கும் திறனில் குறைவில்லை.

சிறிதாய் வைரம் திகழ்ந்தாலும்
செம்பொன் ஒதுக்கி விடவில்லை - அது
சிறிதும் மதிப்பில் கெடவில்லை!


சிறிதாய் ஊற்றுக் கசிந்தாலும்
சிணுங்கி அதன்கண் அழவில்லை - தாகம்
தீர்த்து வைக்க மறுப்பில்லை!

சிறிதாய் முத்து விளைந்தாலும்
சிறுமை நினைந்து துயரில்லை - அது
சிரிக்கும் அழகு இணையில்லை!


சிறிதாய் கடுகு இருந்தாலும்
சிந்தை வேதனைப் படவில்லை - காரம்
சிறிதும் குறைந்து விடவில்லை!

சிறுவன் என நீ தயங்காதே!
செயல்படு! வானம் உனது எல்லை - இமயச்
சிகரம் உனக்குப் படிக்கல்லே!

-பல்லவன்,



எத்தனை மூன்று? எத்தனை இரண்டு?



விடை: மூன்று :21, இரண்டு : 4



வண்ண வண்ண வாயில் தோரணம்!

கே. குப்புராஜ்

வாசற்படிக்கு மேல், சாமி அலமாரியில், இதைக் கட்டி அழகுபடுத்தலாம். வெறும் சுவரில் கூட இரண்டு ஆணிகளுக்கு நடுவில் இதை மாட்டி வைத்து வீட்டின் அழகுக்கு மெருகூட்டலாம்.

<u>*தேவையான பொருட்கள் :*</u>


1. காலியான வெள்ளை பிளாஸ்டிக் சிமிண்ட் (கோணி) பை. (15 செ.மீ. அகலம், ஒரு மீட்டர் நீளம்)

2. அழகான அகல ரிப்பன் (சிமெண்ட் பிளாஸ்டிக் (கோணி) பை நீளத்திற்கு)

3. வண்ண கண்ணாடி மெல்லிய டியூப்கள் (Chally)

4. வண்ண உல்லன் நூல்

5. பிளாஸ்டிக் வண்ண மணிகள்




6. பிளாஸ்டிக் மணிகள் (Bell)

7. பெவிகால் ஒரு டியூப்

8. ஊசியும், நூலும்.

9. பிளேடு, கத்தரி


இவையாவுமே கடைகளில் விலைக்குக் கிடைக்கும்.



இந்த வண்ணத் தோரணத்தின் அடித்தளம் (Base) வெள்ளை பிளாஸ்டிக் சிமெண்ட் (கோணி) பைதான். அதனால் இதை நன்கு பிரித்து ஓரத்தில் பிசிர் இன்றி, சுருக்கம் இன்றி 15 செ.மீ. அகலம் ஒரு மீட்டர் நீளத்திற்குத் தயார் செய்து வைத்துக் கொள்ளவும். இதே நீளத்திற்கு வண்ண ரிப்பன் இருக்க வேண்டும். பிளாஸ்டிக் சாக்கின் நீள அகலத்தை உங்கள் வீட்டு வாசற்படியின் அளவுக்குக் கூடக் குறைத்துக் கொள்ளலாம். அதே அளவுக்கு அகல ரிப்பனின் நீளத்தையும் குறைத்துக் கொள்ளலாம்.

அகல ரிப்பனை அகலவாட்டில் மடித்து சாக்கின் மேல் பக்கத்தை மூடி கெட்டியாகத் தைத்து விடவும். கோணியின் மேல்பக்கம், இப்பொழுது மடித்துத் தைக்கப்பட்ட ரிப்பனுக்குள் இருக்கும். ரிப்பன் எத்தனை அகலமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு இது உறுதியாகவும் அழகாகவும் அமையும். தையல் இறுக்கமாக கோணி இழைகள் பிரியாத அளவுக்கு இருக்க வேண்டும்.


இனி, சாக்கின் நீளவாட்டத்தில் உள்ள அத்தனை சாக்கு இழைகளையும் பிரித்து எடுத்து விடுங்கள். இப்பொழுது, உயர வாட்டத்தில் உள்ள சாக்கு இழைகள் மட்டும் ஜாலர் வைத்த மாதிரித் தொங்கிக் கொண்டிருக்கும். பிசிர் எதுவும் இல்லாமல் இதைப் பொறுமையாகச் செய்ய வேண்டும். பிசிர் இருந்தால் முறுக்கிக் கொள்ளும். இனி, தொங்கும் சாக்கு இழைகளை கண்ணி வைத்தது போல் பிரித்துக் (Graduate) கொள்ளுங்கள். உங்களிடம் உள்ள நீண்ட கண்ணாடிக் குழாய்கள், பாசிமணிகள், பெல் ஆகியவற்றின் எண்ணிக்கையைப் பொறுத்தது. ஒவ்வொரு பிரிவிலும் (கண்ணியிலும்) சிக்கியுள்ள இழைகளை முறுக்கிக் கொண்டு அதில் முதலில் ஒரு குண்டுமணி, பிறகு கண்ணாடிக் குழாய், அடுத்து ஒரு குண்டு மணி மறுபடி ஒரு குழாய், கடைசியில் பெல் என்று கோத்து முடிந்து விடவும்.



"நத்தையாரே, ஏன் வருத்தமா இருக்கீங்க."

"ஓட்டப்பந்தயத்துல என்னை கலந்துக்கக் கூடாதுனு சொல்லிட்டாங்க.

– பா. ஜெயக்குமார்



ஒரு முடிச்சு (கண்ணி) இப்படி வந்தால், அதை அடுத்து வரும் கண்ணியைச் சுற்றி வித்தியாசமாக முக்கோணவடிவில் வருவது போல் பாதியில் இருந்து மணிகளாகவே வருவது போல் கோத்து நுனியில் உல்லன் நூலால் பூ முடிச்சுப் போடவும். இதற்கு அடுத்த கண்ணியை (பிரிவை) முதலில் அமைத்த மாதிரியே அமைக்கலாம். இப்படி மாற்றி மாற்றி தொங்கும் பகுதியை அமைக்க வேண்டும்.


இது முழுக்க முழுக்க உங்கள் கற்பனைத் திறனைப் பொறுத்தது. மணி (Bell)களுக்குப் பதில் சின்னச் சின்ன பிளாஸ்டிக் பொம்மைகள் கிடைத்தால் வைக்கலாம். ரசகுண்டுகள் கிடைத்தால் வைக்கலாம். பாசிமணிகள், ஜிகினா சுருள்களைக் கொண்டு அழகுபடுத்தலாம். பளபளப்பான வண்ணமுடைய எதை வைத்துச் செய்தாலும் இதன் அழகு கூடும். வண்ண நூல் குஞ்சங்கள் கூட வைக்கலாம். ஒரே அளவில் நிறைய மணி கிடைத்தால், கிராஃப் ஷீட்டில் நல்வரவு, வணக்கம் போன்றவற்றை எழுதிக் கொண்டு, கட்டங்களை அளந்து, அதற்கு ஏற்ற எண்ணிக்கையில் மணிகளை எடுத்துக் கொண்டு சாக்கின் இழைகளில் கோத்துச் செய்யலாம். பொறுமையும் கற்பனைத் திறமையும் தேவை. அக்கறைக்கும் உழைப்புக்கும் ஏற்றபடி கண்டிப்பாகப் பலன் கிடைக்கும். வீட்டுக்கு வருவோர் கவனத்தை இது கண்டிப்பாகக் கவரும். முடிந்த பிறகு இரு முனைகளிலும் கெட்டியாகக் கயறு கட்டி வாசற்படி மேல் மாட்டி விடலாம். நவராத்திரி கொலு வைக்கும் இடத்தில் கூட அதற்கு ஏற்றபடி நீளமாகச் செய்து மாட்டலாம். ஊர்வலங்கள் நடத்தும் போது இதைப் போல் பெரிய அளவில் செய்து இரு பக்கங்களையும் குச்சியில் கட்டி எடுத்துக் கொண்டு போகலாம். முதல் முறையே சரியாக வரும் என்று எதிர்பார்க்காதீர்கள். ஒருமுறை செய்த பிறகுதான் அதில் தேவைப்படும் மாற்றங்கள் என்ன என்பதை உங்களால் உணர முடியும்.

''பிள்ளையாரே... என்னை நிச்சயம் பாஸ் பண்ணவை.''

''எப்படி நம்பறே?''


''எல்லோரும் நிவேத்தியமா கொழுக்கட்டையை வெச்சபோது, நான் மட்டும் வித்தியாசமா ஐஸ்கிரீம் வெச்சிருக்கேனே.''

– இரா. திலிப்



எந்தச் சேவல்?

கட்டத்தில் உள்ளதைப் போல் உள்ளது எந்தச் சேவல்?



விடை : 12

சோறு சமைத்து விளையாடுவது கிராமத்துச் சிறுமிகளுக்கு பிடித்தமான பொழுதுபோக்கு. கம்ப்யூட்டர் யுகத்தில் நகரங்களில் இதைக் காண முடியாது. எனினும் இன்றும் இதைக் கிராமங்களில் காணலாம்.



சின்னி சமைத்த சோறு!

வீட்டின் வாசல் கதவைச் சாத்திக் கொண்டு அம்மா வெளியே புறப்பட்டாள். போகும்போது "சின்னி. வீட்டைப் பார்த்துக்க. திரும்ப நேரம் ஆகும். திறந்து போட்டுட்டு வெளியே எங்கிட்டும் போயிடாதே. வேணும்னா உன் தோழிங்க எல்லாரையும் சேர்த்துக்கிட்டு என்ன வேணுமின்னாலும் வீட்டுக்குள்ளயே விளையாடு'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

சின்னிக்கு ஒரே மகிழ்ச்சி. உண்மையில் அவள் பேர் சிவகாமி. சுருங்கி சின்னியாகி விட்டது!

அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால். பள்ளி விடுமுறை. அம்மாவே அனுமதி தந்து விட்டதால், பக்கத்து வீடுகளில் இருக்கும் தோழிகளை சின்னி அழைத்து வந்தாள். வீட்டில் வேறு யாரும் இல்லை. அப்பா எதற்காகவோ வெளியூர் சென்றிருந்தார். கிரிக்கெட் மாட்ச் என்று அண்ணா போய் விட்டான். அதனால் இப்போது வீடு முழுதும் அவளுக்குச் சொந்தம். தோழிகளுடன் சுதந்திரமாக விளையாடலாம்.

கௌசல்யா, ஜீனத், சுலோச்சு. ரங்கநாயகி, மணிமேகலை, வனஜா, சாவித்திரி, கல்யாணி என்று அவளுடைய தோழிகள் பட்டாளம் உடனடியாகக் கூடி விட்டது. தன் நான்கு வயதுத் தம்பியையும் வனஜா கூட்டிக் கொண்டு வந்திருந்தாள். கூச்சலும், கும்மாளமும் தொடங்கிவிட்டன.

என்ன விளையாட்டு விளையாடுவது என்பது குறித்து சின்னி ஏற்கெனவே தீர்மானித்து வைத்திருந்தாள். சொல்லப் போனால், இது ஒரு விளையாட்டா என்று கூடத் தோன்றும்.

சின்னியிடம் ஒரு சின்ன வெண்கலப் பானை இருந்தது. எதுக்காகவோ தன்னிடம் பொத்திப் பொத்தி பத்திரமாக வைத்திருந்த இந்த வெண்கலப் பானையை அவளுடைய பாட்டி சின்னியிடம் கொடுத்து, "இந்தாடி சின்னி, சின்ன வயசுல நான் வச்சுக்கிட்டு விளையாடின வெங்கலப் பானை இது. இப்ப நீ பத்திரமா வச்சுக்க. விளையாடு. உனக்கு எல்லா விதமான செல்வமும் வரும்'' என்றார். சின்னியும் அதை பொக்கிஷமாகத் தன் விளையாட்டுச் சாமான் பெட்டியில் வைத்துக் கொண்டு, அது சற்றுக்

திருவாழுத்தான்

கருக்கும்போதெல்லாம் புளி போட்டுப் பளபளப்பாகத் தேய்க்கிறாள்.

அந்த சின்ன வெண்கலப் பானையில் சின்னி இன்று சோறு ஆக்க இருக்கிறாள். அவளுடைய தோழிகள் அனைவரும் சாப்பிடப் போகிறார்கள்!

சொல்ல மறந்து விட்டேனே! சின்னி யிடம் சின்ன அடுப்பு ஒன்றும் இருக்கிறது. இந்த அடுப்பும் பாட்டி பண்ணிக் கொடுத்ததுதான். அழகான அடுப்பு. மூன்று கொம்மைகளுடன் கூடியது. தரை யில் வைத்தால் ஆடாமல் அசையாமல் சிக்கென அமர்ந்து கொள்ளும். ஒருசமயம் சமையல் அறையில் புதியதாக ஒரு கொடி அடுப்பைக் களிமண்ணால் பாட்டி பண்ணியபோது, கூட இருந்து உதவிய சின்னிக்கு இந்தச் சின்ன அடுப்பைப் பாட்டி செய்து கொடுத்தார்.

அந்தச் சின்ன அடுப்பையும், சின்ன வெண்கலப் பானையையும் பார்த்துப் பார்த்து அவளுடைய தோழிகள் வியந் தனர். அவர்கள் அடுப்பையே அறியாத 'காஸ் சிலிண்டர்' காலத்தவர்கள். அடுப் பைப் பற்ற வைத்து, அந்த வெங்கலப் பானையில் சோறு ஆக்கி, அவர்களை உட்கார வைத்து சாப்பாடு போடப் போவதாக சின்னி சொன்னதும், தோழிகளுக்குத் தலை, கால் புரியவில்லை. வெண்கலப் பானை வைத்து அடுப்பில் சமைப்பது அவர்கள் அறியாத ஒன்று! கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கண்டதில்லை! இப்போ காண்பதோடு சாப்பிடவும் போகிறார்கள்! ஒரே கூத்து! வீட்டுத் திண்ணை திமிலோகப்பட்டது.



ஆழாக்கில் வீட்டினுள்ளிருந்து சின்னி அரிசி எடுத்து வந்தாள். மணி மேகலை குச்சி, சுள்ளிகளை ஒடித்து சின்னச் சின்ன விறகாக எடுத்து வந்தாள். எவர்சில்வர் டபராவை எடுத்துக் கொண்டு சாவித்திரி அரிசியை நன்கு நீர் விட்டுக் களைந்தாள். ரங்கநாயகி கொஞ் சம் காகிதம் வைத்து அடுப்பில் தீ மூட்டி விட்டு, சுள்ளிகளைச் செருகினாள். ஜீனத் அடுப்பின் மீது அந்தச் சின்ன வெங்கலப் பானையை வைத்து அரை மட்டத்துக்கு நீர் ஊற்றினாள். நீர் சிறிது சூடு ஏறவும், சாவித்திரி களைந்த அரிசியை வெண் கலப்பானையுள் அரிசி சிந்தாமல் எச் சரிக்கையுடன் போட்டாள்.

உலை தளைக்கத் தொடங்கியது. அனைவரும் அடுப்பைச் சுற்றி உட்கார்ந்தனர்.

"கௌசல்யா, வாசல் பூவரச மரத்து மேலே ஏறி பத்து இலைகளைக் கிள்ளிக் கிட்டு வா. இன்னிக்கு எல்லாருக்கும் இலை போட்ட சாப்பாடு" என்றாள் சின்னி.

கௌசல்யா சென்றாள். போன பிற வியில் அவள் குரங்காக இருந்தாளாம்.



அதனால்தான் இந்தப் பிறவியில் அவள் விடுவிடுவென்று மரம் ஏறுகிறாளாம்! பள்ளியில் தோழிகள் பேசிக் கொள்வார்கள்.

உலை கொதித்துச் சோறு ததும்பியது. ஸ்பூனால் ஒரு பருக்கையை எடுத்து, இரு விரல்களுக்கு இடையே சின்னி பதம் பார்த்தாள். அரிசி வேகவில்லை. இருந்தாலும் உலை பொங்கி வழியத் தொடங்கியது.

"தெரியாமல் ஜாஸ்தி அரிசி போட்டு விட்டோம்க!" என்றாள் அவள்.

"இந்த சின்ன வெங்கலப் பானை எவ்வளவு அரிசி பிடிக்கும் என்பது தெரியத்தான் இல்லை'' என்று ஜீனத் சொன்னாள்.

கடைசியாகப் பொங்கி வழிந்தது போக, சோறு ஒருவாறாகப் பதமாக ஆகியது. அடுப்பை அவித்தாள் சின்னி.

"கொஞ்ச நேரம் ஆகட்டும். சோறு உலை ஆற வேண்டும்" - கௌசல்யா சொன்னாள்.

ஒவ்வொருவரும் எதிரே பூவரசு இலையை வைத்துக் கொண்டு சாப்பிடக் காத்திருந்தனர். உண்மையிலேயே அந்த

இரண்டும் கெட்டான் நேரத்தில் அவர்களுக்குப் பசிக்க ஆரம்பித்தது.

"ஆமா, ஏண்டி! வெறும் சோத்தையா தின்னப் போறோம்? கூட்டிப் பிசைய குழம்பு வேணாமா?" என்று கேட்டு அனைவரையும் திகைக்க வைத்தாள் ரங்கநாயகி.

"ஆமா!, குழம்பு, ரசம் ஏதாச்சும் வேணுமே?" என்றாள் வனஜா.

"இருங்க. சமையல் அறையிலே அம்மா மதிய நேரத்துக்குழம்பு ஏதாச்சும் மீதம் வச்சிருக்காங்களானு பார்த்து எடுத்திட்டு வரேன்" என்று சொல்லிவிட்டு சின்னி வீட்டினுள் சென்றாள். சென்றவள் சற்று நேரத்தில் ஒரு அலுமினிய சட்டியுடன் திரும்பி வந்தாள். மணத்தது வெங்காயக் குழம்பு!

ஏற்கனவே எல்லாருக்கும் பசி. இந்த வெங்காயக் குழம்பு மணமும் சேரவே, வயிற்றினுள் இரைப்பை புரண்டு கொடுத்தது.


ஒவ்வொரு பூவரசு இலையிலும் இரண்டு இரண்டு ஸ்பூன் சாதத்தை சின்னி வைத்தாள். சாதத்திலிருந்து ஆவி எழுந்தது. அந்த சாதத்தின் மீது இரண்டு இரண்டு ஸ்பூன் குழம்பை ஊற்றினாள். அனைவரும் பிசைந்து ஒரே வாயில் போட்டுக் கொண்டனர்.

"இப்படித் தின்னா நான் என்னடீ பண்ணுவேன்? கொஞ்சம் கொஞ்சமா விரலால் எடுத்துச் சாப்பிடுங்கடீ!" என்றாள் சின்னி கோபத்துடன். விளையாட்டுச் சாப்பாடு என்றால், விருந்துச் சாப்பாடு என்று நினைத்துக் கொண்டு விட்டார்களே என்பதாக சின்னிக்குக் கோபம்.

எலிகள் எல்லாம் சேர்ந்து விளையாட்டுப் போட்டி நடத்தறதாமே! என்ன அது?

எலிம்பிக்

- பா.ஜெயக்குமார்.



பூவரசு இலைகளைக் காலி செய்துவிட்டு, ஒவ்வொருவரும் மற்றவரின் முகத்தை நோக்கினர். இந்த இரண்டு ஸ்பூன் சாப்பாடு அவர்களுடைய பசியை வெகு தீவிரமாகக் கிளப்பி விட்டிருந்தது.

"என்னடீ பார்க்கிறீக?" என்றாள் சின்னி. அவளும் சாப்பிட்டு விட்டு, விரலை நக்கினாள்.

"ரொம்பப் பசிக்குதடீ!" என்றாள் மணிமேகலை.

"எனக்கும்தான்!"

"எனக்கும்தான்!"

"எனக்குக்கூட ரொம்பப் பசிக்குது" என்றான் வனஜாவின் குட்டித் தம்பி பாஸ்கரன்.

அவர்களுடைய முகங்களைப் பார்த்தாள் சின்னி. பாஸ்கரனின் முகத்தில் அவளுடைய பார்வை நிலைத்தபோது, அந்தச் சின்னப் பையனைப் பசியால் தவிக்க விடக் கூடாது என்று அவளுக்குத் தோன்றியது.

எழுந்து சமையல் அறைக்குச் சென்றாள். திரும்பியபோது, அவளுடைய இரு கைகளிடையே பெரிய வெண்கலப் பானையே இருந்தது. அடி கருத்த வெண்கலப் பானை.

அந்தச் சின்ன பூவரசு இலைகளிலேயே அனைவருக்கும் சாதம் பறிமாறப்பட்டது. ஆறின சாதம். சின்னி கையால் எடுத்து எடுத்து வைத்தாள். குழம்பு ஊற்றினாள். ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் என்று பிசைந்து எல்லாரும் உண்டனர். பெரிய வெண்கலப் பானையும் காலி, சட்டிக் குழம்பும் காலி!

இரவு அண்ணன் சாப்பிட உட்கார்ந்த போது, அவனுக்குப் பரிமாற அம்மா வெண்கலப் பானையைத் திறந்து பார்த்தாள். பகீர் என்றது. துடைத்து வைத்திருந்தது வெங்கலப் பானை! அலுமினியச் சட்டியின் மூடியை விலக்கிப் பார்த்த போது, குழம்பும் காலி!


சாதமும், குழம்பும் எப்படி மாயமாகப் போயிற்று என்று அதிசயப்பட்டு, அம்மா சின்னியை அழைக்க எண்ணினாள். "என்ன வேணுமோ செய்துக்கோ; விளையாடிக்கோ!" என்று அனுமதி கொடுத்தது நினைவுக்கு வந்தது. சிரித்துக் கொண்டு மறுபடி சமைக்க ஆரம்பித்தாள்.

சிங்கராஜாவுக்குக் காலில் பலமான அடி. இரையைப் பிடிக்கப் பாய்ந்த போது தவறிப் போய்க் கீழே விழுந்து, கிடுகிடு பள்ளத்தில் உருண்டு விட்டார். வலது பின் கால் எலும்பில் சரியான அடி. வீங்கி விட்டது. வலி உயிர் போனது

சிங்கராஜாவைப் பள்ளத்தில் இருந்து மேலே தூக்கி வருவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. காட்டில் உள்ள மிகப் பெரிய வி.ஐ.பி. மருத்துவமனையில் சிங்கராஜாவைச் சேர்த்தார்கள். டாக்டர் கரடியார் தனியான அக்கறை எடுத்துக் கொண்டு சிகிச்சை அளித்தார். படுத்த படுக்கையாகக் கிடந்த சிங்கராஜாவை பார்வையாளர் நேரத்தில் விலங்குகள் காணவந்தன.

குரங்குகள் கனிந்த பழங்களைக் கொண்டு வந்து கொடுத்து "சிங்கராஜா, நீங்கள் விரைவில் குணமடைந்து அரண்மனைக்குத் திரும்ப வேண்டும்" என்று வாழ்த்தின. கரடிகள் பாட்டில் நிரம்பத் தேன் கொண்டு வந்து தந்தன. குயில்கள் வந்து இனிய குரலில் பாடி, சிங்கராஜாவை மகிழ்வித்தன. மின்மினிப் பூச்சிகளும், பட்டாம் பூச்சிகளும் சாம்பிராணி போட்டன. மான்கள் கூட்டம், போட்டி போட்டுக் கொண்டு ஆடி மகிழ்வித்தன. பறவைகள் பறந்து நலம் விசாரித்தன.

தனது உடல் நலத்தில் இவைகளுக்கெல்லாம் உள்ள அக்கறையைக் கண்டு சிங்கராஜா மனம் நெகிழ்ந்து போனார். அந்த நேரத்தில் பாட்டுச் சத்தம் கேட்டது. ஆமாம். கொசுதான் பாடிக் கொண்டே நலம் விசாரிக்க சிங்கராஜாவின் அறைக்குள் வந்தது.



"சிங்க ராஜா, கவலையே வேண்டாம். நீங்கள் விரைவில் குணம் பெறுவீர்கள். எப்பொழுது தேவைப் பட்டாலும் சொல்லுங்கள். நான் வந்து .... தருகிறேன்" என்றது கொசு.


"ஐயோ, வேண்டாம்! வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! நீ சும்மா போனால் போதும்!" என்று அலறினார் சிங்கராஜா.

சிங்கராஜா இப்படி அலறும்படி கொசு என்ன கூறியிருக்கும் என்பதை யோசியுங்கள். அதை ஒரு தபால் கார்டில் எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி, அனுப்புங்கள். உங்கள் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடுங்கள். அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கட்டாயம் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான பதிலை எழுதினால், குலுக்கல் முறையிலேயே பரிசு தரப்படும். முடிவு தேதி. 31.10.96. தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு கோகுலம் பொறுப்பல்ல. ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

ஓரங்க நாடகம்

துடுப்பில்லாத படகோட்டி!



பங்குகொள்வோர்:

ஷியாம், பிரகாஷ், திவ்யா, ரமேஷ், அனுபமா, சுமதி, சங்கீதா, தாத்தா

ஷியாம்: தாத்தா பொழுது போகலையே?

தாத்தா: பொழுது போகலையா? இந்த ஃபிளாட்லே இருக்கிற உங்க அத்தனை பேருக்கும் நல்லா ஓவியம் போட வரும் இல்லே? போட வேண்டியதுதானே? சரி, கவலைப்படாதீங்க. இப்ப நான் இருக்கேன். என்னோட விடுகதையும் இருக்கு!

ஷியாம்: ஆமாம்! மறந்தே போயிட்டோம். உங்க பேரே 'விடுகதைத் தாத்தா' தானே? இருங்க, இப்பவே மாடிக்குப் போய் ரமேஷ், அனுபமா, சுமதி, சங்கீதா எல்லாரையுமே இங்கே வரச் சொல்றேன். அனுபமா! ரமேஷ்! சங்கீதா! எல்லோரும் ஓடிவாங்க! விடுகதைத் தாத்தா வந்திருக்காரு. விடுகதை சொல்லப் போறாரு!

அனுபமா: ஹை! விடுகதைத் தாத்தாவா! சங்கீதா, சுமதி, ரமேஷ் எல்லாரும் வாங்க. கீழே போகலாம்! தாத்தா ! இதோ வந்துட்டோம்!

தாத்தா: வாங்கடா வாலுப் பசங்களா! மொதல்லே சத்தம் போடாம அமைதியா உட்காருங்க!

ஷியாம்: ம்! விடுகதையை ஆரம்பிங்க தாத்தா!

தாத்தா: ம்! இதோ பாருங்க, நான் விடுகதையை ஆரம்பிப்பேன்! வரிசையா ஒவ்வொருத்தரையா கேட்டுக்கிட்டே வருவேன். தெரியல்லேன்னா தெரியல்லேன்னு சொல்லணும்! ம்?

திவ்யா: சரி தாத்தா!

தாத்தா: மொதல் விடுகதை. மண்ணில்லாம தோட்டம் போட்டேன்.. விதையில்லாம செடிகள் வளர்த்தேன்– ஆனால் அறுவடையே இல்லை

சங்கீதா: அறுவடையில்லேன்னா...

தாத்தா: அறுவடையில்லேன்னா, அதுலேந்து காய், பழம் எதுவும் எடுக்கக் முடியல்லேன்னு அர்த்தம். இன்னும் கேளுங்க! தண்ணியில்லாம பாத்தி கட்டினேன்! வேலியில்லாம சட்டம் போட்டேன். கண்ணுக்கும் வீட்டுக்கும் அழகாச்சே! என்ன அது?

பிரகாஷ்: என்ன! மண்ணில்லாத தோட்டமா? அது எப்படித் தாத்தா முடியும்?

அனுபமா : விதையில்லாத செடியா? அது எப்படித் தாத்தா முளைக்கும்?

தாத்தா: ம்! முளைக்கும்!

திவ்யா: தண்ணியில்லேன்னா செடி எப்படி வளரும்?

சங்கீதா: வேலி இல்லேன்னா ஆடும், மாடும் தோட்டத்தைப் பாழடிக்கும்! அதை வரக்கூடாதுன்னு எப்படி சட்டம் போட முடியும்?

ஷியாம் : ஆனா கண்ணுக்கு மட்டும் அழகா? என்னடா இது? மூளை குழம்பறதே!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

தாத்தா: என்ன தெரியல்லையா?

பிரகாஷ்: போங்க தாத்தா! நீங்க ரொம்ப கஷ்டமானதா கேக்கறீங்க. நாங்க பதில் சொல்றமாதிரி சுலபமா கேளுங்க!

அனுபமா: ஆமாம் தாத்தா... ஒண்ணும் ரெண்டும் எவ்வளவுங்குற மாதிரிக் கேட்டா பிரகாஷ் 'டக்'குன்னு பதில் சொல்லிடுவான்!

தாத்தா: கஷ்டமான காரியங்களைச் செய்ய முயற்சிக்கறதுதான் நமக்குப் பெருமை! இது அப்படி ஒண்ணும் கஷ்டமில்லை! எல்லாருமா சேர்ந்து நல்லா யோசனை பண்ணிச் சொல்லுங்க! இன்னும் அஞ்சு நிமிஷம் டைம் தரேன். அதுக்குள்ளே உங்களுக்கு ஒரு வேலை தரேன்! பிரகாஷ்! ஒரு பெரிய வெள்ளை பேப்பர் கொண்டு வா! திவ்யா நீ கலர் பென்சில் கொண்டுவா!

திவ்யா: இதோ கொண்டு வரோம்!

தாத்தா: இப்போ ரொம்ப ரொம்ப சுலபமான விடுகதைகளை சொல்லப் போறேன். ரொம்ப சுலபம்- நீங்களும் 'பட்பட்'டுன்னு விடை சொல்லப் போறீங்க!


ஷியாம்: என்ன தாத்தா இது? முதல் விடுகதைக்கே விடை கண்டுபிடிக்கல்லே. இன்னும் விடுகதையா?

தாத்தா: இப்ப சொல்லப்போற விடுகதைகளுக்கு வர விடைகளுக்கும், மொத்த விடுகதைக்கான விடைக்கும் சம்பந்தம் இருக்கு.

பிரகாஷ்: அப்படியானா சொல்லுங்க... சொல்லுங்க?

தாத்தா: மூன்று கோட்டை போட்டுக்கிட்டு, மூங்கில் காட்டில் துள்ளுது ராஜா! இந்த ராஜா யாரு?

அனுபமா: மூணு கோட்டா? எதுக்கு மூணு கோட்டு?



தாத்தா: கோட்டுன்னா துணிக்கோட்டு இல்லே. கோடு...

திவ்யா: தாத்தா! விடை கண்டு பிடிச்சுட்டேன். அணில்தானே விடை!

தாத்தா: சபாஷ்! அணில் முதுகிலே மூணுகோடு இருக்குமில்லே- சரி, திவ்யா நீ இப்ப இந்த வெள்ளை பேப்பர்லே இந்த ஓரத்திலே ஒரு மூங்கில் புதரை போட்டு, அணில் கூட்டத்தையும் வரையணும்!

திவ்யா: சரி தாத்தா!

தாத்தா: ஷியாம் இந்த விடுகதை உனக்கு! கருப்பாயிருப்பான் குண்டோதரன்- வானம் தொட்டுப் பார்க்கும் மண்டோதரன்; கரிய மேகம் தடுத்திடுவான்- கடும் மழையைத் தந்திடுவான்!- இது எது?

ஷியாம்: தாத்தா இது மலை! மலை மேகத்தைத் தடுக்கறதனால மழை வரும். சரியா தாத்தா?

தாத்தா: ரொம்ப சரி! இப்ப நீ சொன்ன மலையை இதோ இந்த மூங்கில் காட்டுக்குப் பின்னால வரை! பிரகாஷ் அடுத்த விடுகதை உனக்குத்தான்!

பிரகாஷ்: சொல்லுங்க தாத்தா...!

தாத்தா: யாரோ வீசிய பஞ்சுக் கூட்டம், அசைந்து காற்றிலே போகுது! பிடிக்க அதனை ஆளில்லை; பிடித்தும் கையில் சிக்கலை.

பிரகாஷ்: தாத்தா இதுக்கு விடை மேகம்!

தாத்தா: சரியான விடை! இந்த மேகக் கூட்டத்தை இந்த மலைக்குப் பின்னால நீ வரை! மடமடன்னு வரையணும்!


அனுபமா: தாத்தா அடுத்த விடுகதை எனக்கு...

தாத்தா: காலில்லாம ஓடுது ஒண்ணு ரொம்ப தூரம். அது கரையில்லேன்னா ஓட முடியாம படுத்துறங்கும்! இது எது?

அனுபமா: கரையில்லேன்னா காணாம போயிடுமா? தாத்தா இதுக்கான விடைக்கு எத்தனை எழுத்து?

தாத்தா: ம்! அதைச் சொல்லணுமா? சரி, ரெண்டே எழுத்து!

அனுபமா: அதே இரண்டை மூணால பெருக்கி, வரதுதான் இந்த விடுகதைக்கு



இந்தியா

நமது நாடு இந்தியா!
நம்மை நாமே ஆள்கிறோம்!
சமயச் சார்பு இல்லையே!
சாதி பேதம் இல்லையே!

மக்கள் பேசும் மொழிகளால்
மாறுபட்ட போதிலும்
ஒற்றுமை யோடு வாழுவோம்
ஒருதாய் மக்கள் போலவே!

கருத்து பேதம் ஆயிரம்
காணப்பட்ட போதிலும்!
ஒருமைப் பாட்டைப்
பேணுவோம்
உரிய தீர்வு காணுவோம்!

நாட்டின் வளத்தைப் பெருக்கவே
நமது உழைப்பை நல்குவோம்!
வாட்டும் வறுமை ஓட்டியே
வையப் புகழை நாட்டுவோம்!

-புலேந்திரன்



விடை! சரிதானா தாத்தா? என்ன திகைச்சுறீங்க! விடுகதைக்குள்ள நீங்க விடுகதை போட்டீங்க. நான் இப்போ அதுக்குள்ளே விடுகதை போட்டிருக்கேன்.

தாத்தா: ம்! இரண்டை மூணால பெருக்கினா ஆறு! ஆமாம் 'ஆறு'தான் சரியான விடை! பலே, பலே! சரி, இப்போ நீ இந்த இடத்துலே, மலையை ஒட்டினா மாதிரி ஆறு ஒண்ணு ஓடறமாதிரி படம் வரையணும்! சங்கீதா, நீ இப்படிவா! இந்த நோட்புக்குலே இருக்கிற இந்த விடுகதையை நீ படி!

சங்கீதா: உடுப்பில்லாம தண்ணியிலே இறங்கி, துடுப்பில்லாம படகு ஓட்டி, வலையில்லாம மீன் பிடிச்சு கைகளில்லாம உண்ணுது ஜோரா!"

தாத்தா: இந்த விடுகதைக்கு என்ன விடை?

சங்கீதா: தாத்தா! கண்டுபிடிச்சுட்டேன். 'குவாக், குவாக்' வாத்துதானே!

தாத்தா: வாவ்! 'பளிச்'சின்னு சொல்லிட்டியே! இப்ப நீ இந்த வாத்தை இந்த ஆத்துத் தண்ணியிலே நீந்தறமாதிரி போடறே! ரமேஷ், இதோ இந்த விடுகதையை நீ படி! பார்க்கலாம்!

ரமேஷ் : பச்சை பச்சை மாளிகையிலே, குத்தும் ஈட்டி நடுவிலே, சிவப்பு ராணி சிரிக்கிறா...!

தாத்தா: இந்த சிவப்புராணி யாரு?.. ம் யாரு தம்பி இவ? சொல்லு?

ரமேஷ்: இவ-பண்டித நேரு சட்டையிலே, பவனி வந்த ரோஜாப்பூ!

தாத்தா: சபாஷ்! ரமேஷ், நீ இங்கே ஒரு ரோஜா செடியை ஜோரா வரை பார்க்கலாம்! அடுத்தது சுமதி, உனக்குத் தான் இந்த கடைசி விடுகதை! ம், படிச்சுப்பார்!

சுமதி: தடிச்சு கொம்பு நட்டிருக்கு பாருங்க- அதுலே தண்ணிர் சொம்பு கட்டியிருக்கு பாருங்க! இந்த விடுகதை தானே தாத்தா! இதுக்கு விடை தென்னை மரம்!

தாத்தா: பனைமரம் கூடச் சொல்லலாம்! இப்ப தென்னை மரத்தை வரைஞ்சு, தண்ணிவிட சுத்தி பாத்தியும் வரை பார்க்கலாம்... ம்! நீ வரைஞ்சுக்கிட்டிரும்மா... நான் போய் சட்டம் கொண்டு

வரேன். (போகிறார்)

பிரகாஷ் : ஷ்யாம்! முதல் விடுகதைக்கு விடை கண்டுபிடிச்சியா?

ஷியாம்: இல்லேடா... இன்னும் யோசிச்சுக்கிட்டிருக்கேன். (தாத்தா வருகிறார்)

தாத்தா: ம்! ஆகா. நீங்க ஒவ்வொருத்தரும் இந்த பெரிய பேப்பர்லே அழகழகா ஓவியங்களை வரைஞ்சிருக்கிங்க. மலை, ஆறு, வாத்து, மேகம்,அணில், மூங்கில், தென்னை- எல்லா ஓவியங்களும் அற்புதம். இந்த ஓவியங்கள்ளொம் ஒண்ணா சேர்ந்து பார்க்க எவ்வளவு அழகா இருக்கு பாருங்க! இந்த அழகான படத்துக்கு இப்ப நான் இந்த சட்டத்தைப் போடப் போறேன்! இப்பவாவது நான் மொத மொதல்லே சொன்ன விடுகதைக்கு விடையை கண்டு பிடிங்க பார்க்கலாம்.

அனுபமா: தாத்தா விடையைக் கண்டு பிடிச்சாச்சு!

தாத்தா: சொல்லு சொல்லு?

அனுபமா: தாத்தா, நாங்க எல்லாருமா சேர்ந்து வரைஞ்சிருக்கிற இந்த இயற்கை காட்சி படம்தான் நீங்க சொன்னமொத விடுகதைக்குப் பதில்- இதோ இதிலே மண்ணில்லாத தோட்டம் இருக்கே!

ஷியாம்: விதையில்லாத மரஞ்செடிகள் இதோ-ரோஜா, தென்னை மூங்கில் காடு!

சுமதி: இதோ பாத்தி, ஆனா இதுவே தண்ணியில்லே!

திவ்யா: இதோ வேலியில்லாம சட்டம் போட்டு மாட்டியிருக்கீங்க! கண்ணுக்கு மட்டும் அழகுன்னீங்க, இந்தப் படமும் எவ்வளவு அழகாயிருக்கு!

சங்கீதா: அறுவடை செய்ய முடியாதுன்னீங்க- கரெக்ட்! தேங்காயையும் பறிக்க முடியாது, பூவையும் பறிக்க முடியாது! அதனால அறுவடை இல்லே!

தாத்தா: அறுவடை இல்லேன்னாலும் இப்ப ஆளுக்கு ஆறுவடை சாப்பிடப் போறீங்க! வரும் போதே உங்களுக்காக வாங்கிக்கிட்டு வந்தேன். இப்பத்தான் நினைவுக்கு வரது. இந்தாங்க வடை இன்னும் சூடாத்தானிருக்கு!

எல்லோரும் : விடுகதைத் தாத்தா வாழ்க! அவர் போடும் விடுகதைகளும் அவர்தரும் வடைகளும் வாழ்க!

வழிகாட்டி மரம்

ஏரும் இன்றி, உழவின்றி,
எடுத்துத் தெளித்த விதையின்றி
நீரும் இன்றி, உரமின்றி
நிலத்தில் முளைக்கும் வண்ணமரம்!

வேரும் இன்றி, விழுதின்றி
விரிந்த கிளைகள், இலையின்றி,
பாரில் எங்கும் பழுதின்றி
பார்க்கக் கிடைக்கும் சின்னமரம்!

ஆரம் புனைய மலரின்றி
அடியில் ஒதுங்க நிழலின்றி
தேறும் காய்கள், கனியின்றி
திசைகள் மதிக்கக் கண்ட மரம்!

பேரூர், சிற்றூர் என்கின்ற
பேதம் இன்றி, நெடுஞ்சாலை
ஓரம் நின்று வழிகாட்டி
உதவும் கரத்தைக் கொண்ட மரம்!

-தளவை இளங்குமரன்





* NCEPC என்பதன் விரிவாக்கம் என்ன? – தா. ஷாகுல்ஹமீத், தேனி - 2.



NCEPC என்பது, NATIONAL COMMITTEE ON ENVIRONMENTAL PLANNING AND CO-ORDINATION என்பதன் சுருக்கம்.

* நெபுலே (NEBULAE) என்பது என்ன? – வி. திருவேங்கடம், வலங்கைமான்.




வாயு (Gas), தூசு (Dust), புகை போன்றவைகளால் வானவெளியில் உருவான ஒரு மூட்டம். ரேடியேஷன் காரணமாகவும் கூட இது ஏற்படும். நட்சத்திரங்கள் போன்றவை இதிலிருந்தே தோன்றின என்றும் கருதப்படுகிறது.

* பாப் இசை என்கிறார்களே... இதன் முழுப் பெயர் என்ன? – சு. தேவராஜ், சுவாமிமலை.



பாப்புலர் மியூசிக் என்பதன் சுருக்கமே பாப் மியூசிக். இது பிரபலமான ஆண்டு 1955.

* ஏக்கர் என்பது தமிழ்ச் சொல்லா? – வா. முகைதீன், சிவபுரி.




நிலத்தின் அளவைக் குறிக்கப் பயன் படுத்தப்படும் ஏக்கர் என்ற சொல் தமிழ்ச் சொல் அல்ல. உருதுவோ அல்லது இந்தியோ கூட அல்ல. இது இலத்தீன் சொல்லிலிருந்து ஆங்கிலம் தழுவி வந்த சொல். (ஏகர்-இலத்தீன். ஏக்கர் – ஆங்கிலம்)

* புவிசர்ப்பு விசையைக் கண்டுபிடித்த சர்ஐசக் நியூட்டன் ஏதாவது புத்தகம் எழுதியுள்ளாரா? அவரது கண்டுபிடிப் புகளுக்காக என்ன சிறப்பு செய்யப் பட்டது? – ஜா. டேனியல், கண்ணமங் கலம்.



தனது கண்டுபிடிப்புகளைப் பற்றி நியூட்டன் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். நூலின் பெயர் THE PRINCIPIA. இது லத் தீன் மொழியில் எழுதப்பட்டது. சிறப்பிக்க, இங்கி லாந்தில் இவரது உருவம் பதித்த ஒரு பவுன் நோட்டு வெளியிடப்பட்டது.

* எல்லாச் சிலந்திகளும் ஒரே டிசைனில்தான் வலை கட்டுமா? – விசா. பெர்னாண்டஸ், மேட்டுப்பாளையம்.



இல்லை. ஒவ்வொரு வகைச் சிலந்தியும் ஒவ்வொரு டிசைனில் வலை கட்டும். வலையைப் பார்த்தே அது எந்த வகை யைச் சேர்ந்த சிலந்தி என்பதைக் கண்டு பிடித்து விடுவார்கள்.

* வானொலி யில் முதலில் விளம்பரங்களை ஒலிபரப்பிய நாடு எது? இது எப் போது செய்யப் பட்டது? – நா. பட்டாபி, திருவள்ளுவர்.



வர்த்தக ஒலிபரப்பை முதலில் தொடங்கியது அமெரிக்காதான். ஆண்டு 1922.

* AGMATOLOGY எந்தத் துறைக்கான பெயர்? இவை போன்றவைகளுக் கெல்லாம் விளக்கம் எந்தப் புத்தகத்தில் உள்ளது? – கு. பெரியநாயகி, பழனி.



அக்மடாலஜி என்பது எலும்பு முறிவு இயல்துறை பற்றிய படிப்பு. இவை போன்றவைகளுக்கு விளக்கம் COLLINS GEM வெளியிட்டுள்ள 'FACT FILE' என்ற புத்தகத்தில் உள்ளது.

* உலகின் மிகப் பெரிய பாலைவனம் என்று சகாராவைக் குறிக்கிறார்களே, இதன் பரப்பளவு என்ன? – மா. இஸ்பானுல்லா, திண்டுக்கல்.

ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள உலகின் மிகப் பெரிய பாலைவனமான சகாராவின் பரப்பளவு சரியாக 8,400 சதுர கி.மீ.


* ஓவல்டின் என்று ஒரு பானம் இருந்ததா? அதை யார் கண்டுபிடித்தார்கள்? – வா. சின்னப்பையன், கொடுமுடி.



இப்பானம் போர்ன்விட்டாவைப் போன்றது. வீட்டில் 50 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்கள் இருந்தால் அவர்களிடம் கேட்டால் இதைப் பற்றிக் கூறுவார்கள். இதைக் கண்டுபிடித்த பெருமைக்கு உரியவர் Dr. GEORGE WANDER ஆண்டு 1904.

* கேட்கும் திறமை குறைந்தவர்களுக்கு உதவும் 'ஹியரிங் எய்டு' யாரால் கண்டுபிடிக்கப்பட்டது? – பாளை. பொன்முருகன், நீடூர்.

சரியாகக் காது கேளாதவர்களுக்கு உதவும் மின்சார 'ஹியரிங் எய்டு' கருவியைக் கண்டுபிடித்தவர் மில்லர் ஹட்




சின்சன் (MILLER HUTCHINSON). ஆண்டு 1901.

* ஆந்தை கூடு கட்டுமா? எதைக் கொண்டு கூடு கட்டும்? – விக்கிரம் ஜெபசிங், பரமாநி.




சாதாரணமாக ஆந்தை மற்ற பறவைகளைப் போல் தனியாகக் கூடு கட்டுவதில்லை. மற்ற பறவைகள் விட்டு விட்டுப் போன கூடுகள், மரப்பொந்துகள், பாழடைந்த வீட்டின் இண்டு இடுக்குகளையே இது கூடாகப் பயன்படுத்திக் கொள்ளும்.

* TURTLE என்பதும் TORTOISE என்பதும் ஒன்றுதானே? – தா. மகாலிங்கம், திருவாரூர்.



தரை ஆமை என்பவை பெரும்பாலும் தரையில் வாழக்கூடியவை. இவைகளுக்கு தரையில் நடக்க வசதியாக கால்கள் இருக்கும். இவைகளே TORTOISE. நீர் ஆமை என்பவை நீரில் மட்டுமே வாழக்கூடியவை. நீரில் நீந்த வசதியாக இவைகளுக்கு துருப்பு போன்ற பட்டைகள் இருக்கும். இவைகளே TURTLE.




• பெங்குவின் பறவை ஒவ்வொரு முறைக்கும் எத்தனை முட்டை இடும்? – நா. சபாபதி, விக்கிரவாண்டி.


பெங்குவின் ஒவ்வொரு முறையும் ஒரே ஒரு முட்டை தான் இடும்.

• ரப்பர் மரத்தின் இயற்பெயர் என்ன? இதற்கு ரப்பர் என்ற பெயரை வழங்கியவர் யார்? – விசா. வெள்ளையன், மேல்மருவத்தூர்.

ரப்பர் மரம் "HEVEA" மர வகைகளைச் சேர்ந்தது. இந்த மரத்தின் பால்தான் இறுகியதும் ரப்பர் ஆகிறது. இந்த ரப்பராகும் பாலின் பெயர் LATEX. ரப்பர் என்ற பெயர் காரணப் பெயரே. எழுதினதை அழிப்பதை ஆங்கிலத்தில் "RUBBING" என்பார்கள். இது அழிக்கப் பயன்பட்டதால் ரப்பர் ஆயிற்று. இந்தப் பெயரைச் சூட்டிய பெருமைக்கு உரியவர் ஜோசப் ப்ரீஸ்ட்லி (PRIESTELY)



• நீளமான பல் உடைய விலங்கு எது? – இரா. மெய்யப்பன், காரைக்குடி – 1.



ஈட்டி மீன் என்று ஒரு வகை மீன். உண்மையில் இது மீன் அல்ல. குட்டி போட்டுப் பால் தரும் WHALE இனம். ஆங்கிலத்தில் இதன் பெயர் NARWHAL. இதற்கு ஈட்டி போன்ற ஒரு உறுப்பு வாயிலிருந்து நீள்கிறது. இது அதன் பல்லின் தொடர்ச்சியே. இந்த ஈட்டிப் பல்லின் நீளம் ஒரு மீட்டர் நீளம் கூட இருக்கும். நீளமான பல் உடையது என்று குறிப்பிடுவதானால், NORWHALக்குத்தான் இந்தப் பெருமை.


• வாசனைமிக்க மருந்துப் பொருளான கஸ்தூரி, மானின் வயிற்றில் இருந்துதான் கிடைக்கிறதா? வேறு எந்த மிருகங்களுக்கும் கஸ்தூரி இல்லையா? – மு. அல்லாபிச்சை, ஒரத்தநாடு.



கஸ்தூரி என்ற 'MUSK', கஸ்தூரி மான் என்ற தனிவகை மானின் வயிற்றில் இருந்துதான் கிடைக்கிறது. இந்த மானைத் தவிர, கஸ்தூரி எருது (MUSK OX) என்றும் ஒரு எருது இருக்கிறது. இதன் வயிற்றிலிருந்தும் கஸ்தூரி எடுக்கப்படுகிறது. ஆனால் மானின் கஸ்தூரியே உயர்ந்த வகை.

• நான்கு கண்களை உடைய மீன் கூட இருக்கிறதாமே! இதனால் அதற்கு என்ன பயன்? – தூ. துரைமுருகன், ஸ்ரீவில்லிபுத்தூர்.

ANABLEPS என்ற ஒரு வகை மீன். இதற்குத்தான் நான்கு கண்கள். இதைக்



கொண்டு இதனால் ஒரே சமயத்தில் நீருக்கு மேலுள்ளவைகளையும் நீருக்குள் உள்ளவைகளையும் காண முடியும்.

சேரநம்பி

எங்கூர்னா எங்கூர்தான்!

இன்றோடு விஜி அழகாபுரிக்கு வந்து ஒரு வாரமாகி விட்டது. அவள் அப்பா ஒரு வங்கியில் வேலை பார்த்து வருகிறார். விஜி பிறந்ததிலிருந்து போன வருடம் எட்டாவது படிக்கும் வரை சென்னையிலேயே அந்த பாங்கின் வெவ்வேறு கிளைகளில் அவள் அப்பா வேலை பார்த்தார். ஆனால், இந்த வருடம் விஜியின் அப்பாவுக்குப் பதவி உயர்வு கிடைத்தது. அதனால் இங்கு அழகாபுரிக்கு மாற்றலாகி வந்திருக்கிறார்.

சென்னையில் பிறந்து வளர்ந்த விஜிக்கு இந்த அழகான அழகாபுரி பிடிக்கவேயில்லை. காரணம், சென்னையைப் போன்ற நவீன வசதிகளும், பொழுது போக்கு அம்சங்களும் அழகாபுரியில் இல்லை. எனவே, "இங்கு வந்து மாட்டிக் கொண்டோமே" என்று இந்த ஒரு வாரமாக விஜி கவலைப் பட்டுக் கொண்டே இருந்தாள்.


கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. விஜியின் அம்மா கதவைத் திறந்தபடி 'வா கவிதா வா'. காரைக்குடியில் உன் மாமா வீட்டிற்குப் போயிருக்கிறாய்னு சொன்னாங்க. எப்ப வந்தாய்?'' என்று கேட்டாள். "இப்பத்தான் அத்தை வந்தேன். பால் காய்ச்ச வரும்போது உங்களுக்கு ஒரு பொண்ணு இருக்கான்னு சொன்னீங்களே? எங்கே அத்தை?'' என்றாள் கவிதா.

"உள்ளே இருக்கா. இருகூப்பிடுகிறேன்'' என்ற அம்மா, விஜியைக் கூப்பிட்டு, ''இவதான் கவிதா. பக்கத்து வீட்டிலே இருக்கா. கவிதா, இவதான் என் பொண்ணு விஜி'' என்று இருவருக்கும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து வைத்தாள். பிறகு "ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இருங்க. எனக்கு உள்ளே கொஞ்சம் வேலை இருக்கு'' என்று உள்ளே போனாள்.

விஜி விருப்பமில்லாமல் ஏதோ பெயருக்குக் கவிதாவைப் பார்த்துச் சிரித்தாள். கவிதா அன்போடு விசாரித்த போது கூட ஏனோ தானோ என்று பதில் அளித்தாள்.

பள்ளி திறந்து விட்டது. விஜியை கவிதா படிக்கும் பள்ளிக் கூடத்தில் தான் சேர்த்தார்கள். இருவரும் ஒரே பிரிவில் படித்தனர். ஒன்றாகப் பள்ளி சென்று திரும்பினர்.

விஜி சென்னையில் இங்கிலீஷ் மீடியத்தில் படித்தாள். இருந்தாலும் தமிழ்ப் பாடம் மற்றும் தமிழ்க் கட்டுரை பேச்சுப் போட்டிகளில் எல்லாம் முதல் பரிசு வாங்குவாள். அதனால் அழகாபுரியில் தமிழ் மீடியத்தில் படிப்பது ஒன்றும் சிரமமாக இல்லை.





அடுத்தடுத்த வீட்டில் இருந்தாலும் விஜி கவிதா வீட்டிற்குப் போவதே இல்லை. கவிதா பலமுறை கூப்பிட்டுப் பார்த்து விட்டாள். விஜியின் அம்மாவும் சொல்லிப் பார்த்தாள். ஆனாலும், விஜி போகவே இல்லை. போகும் அளவுக்கு அவள் வீட்டில் என்ன விசேஷமாக இருக்கப் போகிறது என்ற அலட்சியம்தான். ஆனாலும் கவிதா விஜி வீட்டிற்கு வரும்போது சகஜமாகப் பழகினாள்.

"சென்னை எங்கூர்னா எங்கூர்தான். இந்த அழகாபுரில



என்ன இருக்கு?" என்று விஜி சென்னையைப் பற்றியும், அவள் படித்த பள்ளியின் சிறப்பையும் பெருமையாகக் கூறுவாள். கவிதாவும் ஆர்வமாகக் கேட்பாள்.

விஜி சென்னையில் படித்த பள்ளியில் பெரிய விளையாட்டுத்திடல், பலவகையான விளையாட்டுச் சாதனங்கள், நூல்நிலையம் எல்லாம் இருந்தன. இவை பற்றிக் கேட்ட கவிதாவுக்கு ஒரு வருடமாவது அந்தப் பள்ளியில் படிக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது.

கவிதா விஜியிடம், "ஏன் விஜி, அந்தப் பள்ளியில் எவ்வளவு பீஸ் கட்டணும்?" என்று கேட்டாள். அதற்கு விஜி, "மாதா மாதம் 110 ரூபாய் கட்டணும்" என்றாள்.

"அம்மாடியோ! இங்க நம்ம பள்ளியிலே வருஷத்துக்கே 15ரூபாய்தானே கட்டுகிறோம்!" என்று ஆச்சரியப்பட்டாள் கவிதா.

விஜி சென்னையில் இருக்கும் போது, மாலை நேரங்களில் பள்ளி விட்டு வந்ததும் விளையாடப் போவாள். எங்கே தெரியுமா? அவர்கள் தெருக்கோடியில் இருக்கும் பூங்காவுக்கு. அதைப் பற்றியும் பெருமையாகக் கவிதாவிடம் கூறுவாள். அதைக் கேட்ட கவிதா, "இந்த ஊர்ல பூங்கா எல்லாம் கிடையாது. எங்க தோட்டம்தான் பூங்கா" என்று ஏக்கத் தோடு சொல்லுவாள்.

தேவி நாச்சியப்பன்

"ஆமாம் கவிதா! நீ தினமும் விதவிதமா பூ வச்சுக்கிற! எனக்கும் கொடுக்கறே? உங்கம்மா வேற அடிக்கடி காய்கறி தராங்களே! எல்லாம் உங்க தோட்டத்துக் காய்தானா?" என்று ஒரு நாள் விஜி கேட்டாள்.

அதற்குக் கவிதா, "ஆமா விஜி. இன்றாவது எங்க வீட்டுக்கு வா. தோட்டத்தைப் பார்ப்போம்" என்றாள்.

விஜியும் தோட்டத்தைப்



"'B'க்கு எப்பொழுதுமே வேர்க் காது. ஏன் தெரியுமா?"

"தெரியலியே?"

"அது 'A'க்கும் 'C'க்கும் நடுவில் இருப்பதால்தான்."

- எஸ். அப்துல்ரெஜாக்

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

பார்க்கும் ஆவலில் கவிதா வீட்டிற்குப் போனாள்.

கவிதாவின் அம்மா விஜியை அன்போடு வரவேற்று உபசரித்தாள். கவிதா வீட்டுத் தோட்டம் மிக அழகாக இருந்தது கனகாம்பரம். ரோஜா, மல்லி, நந்தியா வட்டை, செம்பருத்தி போன்ற பூச்செடிகள் இருந்தன. கத்திரி, தக்காளி, வெண்டை, முருங்கை, கண்டைக்காய், மிளகாய் போன்ற மரம், செடிகளும் பல வகைக் கிரைகளும் இருந்தன. அவற்றை எல்லாம் விஜி வியப்போடு பார்த்தாள்.

கவிதாவிடம் "உங்க தோட்டக்காரர் தினமும் வருவாரா? இல்லை ஒருநாள் விட்டு ஒருநாள் வருவாரா? என்று கேட்டாள் விஜி.

"எங்க தோட்டக்காரர் இங்கேயே தான் இருக்கிறார்" என்றாள் கவிதா. விஜி சுற்றும் முற்றும் பார்த்தாள். கவிதா சிரித்துக் கொண்டே, "நான்தான் தோட்டக்காரர்" என்றாள். விஜியால் நம்பமுடியவில்லை. "நீயா! நீயா இவ்வளவு அழகா தோட்டம் போட்டிருக்க?" என்று வியப்போடு கேட்டாள் விஜி.

கவிதா "ஆமா விஜி, நான் ஒவ்வொரு நாள் காலையிலும், மாலையிலும் அரை மணி நேரம் தோட்ட வேலைக்காக ஒதுக்குவேன்.விஜி நீ கூட உங்க வீட்டின் பின்புறம் தோட்டம் போடலாமே? நிறைய இடம் இருக்கே?" என்றாள்.

"ஆமாம் கவிதா. போடலாம். ஆனால் எனக்கு எதுவும் தெரியாதே?. சென்னையில் நாங்க அடுக்கு மாடிக் கட்டடத்தில் குடியிருந்தோம். தீப்பெட்டியை அடுக்கின மாதிரி வீடு. மண் பகுதியே இல்லை. அதனால் நீ உதவி செய்தா, தோட்டம் போடலாம்" என்றாள் விஜி.

"கவலைப் படாதே விஜி. நாளைக்கே நாம உங்க வீட்டில தோட்டம் போடுவோம்" என்றாள் கவிதா. அடுத்த சில நாட்களில் விஜியின் வீட்டில் அழகான ஒரு தோட்டம் உருவானது.

அன்று மாலை பள்ளியிலிருந்து திரும்பினாள் விஜி. அவர்கள் வீட்டில் கவிதாவின் அம்மா, எதிர்வீட்டுப் பாட்டி, அடுத்த வீட்டு அம்மா அனைவரும் இருந்தார்கள். விஜிக்கு ஆச்சரியமாக இருந்தது. உள்ளே சென்றாள். படுத்திருந்த அம்மாவைப் பார்த்ததும் பதட்டமாக இருந்தது. "என்னம்மா என்ன ஆச்சு?" என்று அம்மாவைத் தொட்டுப் பார்த்தாள். காய்ச்சலில் உடல் சுட்டது.

கவிதாவின் அம்மா, "பயப்படாதே விஜி. அம்மாவுக்குக் காய்ச்சல். மதியம் நான் வந்தபோது குளிருதுன்னு படுத்திருந்தாங்க. டாக்டரய்யாவைக் கூட்டியாந்து காட்டிட்டோம். அவரும் மருந்து மாத்திரை கொடுத்திருக்காரு. இப்பத்தான் அம்மாவுக்கு ஹார்லிக்ஸ் கொடுத்தேன். இரு உனக்கும் பால்காய்ச்சிக் கொண்டு வருகிறேன்" என்று வீட்டிற்குப் போனாள். மற்றவர்களும் விஜிக்கு ஆறுதல் சொல்லி விட்டுப் போனார்கள்.

விஜியின் அப்பாவும் வேலை முடிந்து வந்து விட்டார். விஜி பக்கத்து வீட்டு அத்தை சொன்ன விஷயங்களை அப்பாவிடம் கூறினாள். அவரும் கவலையுடன் கேட்டுக் கொண்டு, "இங்கு ரொட்டியும் கிடைக்காது. நமக்கும் கஞ்சி காய்ச்சக் கூடத் தெரியாதே?"என்றார்.

அந்தச் சமயத்தில் கவிதா அம்மா அங்கு வந்தாள். அவள் கையில் ரொட்டி இருந்தது. "இந்த ஊர்ல பிரட் கிடைக்காது. ஆனா அடுத்த வீட்டுத் தம்பி மதியம் திருப்பத்தூர் டவுனுக்குப் போச்சு. அதுகிட்ட சொல்லி ஒரு ரொட்டி வாங்கி

வரச் சொன்னேன். கஞ்சி எல்லாம் நாங்க காய்ச்சிக் கொடுப்போம். நீங்க ஒண்ணும் கவலைப் படாதீங்க தம்பி'' என்றாள். கவிதா அம்மா. அங்கு வந்த எதிர் வீட்டுப் பாட்டி, "என்ன கவலை தம்பிக்கு? தம்பி, நீங்களும், விஜியும் ஆபீஸுக்கும், பள்ளிக்கும் போயிட்டு வாங்க. உங்களுக்கு காப்பி, பலகாரம், சாப்பாடு எல்லாம் வேளை தவறாம வரும். விஜி அம்மாவையும் பக்கத்திலிருந்து பார்த்துக்குவோம்'' என்றாள்.

விஜி அம்மாவுக்கு ஒரு வாரம் காய்ச்சலாக இருந்தது. அந்த நாட்களில் விஜியையும், அவள் அப்பாவையும், அம்மாவையும் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் அன்போடு கவனித்துக் கொண்டனர். அவர்களின் அன்பு வெள்ளத்தில் மூவருமே திளைத்தனர்.

விஜி சென்னையில் இருக்கும் போது ஒருமுறை அம்மாவுக்குக் காய்ச்சல் வந்தது. அப்பா ஒரு வாரம் லீவ்போட்டு விட்டுப் பார்த்துக் கொண்டார். அப்போது பட்ட சிரமங்களை இப்போது விஜி நினைத்துப் பார்த்தாள். வெகு தொலை வில் உள்ள நண்பர் வீட்டில் கஞ்சி காய்ச்சி வந்ததும், பிடிக்காத ஹோட்டல் சாப்பாட்டையும் நினைக்கவே பயமாக இருந்தது!

இதுவரை சென்னையைப் புகழ்ந்து, அதே சமயம் அழகாபுரியை அதோடு ஒப்பிட்டுக் குறைவாகப் பேசிய விஜிக்கு அழகாபுரியின் அருமை இப்போது புரிந்தது. இப்பொழுது வித்தியாசமான கோணத்தில் அழகாபுரியைப் பார்க்கலானாள்!

அழகாபுரியில் அமைந்த அழகான வீடுகள், வீட்டுக்கு ஒரு தோட்டம். அன்பான மக்கள், கேட்காமலே உதவும் நல்ல குணம், பெரிய பெரிய கோயில்கள், அவற்றின் திருவிழா. அந்தக் கூட்டத்தில் அன்பான விசாரிப்புகள். மகிழ்ச்சியான செய்திப் பரிமாற்றம். இப்போதும் விஜி சென்னையையும் அழகாபுரியையும் ஒப்பிட்டுப்பார்க்கிறாள்.

ஆஹா! அழகாபுரிதான் இப்போது விஜிக்கு அற்புதபுரி!



பப்புவின் குதிரை!

நேற்றைய மாலை நேரத்திலே
நேர்த்தியான குதிரை மேல்
நேரம் போவது தெரியாமல்
நிமிர்ந்தே பவனி சென்றிட்டேன்.

வனப்பே மிக்க குதிரையது;
வாயே திறவா குதிரையது
சிவப்பு வண்ணக் குதிரையது;
சிவாஜி சென்ற குதிரையது

உண்மையில் பப்பு குதிரைமேல்
ஒருமுறை கூடப் போனதில்லை
செப்படு வித்தை ஏதுமில்லை
பப்புவின் குதிரை மரக்குதிரை!

-நடாதூர் புதுவை அமலன்

குவா! குவா! வாத்து!

குவா குவா வாத்து
குள்ள மான வாத்து
ஆகா என்ன அழகு
அசைந்த நடை அழகு!


குவா குவா வாத்து
கூடிச் செல்லும் வாத்து
யாவ ரையும் ஈர்க்கும்
எழில் நிறைந்த வாத்து!

கரையில் வந்து நிற்கும்
குவா குவா கத்தும்
இரையாய் நத்தை தின்னும்
இன்னும் பலவும் தேடும்!

தூவல் வாலை ஆட்டும்
தலையை தலையை நீட்டும்
'ஆவல் பொங்கக் காண
ஆட்டி வைக்கும் வாத்து!

பாப்பா பிடித்தால் உடனே
பயந்து கத்தி ஓடும்
அப்பா அம்மா முயன்றால்
ஆட்டம் போட்டுக் காட்டும்!

-நாஞ்சில் இராமநாதன்



நூலகம்

விடுமுறை தன்னைக் கழித்திடவே
விரும்பி நூலகம் சென்றேனே

திருப்புகழ் இருக்க கண்டேனே
திருக்குறள் அனைத்தும் படித்தேனே

ஆங்கிலம் அரும்பதம் கற்றேனே
இந்தியும் எழுதிடக் கற்றேனே

காந்தி அடிகள் வரலாறும்
கம்பர் இளங்கோ அறிந்தேனே!

அறிஞர் அண்ணா வரிசையிலே
அறிந்தேன் அவர்தம் கருத்தினையே

பார்த்தும் படித்தும் மகிழ்ந்தேனே
பாரில் அதனால் உயர்வேனே!

-மீட்டூர் சு.கண்ணகி





மாம்பழம்!

கன்னம் சிவந்த மாம்பழம்
கண்ணைக் கவரும் மாம்பழம்
உண்ணத் தூண்டும் மாம்பழம்
ஊரே மணக்கும் மாம்பழம்

பழுத்துத் தொங்கும் மாம்பழம்
பறிக்கத் தூண்டும் மாம்பழம்
முழுசாய் இன்று சுவைக்கவே
மனதை மயக்கும் மாம்பழம்

நன்கு இனிக்கும் மாம்பழம்
நல்ல பெரிய மாம்பழம்
நாக்கு ருசியா தின்னவே
நறுக்கித் தாரேன் மாம்பழம்

-திருச்சி. தி.மைவிழி



தம்பி!

முடியும் உன்னால் முடியும்
முயற்சி மட்டுமே தேவை!
நடக்கும் நல்லது நடக்கும்
நம்பிச் செய்யின் நடக்கும்

தடைகள் கூட வருமே
தடைக்கல் அவையே ஆகும்
படைகள் கண்டு பதுங்கல்
பாரில் புகழைத் தருமோ?

ஊனம் இருப்பின் எனினும்
உள்ளம் உறுதி வேண்டும்!
வானம் சுருங்கி இல்லை
வாழ்க்கை பரந்து கிடக்கு!

-வானதி. சென்னை - 94



"எங்கள் பாட்டி!"

பாட்டி எங்கள் பாட்டி! - என்றும்
பாசம் நிறைந்த பாட்டி!
வீட்டை அன்பு மழையில் - நனைத்து
வியக்கச் செய்யும் பாட்டி!

பருப்பும் நெய்யும் கலந்து - எனக்குப்
பரிந்து ஊவை ஊட்டி;
கருத்து நிறைந்த கதைகள் - சொல்லிக்
களிக்கச் செய்யும் பாட்டி!

ஏங்கி நானும் அழுதால் - தேற்றி
இன்முகத்தைக் காட்டி;
தாங்கிக் கொள்வாள் அன்பால்
எங்கள்
தங்கம் நிகர் பாட்டி!

-திட்டக்குடி முத்து முருகன்



நல்ல குடும்பம்

அம்மா அருகில் வருவாளாம்
ஆசை முத்தம் தருவாளாம்


அப்பா ஓடி வருவாராம்
அறிவு விளக்கம் தருவாராம்

அண்ணன் விரைந்து வருவானாம்
அள்ளிப் பாசம் தருவானாம்

அம்மா அப்பா அண்ணன் தரும்
அன்புக் கிணையாய் எதுவுண்டு!

-திண்டிவனம் எஃப்.ஆர்.ஷெரீப்






வென்று காட்டுவோம்!

உலக மகா மேதை என்று உயர்ந்த
ஒருவர் - அந்த
உயர்ந்த நிலை அடைவதற்குப்
பட்ட பாடுகள்
என்ன என்ன என்று நாமும்
எண்ணிப் பார்ப்பது - நம்மை
இன்னும் நன்றாய் உயர்த்திக் கொள்ள
வழி அமைக்குமே!


எத்தனையோ தடைகள் அவர்
கடந்தும் இருப்பார் - நாளும்
எண்ணிலாத முயற்சிகளைச் செய்தும்
இருப்பார்!
அத்தனையும் சேர்ந்தே அவர்
வாழ்க்கை நிலையை - மிக
அற்புதமாய் அமைத்திருக்கும்
இயற்கை நியதி!

இத்தனையும் நன்குணர்ந்தும்
படிக்கும்பணியிலே - நாம்
இன்னும் பின்னால் தங்கி விட்டால்
என்ன மாட்டாரோ?
மொத்த சக்தி அத்தனையும் ஒன்று
திரட்டி - படிப்பில்
முதலிடத்தில் வந்துவென்று காட்ட
வேண்டாமோ?

-காரைக்குடி சிந்து வருண்



உரக்கப் படிக்க உன்னதக் கதைகள்



கணைக்கால் இரும்போறை என்று ஒரு சேர மன்னன் இருந்தான். இவன் சங்ககாலத்தில் வாழ்ந்த மன்னன். இவனுக்கு கோச்சேரமான் என்ற பெயரும் கூட உண்டு. இவன் அரசாண்ட மேற்குக் கடற்கரைப் பகுதியில் புகழ் மிக்க பெரிய நகரங்கள் இருந்தன. இவைகளுள் குறிப்பிடத்தக்கவை தொண்டி, மாந்தை, நறவு என்பவை. இவை எல்லாமே துறைமுக நகரங்கள். தொண்டி என்பது இரும்பொறையின் தலைநகரம். இங்கு அழகு மிக்க, வலிமையான கோட்டை இருந்தது.

சங்ககால மன்னர்கள் அனைவருமே புலவர்களிடம் பேரன்பு பூண்டவர்கள். புலவர்களை ஆதரிப்பதை மன்னர்கள் தங்கள் அரச கடமைகளுள் ஒன்றாகக் கருதினர். மன்னன் இரும்பொறையின் அவையில் கூடப் புலவர்கள் இருந்தனர். இவர்களையெல்லாம் இரும்பொறை ஆதரித்து வந்தான். இரும்பொறையே சிறந்த புலவன்தான்! ஆமாம், அழகாகக் கவிதை எழுதும் திறமை இரும்பொறைக்கு இருந்தது. புலவர்களை ஆதரிக்கும் மன்னனே கவிஞனாக இருப்பது எத்தனை பெருமை!

இரும்பொறை வாழ்ந்த காலத்திலேயே அதிசயமாக, புலவர்களை ஆதரிக்க மறுத்த மன்னன் ஒருவனும் இருந்தான். அவன் பெயர் மூவன். இவனிடம் அளவற்ற செல்வம் குவிந்திருந்தது. இருப்பினும்

மூவன் புலவர்களை ஆதரிக்க மறுத்தான்.

நாட்டின் கல்வி வளர்ச்சிக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் புலவர்கள் பெரிதும் தொண்டாற்றி வந்தனர். அதனால் புலவர்களை ஆதரிக்காத நாட்டின் கல்வி வளர்ச்சி பாதிக்கப் பட்டு விடும். மன்னன் ஆதரிக்காத காரணத்தால் புலவர்கள் மூவனின் நாட்டைவிட்டு நீங்கத் தொடங்கினர்.

இதன் காரணமாக கணைக்கால் இரும்பொறைக்கும் மூவனுக்கும் மன வேற்றுமை ஏற்பட்டது. இது போரிடும் அளவுக்கு வளர்ந்தது. போரில் இரும்பொறை மூவனை வென்றான்; அவனது பல்லைத் தட்டி னான்; தட்டின பல்லைத் தனது கோட்டைக் கதவில் வீரத்தின் அடை



யாளமாகப் பதித்து வைத்தான். புலவர்களை ஆதரிக்க மறுக்கும் மன்னர்களுடைய முடிவு இப்படித்தான் இருக்கும் என்பதை இது எல்லோருக்கும் அறிவித்தது.

இத்தனை பெருமை வாய்ந்த கணைக்கால் இரும்பொறைக்கும், சோழ மன்னன் செங்கணான் என்பவனுக்கும் பகை மூண்டது. இருவருமே சிறந்த வீரர்கள். இருவர் படைகளும் கழுமலம் என்ற ஊரில் சந்தித்தன. பெரும் போர் நடந்தது. கழுமலப் போர் என்றே இதைக் குறிப்பிடுவார்கள்.



போர் நடந்து கொண்டிருக்கும் போது ஒருநாள் இரவு. இரும்பொறையின் யானைப் படையில் இருந்த யானைகளில் ஒன்றுக்கு திடீரென்று மதம் பிடித்து விட்டது. பயங்கரமாகப் பிளிறி அது இரும்பொறையின் படையையே நாசம் செய்தது. யாருமே யானையின் அருகே சென்று அடக்க அஞ்சினர். இரும்பொறை இதைப் பார்த்தான். யானையைக் கண்டு அவன் அஞ்சவில்லை. யானையின் அருகே சென்று தனியொருவனாகவே போராடி, அந்த மதம் பிடித்த யானையை அடக்கினான்.


இத்தனை வீரனாக இருந்த போதிலும் கழுமலப் போர், இரும்பொறைக்கு சாதகமாக அமையவில்லை. போரில், சோழப் படையினரிடம் அவன் சிக்கினான். சோழ மன்னன் செங்கணான் அவனைச் சிறையில் அடைக்க உத்தர விட்டான்.

வீரனான இரும்பொறை பகைவர் சிறையில் மிகவும் வாடினான். நாய்க்கு அணிவிப்பது போல் அவனுக்கு இரும்புச் சங்கிலி அணிவித்து சிறையில் அடைத்து வைத்திருந்தனர். அது மட்டுமா? சிறைக் காவலர்கள் கூட அவனை ஏளனம் செய்தனர்.

ஒருநாள் இரும்பொறை தாகத்தால் தவித்தான். சிறைக் காவலர்களிடம் குடிக்க நீர் கேட்டான். இதைத் தருவதில் கூட காவலர்கள்

தாமதம் செய்து ஏளனமாகப் பேசி அவமதித்தனர்.

இரும்பொறை தன்மான உணர்வு மிக்கவன். அவனால் இந்த அவமதிப்பைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஏற்கெனவே போரில் வீரமரணம் அடையாது பகைவர் கையில் சிக்கிச் சிறைப்பட்டு விட்டோமே என்று அவன் தவித்தான். இந்த நிலையில், காவலர்களின் அவமதிப்பும் சேர்ந்து கொள்ளவே, எதற்காக இவர்களிடம் குடிக்க நீர் கேட்டோம் என்று மனம் நொந்தான்.



''ஏன் ஒரு மாதிரியாய் இருக்கே?''

"எனக்குப் 'புற்று' நோய் இருக்கிறதா டாக்டர் சொன்னார்!"

— பாளை பகம்பொன்

பாடல் எழுதும் திறமை பெற்றவன் அல்லவா இரும்பொறை? தன்னுடைய தன்மான உணர்வுகளையும், தான் பட்ட அவமானத்தையும், தன் மனம் நொந்ததையும் வைத்து ஒரு பாடல் எழுதினான்.

தமிழர்கள் வீரத்தைப் பெரிதாக மதித்தனர். மரணம் என்பது வாளால் ஏற்படும் முடிவாக இருக்க வேண்டும் என்று எண்ணினர். 'இறந்து பிறக்கும் குழந்தைகளைக் கூட வாளால் கீறி வீரமரணமாக அதைப் போற்றினர். அத்தகைய வீரமரணத்தை அடையாத நான், பகைவர்களிடம் சிறைப்பட்டு, நாயைப் போல் சங்கிலி அணிவிக்கப்பட்டு, அவமதிக்கப்படுகிறேனே! இத்தனை இழிவான நிலையிலும் கூட, தாகத்தை அடக்கிக் கொள்ள முடியாது, நீர் கேட்டு அவமதிக்கப் பட்டு, மானமிழந்து விட்டேனே!' என்பது தான் இரும்பொறை எழுதிய பாடலின் பொருள்.

எந்த அளவுக்கு மனம் நொந்து போயிருந்தால் இரும்பொறை இப்படி ஒரு பாடலை எழுதியிருக்க வேண்டும்? பாடலை எழுதி வைத்துவிட்டு இரும்பொறை சிறையிலேயே உயிர் துறந்தான். காவலன் கொண்டு வந்து வைத்த நீரைத் தொடக்கூட இல்லை!

மானமுள்ள ஒருவன், அவமதிக்கப்பட்டால், அவன் உள்ளம் என்ன பாடுபட்டு நைந்து போகும் என்பதை விளக்கும் இரும்பொறையின் இந்தப் பாடல், படிப்பவர் மனதை உருக்குவதாக அமைந்துள்ளது. இந்தப் பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

சேரமன்னனின், மானத்தைப் போற்றும் இதே பாடல் கருத்தைத் தான் திருவள்ளுவரும்

'மயிர் நீப்பான் வாழாக் கவரிமா அன்னார்

உயிர் நீப்பர் மானம் வரின்'

என்கிறார். கணைக்கால் இரும்பொறையின் முடிவு, இந்தக் குறளுக்கு எத்தனை பொருத்தமாக உள்ளது!

சார் தபால்!

✉ வி. ர. வசந்தனின் புதிய தொடர்கதை ''உதயன் எங்கே?'' ஆரம்பமே படுஅசத்தல். அடுத்த இதழுக்காக இப்போதே காத்திருக்க ஆரம்பித்து விட்டோம் போங்க! - விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன், சோழன் மாளிகை கோ. சாந்தி, சோழன் மாளிகை கோ. ஆனந்தன், கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன், விருத்தாசலம் வி. பிரபாகர், புதுவை பரிதி இரா. வெங்கடேசன், மணிநகரம் ம. இராஜ்குமார், பரங்கிப்பேட்டை காசி. நடராஜன் வேம்பார் ச. கிறிஸ்து ஞானவள்ளல்.

✉ 'கலைப் பொருள் செய்வோம்' பகுதியை மறுபடி தொடங்கியதற்கு நன்றி! - கருணாபுரம் மா. சுந்தரமூர்த்தி, எருக்கஞ்சேரி க. கௌதமன், கபிஸ்தலம் ஆர். இரவிகுலரகுவர்மன், திருச்செங்கோடு அ. தென்றல் நிலவன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

✉ சார் இதுவரைக்கும் நிறைய தடவை லெட்டர் போட்டிருக்கேன். ஆனால் ஒரு தடவை கூட கோகுலம் புத்தகத்தில் என் பேர் வரவேயில்லை! இந்தக் கடிதத்தை யாவது போடுங்கள் சார், போடுவீங்களா சார்? - தாசுகுப்பம், ஜெ. ராஜா.

(போட்டாச்சு தனிக் கடிதமாக வே! மகிழ்ச்சிதானா?)

✉ 'பட்டுப் பட்டுப் பூக்கள், பார்க்கப் பார்க்க அழகு-!'- கவரும் அழகோ அழகு! கவர் ஸ்டோரி கட்டுரையும் அருமையோ அருமை! - சின்னதாராபுரம் வா. செண்பகராமன், புலியூர் வி. கப்புராமன், தேவனாம்பட்டணம் க. குருமூர்த்தி, விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன், மேலப்பாதி என். ராஜலட்சுமி.

✉ "உமுஜாசே!" சூப்பர் சார்! எழுதினவர் பெயரை இப்படி இருட்டடிப்புப் பண்றீங்களே! - வேலூர் மு. எத்திராஜன், ராணிப்பேட்டை க. இதயதுல்லா, சிர்வேலி மா. குமரன், புதுவை. உ. வெ. திருமலை, கருமத்தம்பட்டி அ. இராஜப்பன், செம்பனார் கோயில் ஜெ. ஜம்மு, மேலப்பாதி எஸ். நாகராஜன், சைதை பா. பிரகதீஸ்வரி, வடன்னநந்தல் எஸ். வெங்கடேசன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

✉ என்னைய்யா ரீல் விடறேன்னு படிச்சா நிஜமாகவே பாட்டிலுக்குள் ஓவியம்! பால முருகனுக்கு வாழ்த்து! - கோவை 11, மு. பலராமன், திருமங்கலம் இ. பாலாமணி, ராணிப்பேட்டை காரியாகல்லா, சேலம் எம்.கே. வேங்கவேல், சிதம்பரம் ஸ்ரீவித்யா காளிதாஸ், விருத்தாசலம் வி. பிரபாகர், ஆர். பிரசன்னா, அருப்புக்கோட்டை ம. இராஜ்குமார், பரங்கிப்பேட்டை காசி. நடராஜன், சைதை ஜி. ர. வேளா, மேலப்பாதி எஸ். நாகராஜன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

✉ 'வண்டி இழுத்த மாணவர்கள்' ராதாகிருஷ்ணனுக்கும் மாணவர்களுக்கும் இடையே இருந்த அன்பையும் பிணைப்பையும் காட்டுகிறது. இந்த மாதிரியான கட்டுரை நிகழ்ச்சிகளை அதிகம் வெளியிடுங்கள் சார்! - கரூர். இ. தாமோதரன், இளப்பாக்கம் வா. ரிச்சேட், தென்காசி. தா. துரைமுருகன், கருமத்தம்பட்டி இரா. அனிதா, செம்பனார் கோயில் ஜெ. ஜம்மு.

✉ எங்கேயிருந்து சார் இப்படியெல்லாம் சஸ்பென்ஸாக வைத்து படக்கதை பண்ணக் கத்துக்கிட்டீங்க? தலைப்பு மட்டும் தான் சஸ்பென்ஸா? ஒரே மூச்சுல படிக்க வைச்சதுக்காக எத்தனை தடவை வேண்டுமானாலும் பாராட்டலாம். - திருவண்ணாமலை கு. பாரதிராஜா, நெற்குப்பை இ. மனோகரன், சிதம்பரம் ஸ்ரீவித்யாகாளிதாஸ், செம்பனார் கோவில் ஜெ. ஜம்மு, மேலப்பாதி என். ராஜலட்சுமி, கபிஸ்தலம் ஆர். ரவிவர்மன், பெத்தல்புரம் எம். ஜே. கோல்பர் ஜோஸ், சின்னசேலம் இரா. பிரசன்னகுமார், பரங்கிப்பேட்டை காசி. நடராஜன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

✉ 'கொழுக்கட்டை வாழ்க!' நாடகம் நகைச்சுவையோடும் கருத்தோடும் அமைந்திருந்தது. பிள்ளையார் படம் அபாரம் போங்கள் - தரமணி கா. விஸ்வநாதன், வேலூர் தா. கன்னியம்மாள், திண்டுக்கல் மு. சாமுவேல், சிதம்பரம் கு. அப்பாசாமி, கருமத்தம்பட்டி இரா. அருண் பிரகாஷ், சின்னசேலம் ஆர். பிரசன்னகுமார், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.



அப்பாவின் ஆழ்ந்த சிந்தனையை, கூவிக் கொண்டே ஓடி வந்த மீனா கலைத்துவிட்டாள்.

"அப்பா, அண்ணனைப் பாருங்கப்பா. அவனுக்கு அடுத்த வாரம்தானே பரீட்சை? நாளைக்குப் பரீட்சைக்கு நான் எடுத்துப் போக ஜாமெட்ரி பாக்ஸைத் தரமாட்டேங்கிறாம்ப்பா" என்ற மீனாவின் முறையீட்டைக் கேட்ட அப்பாவுக்குக் கோபம் வரவில்லை. இது புதிதாகத் தோன்றினால்தானே கோபப்பட..? மகன் கேசவனின் குணம் அவருக்குத் தெரியும். மகளைச் சமாதானம் செய்து அனுப்பி வைத்தார்.

இவ்வளவு நேரமாக அப்பாவே கேசவனைப் பற்றித்தான் கவலையுடன் சிந்தித்துக் கொண்டிருந்தார். நேற்று மாலை கேசவனின் பள்ளி உடற்பயிற்சி ஆசிரியரைச் சந்திக்க நேர்ந்தது. "குழுவிளையாட்டுகளில் கேசவன் ஏன் கலந்துக்க மாட்டேங்கிறான். மற்ற மாணவர்களைப் போல அவன் கலகலப்பா யாருடனுமே இருக்கிறதில்லையே? மற்றவர்களோடு சகஜமாப் பழகறதாகவும் தெரியலையே!" என்று ஆசிரியர் கூறியதை வேதனையான சிரிப்புடன் ஏற்றுக் கொண்டார் அப்பா.

ஆசிரியர் சொன்னது முற்றிலும் உண்மையே. கேசவன் வினோதமானவன். மற்றவர்களோடு பழகுவதைத் தவிர்ப்பவன். அவனுக்கு அது அநாவசியமாகத் தோன்றியது. "நான் ஏன் பிறரைச் சார்ந்து வாழ வேண்டும்?" என்று கேட்பான். அவ்வளவு ஏன்! அவனுக்கு நண்பர்கள் கூடக் கிடையாது! நட்பின் பெருமையை அவன் ஒரு சிறிதும் உணராதவனாக இருந்தான்.

அன்று காலை கேசவன் பள்ளிக்குச் செல்ல வாசலுக்கு வந்தபோது, அதே தெருவில் வசிக்கும் கேசவனின் வகுப்பு மாணவன் கோவர்த்தன் எதிர்ப்பட்டான். கேசவனைப் பார்த்ததும் தன்னுடைய சைக்கிளில் ஏறிக் கொள்ளும்படி எவ்வளவோ வற்புறுத்தினான். அதைப் பிடிவாதமாக மறுத்துவிட்டு கேசவன் நடந்தே பள்ளிக்குச் சென்றான். இது

கமுதி. மு. ரியாசுல்லா



பரியதி!

அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சிதான்.

கேசவன் கோவர்த்தனுடன் பள்ளிக்குச் செல்ல முற்படுவான், கோவர்த்தனுடன் நண்பனாக இருக்க முயற்சிப்பான் என்ற நம்பிக்கையில்தான் அப்பா அவனுக்கு என்று புது சைக்கிளை இன்னுமும் கூட வாங்கித் தராமல் தட்டிக் கழித்துக் கொண்டே வருகிறார். என்ன பயன்? கேசவனின் போக்கில் கொஞ்சம் கூட மாற்றம் தெரியவில்லையே!

கேசவன் என்றைக்காவது மாறாமலா போவான் என்ற நம்பிக்கையில் அப்பா இருந்தார்.

அன்று பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த கேசவன் அப்பாவிடம் வந்து நின்றான். ''என்ன கேசவா?'' என்று விசாரித்தார் அப்பா.

"அடுத்த வாரம் பள்ளில சுற்றுலாவுக்குக் கூட்டிக் கிட்டுப் போறாங் கப்பா இன்னிக்குப் பணம் கட்டச் சொல்லியிருக்காங்க'' என்று கேசவன் சொல்லவும் அப்பா உடனடியாகப் பணத்தைக் கொடுத்தார்.

மறுவாரம் சுற்றுலாவுக்குப் பஸ் புறப்பட்டது. வழியெங்கும் ஒரே ஆட்டமும் பாட்டமும்தான். கேசவனைத் தவிர எல்லாரும் அதில் கலந்து கொண்டனர். கேச

வனின் தனிமையைக் கண்ட மாணவர்கள் அவனைக் கிண்டல் செய்யவும் தவற வில்லை. கேசவன் இதையெல்லாம் கண்டும் காணாததுபோல் இருந்துவிட்டான். இதெல்லாம் அவனுக்குப் புதிதல்லவே?

சுற்றுலாத்தலம், மாமல்லபுரம், மாமல்லபுரக் கடற்கரையைக் கண்டதும் மாணவர்களின் உற்சாகம் பல்கிப் பெருகியது.

மாணவர்கள் சிறிது நேரம் மட்டுமே தள்ளிப் போய்க் கடல் அலையில் நிற்க அனுமதிக்கப்பட்டது. பிரிந்து போய்விடப் போகிறார்களே என்ற முன்னெச்சரிக்கையின் காரணமாக உடற்பயிற்சி ஆசிரியர் அவர்களைக் குழு விளையாட்டுக்களில் ஈடுபடுமாறு பணித்தார்.

இந்தக் கடற்கரையில் என்ன மாதிரியான விளையாட்டு விளையாட முடியும் என்று அனைவரும் குழுமி ஆலோசிக்கத் தொடங்கினர்.


கயிற்றை இழுத்து விளையாடுவதே பொருத்தமானது என்று முடிவு செய்யப்பட்டது. மாணவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்தனர்.

சுற்றுலாப் பேருந்தின் மேல்தளத்தில் இருந்த பெரிய, வலுவான கயிறு கொண்டு வரப்பட்டது. மணலில் கோடு ஒன்றை வரைந்து கொண்டு அதன் இருபுறமும் மாணவர்கள் ஒருவர் பின் ஒருவராக நின்று கயிற்றைப் பிடித்துக் கொண்டனர்.

"சிங்கம் சாக்கடைக்குள்ள போயிருச்சுன்னா.. என்ன ஆகும்?"

"அசிங்கமாயிடும்...!"

— நெற்குப்பை கி. மனோகரன்



ரெடி ஒன்.... டூ... த்ரீ.... ஆரம்பித்ததோ இல்லையோ இரு குழுவும் தங்கள் முழு வலிமையையும் காட்டி இழுக்கத் தொடங்கினர். நேரம் செல்லச் செல்ல மாணவர்களின் உற்சாகம் பெருகியது. வரிசையின் கடைசியில் நின்று கொண்டிருந்தவர்கள் தரையைத் தொடும் அளவிற்குப் பின்னுக்குச் சென்று இழுத்தார்கள். அது பார்க்க வேடிக்கையாக இருந்தது. ஆனால் இவை எவற்றிலும் கலந்து கொள்ளாது தனிமையாக இருந்தான் கேசவன்!

பத்துப் பதினைந்து நிமிடங்கள் ஆகியிருந்தபோது ஒரு குழு தோற்றுப் போனது. மறுபடியும் விளையாடத் திட்டமிடப்பட்டது. மாணவர்கள் அனைவரும் கும்பலாகச் சென்று கேசவனை விளையாட்டுக்கு அழைத்தனர். கேசவனோ வர முடியாது என்று வழக்கப்படி பிடிவாதம் பிடித்தான். மாணவர்கள் விடுவதாக இல்லை. அவனை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றனர். உடற்பயிற்சி ஆசிரியரும் அவனை விளையாடுமாறு பணித்ததால் வேறு வழியில்லாமல் கேசவனும் வேண்டா வெறுப்பாக அவர்கள் இழுப்புக்குச் சென்றான். அது மட்டுமா? கேசவன் தான் இப்பொழுது முதல் ஆளாக நிறுத்தப்பட்டான்!

விளையாட்டு ஆரம்பித்தது. கேசவனுக்கு புதுமையாக இருந்தது. பலமாக இழுத்துக் கொண்டிருந்தான் அவன்.

திடீரென முன்புறம் மிகப்பலமாக இழுக்கப்பட்டது. அது யானை பலம். முன் பக்கம் போய்த் தலைகுப்புற விழுந்தான் கேசவன். அதெப்படி! கேசவன் வியப்புடன் திரும்பிப் பார்த்தான். கேசவனுக்குப் பின் நின்ற அனைவரும் ஒட்டுமொத்தமாக விலகியிருந்தார்கள்! அவனால் விழாமல் வேறு என்ன செய்ய முடியும்?

"என்ன கேசவா...? யாருடைய உதவியும் தேவையில்லை என்று தனியாக இருப்பியே? இப்பத் தனி ஆளா நின்னு அவங்களை இழுக்க வேண்டியதுதானே? ஒற்றுமையின் பலம் இப்பத் தெரியுதா?" என்று சிரித்தபடியே அவனைப் பார்த்துக் கேட்டான் கண்ணன். பலரும் பலவாறு கூறிச் சிரித்தனர். கேசவனால் அவமானத்தைத் தாங்க முடியவில்லை.

"இதென்ன இவர்கள் இப்படிச் செய்கி

றார்கள்! ஆசிரியரும் கண்டு கொள்ள வில்லையே?" என்று நினைத்த கேசவனின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

சுற்றுலா முடிந்து அனைவரும் வீடு திரும்பினர். வீட்டிற்கு வந்த கேசவன் யாருடனும் பேசவில்லை. நடந்ததையே மீண்டும் மீண்டும் நினைத்துக் கொண்டிருந்தான் அவன்.

அப்பா கேசவனை அழைத்து, "சுற்றுலா எப்படி இருந்தது?" என்று கேட்டதுதான் தாமதம், கேசவன் நடந்ததை எல்லாம் சொல்லி முடித்தான். எல்லாவற்றையும் அப்பா கேட்டுக் கொண்டார். அது பற்றி அவர் எதுவும் சொல்லவில்லை.

"அப்பாவும் ஏன் ஏதுவும் சொல்ல மாட்டேன்கிறார்? அப்படியானால் அவர்கள் செய்தது சரிதானா?" என்று கேசவன் குழம்பிப் போனான்.

கொஞ்ச நேரம் கழித்து அப்பாவின் அழைப்புக் குரல் கேட்டது.

"கேசவா... என்னுடைய ஆபீஸ் கோப்புகள் சிலதைக் கட்டி வைக்க வேண்டும். கொஞ்சம் சணல் எடுத்து வா?"

அப்பாவின் வேண்டுகோளை நிறைவேற்ற ஆயத்தமானான் கேசவன்.

அவன் கொண்டு வந்த சணல் கயிற்றை வாங்கிப் பார்த்த அப்பா, "இதைக் கொஞ்சம் பாதியாக அறுத்துக் கொடேன்" என்றார்.

கேசவன் அதைக் கையில் வாங்கி முன்னும் பின்னும் முறுக்கை விலக்கி இளக்கி இழுத்தான். 'பட்' என்ற சத்தத்துடன் கயிறு அறுந்தது. அறுபட்ட துண்டுகளை அப்பாவிடம் நீட்டினான் கேசவன்.

கயிற்றைக் கையில் வாங்கிக் கொண்ட அப்பா, "கேசவா... நீ எதற்காக அந்தக் கயிற்றின் முறுக்கை இளக்கினே?" என்று கேட்டார்.

"அப்பத்தானே அது தனித்தனி இழையாகப் பிரியும்? அதற்குப்பின் அதை பிரிப்பது சுலபமாகும் என்றுதான் முறுக்கை இளக்கினேன்" என்றான் கேசவன்.

"முறுக்கை இளக்காம அதை அறுக்க முடியாதா?"

"அதெப்படி அப்பா முடியும்?"

"முடியாதல்லவா? அதுதான் கேசவா நட்பின் பலம்; ஒற்றுமையின் பலம். மிக மெல்லிய நூல் இழைகள் பலவற்றை ஒன்றாகச் சேர்த்து முறுக்கினால் வலிமையான சணல்கயிறு உருவாகிறது. இந்தக் கயிற்றின் வலிமையை நாம் பலவிதத்தில் பயன்படுத்திக் கொள்கிறோம். அது தனித்தனி இழைகளாக இருந்தால் உபயோகப்படுமா? ஆனால் ஒன்று சேர்ந்து இறுக்கப்படும் போது வலிமை எப்படிப் பெருகுகிறது பார்த்தாயா? இவ்வளவு ஏன், ஐந்து விரல்களையும் ஒன்றாகக் குவித்துப் பார் கையின் பலம் தெரியும். நட்பு என்ற ஒற்றுமையின் பலம் மிகப் பெரியது. இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் நீ மற்றவர்களுடன் பழக மறுக்கிறாயே! மற்றவர்களுடன் கூடி ஒற்றுமையாக வாழ்ந்தால் நம்மை எந்த இடையூறும் நெருங்க முடியாது. இந்த நல்ல பாடத்தைத்தான் சுற்றுலாவில் உன் நண்பர்கள் உனக்குப் போதித்திருக்கிறார்கள். உன்னால் அதை உணர முடியவில்லை!"

"இப்போ உணர்கிறேன் அப்பா! எனக்குப் புரியுது!" என்றான் கேசவன்.

"ஆமாம்பா. நான் மாறிட்டேன். எல்லாருடனும் நட்புடன் பழகுவேன். இனிமேல் தனித்திருக்க மாட்டேன்" என்று உறுதியாகச் சொன்னான் அவன்.

மறுநாள் கேசவன் பள்ளிச்சீருடையை அணிந்துக் கொண்டு வீட்டு வாசலில் காத்துக் கொண்டிருந்தான். கோவர்த்தனுடன் சைக்கிளில் செல்வதற்காகத்தான்!



"பையன் எம்.பி.ஏ. படிக்கிறான்!"

"எம்பாம படிக்க மாட்டானா?"

"!?!?!"

— காழி. ஆர். சீதாராமன்

ஒலிம்பிக் நெகிழ்வுகள்!

அட்லாண்டா ஒலிம்பிற்கான அழகிய எளிய சின்னத்தைத் தேர்ந்தெடுத்தவர்கள் யார் தெரியுமா? 16 நாடுகளைச் சார்ந்த உங்களைப் போன்ற 32 சிறுவர் சிறுமிகள்தான். 'இசி' என அழைக்கப்படும் இந்தச் சின்னத்தை எளிதாக வடிவமைக்கவும் முடியும்' என்ற காரணத்தால் ஒலிம்பிக் குழு இதை அங்கீகரித்து விட்டது. பலராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது. மகிழ்ச்சியாக இருக்கிறது இல்லையா?


இந்தியா வெறும் கையுடன் நாடு திரும்ப வேண்டியிருக்குமோ என்ற நிலையில், நல்லவேளையாக லியாண்டர்பயஸ் இந்தியாவின் கௌரவத்தைக் காப்பாற்றி விட்டார். நடந்த டென்னிஸ் போட்டியில் இந்திய டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ், பிரேசில் வீரரைத் தோற்கடித்து வெண்கலப் பதக்கத்தை வென்று விட்டார்! 16 வருட இடைவெளிக்குப் பின் ஒலிம்பிக் நிகழ்ச்சியில் இந்திய நாட்டிற்குப் பதக்கம் பெற்றுக் கொடுத்த லியாண்டர் பயசுக்கு மறுபடியும் கரவொலி செய்வோம்! அரையிறுதிப் போட்டியிலும் விளையாட வாய்ப்பு பெற்ற லியாண்டர் பயஸ் உலக டென்னிஸ் வீரர்களில் 127-வது நிலையில் இருந்து வந்தவர். இவர் போட்டியிட்ட அமெரிக்க வீரர். அகாசியோ இரண்டாம் நிலை வீரர். ஆனால் லியாண்டரின் ஆட்டத்தை அகாசியோ உட்பட பலர் வியந்து பாராட்டியுள்ளனர். லியாண்டர் பயஸ் தனது 16வது வயதிலேயே இந்திய டேவிஸ் கோப்பை அணியில் இடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1990-ம் ஆண்டில் அர்ஜுனா விருதும் பெற்றிருக்கிறார். இந்தியாவில் கிரிக்கெட் ஆட்டத்திற்கு முக்கியத்துவமும் ஊக்கமும் தரப்படுவது போன்று, டென்னிஸ், ஹாக்கி ஆட்டங்களுக்கு தரப்படுவதில்லை என்று லியாண்டர் பயஸுக்கு இரண்டரை லட்ச ரூபாயுடன் விருதளித்து



கௌரவித்திருக்கிறார்கள்.

ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற்ற உணர்ச்சியில் சிலர் மகிழ்ச்சி மிகுதியால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். சிலர் தரையை முத்தமிட்டார்கள். சிலர் வாய் வலிக்கக் கத்தினார்கள். நெருங்கியவர்களை ஆரத் தழுவி முத்தமிட்டுக் கொண்டார்கள்.


அமெரிக்க வீராங்கனை கெர்ரி ஸ்டி



ரிக். ஜிம்னாஸ்டிக் போட்டியில் வால்ட் பிரிவில் பல அற்புத சாகசங்களைச் செய்து காண்பித்த போது கிழே இடது இடதுகாலில் முறிவு ஏற்பட்டது. ஆனால் கெர்ரி ஸ்டிரிக் மனம் தளரவில்லை, தொடர்ந்து தான் விரும்பிய சாகஸங்களைச் செய்து முடித்தாள். இவள் கலந்து கொண்ட அமெரிக்க அணியும் வெற்றி பெற்றது. நடக்க முடியாத நிலையிலிருந்த கெர்ரி ஸ்டிரிக் பதக்க மேடையில் நின்று பதக்கம் வாங்கிய பின்புதான் மருத்துவமனைக்குப் போக விரும்பினாள். அவள் மன நிலை அறிந்து அவள் பயிற்சியாளர் அவளை அப்படியே தூக்கிச் சென்று பதக்க மேடையில் நிறுத்தினார். மறக்க முடியாத நிகழ்ச்சியாகி விட்டது இது! 'ஒலிம்பிக் ஸ்பிரிட்' எனப்படும் நட்சத்திர விருதும் இவளுக்குக் கிடைத்தது. முகமது அலி உலகக் குத்துச்சண்டை வீரர், தங்கப் பதக்கம் வென்றவர். பர்க்கின் சயன்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டதால் இவரால் போட்டியில் கலந்து கொள்ள முடியவில்லை. இடப்பக்க உடல், கைகள் நடுங்கும் நிலை. இருந்தும் ஒலிம்பிக்கில் தன் பங்கிற்கு எதையாவது செய்ய துடித்தார். வாய்ப்பும் கிடைத்தது. தனது நடுங்கும் கைகளின் நடுக்கத்தை அடக்கியபடி ஒலிம்பிக் ஜோதியை வாங்கி ஏற்றிய காட்சி. காண்போர் மனதைக் கரைய வைத்தது.

நகைச்சுவைக்கு ஒன்று; ஹங்கேரி நாட்டு தடகள வீரர் லிவாண்டி, ஒலிம்பிக் சின்னத்தைப் போன்று கனகச்சிதமாகத் தன் தலைமுடியை வெட்டிக் கொண்டு, போட்டிகளிலும் பங்கேற்றார். என்ன ஒலிம்பிக் பக்தி!

-எஸ்.ஆர்.ஜி



சிகைக்காய் சோப்பைப் பயன்படுத்தலாமா?

● கே.சி. கோகுலன், பூண்டி.

? காமாலையில் 17 வகைகள் உள்ளன என்று என் நண்பன் கூறுகிறான். இது உண்மையா? உண்மையெனில் அவை என்னென்ன, டாக்டர்?

! உன் நண்பனின் கூற்று தவறு, தம்பி. காமாலையில் மூன்று வகைகள்தான் உண்டு. ஹெபடைட்டிஸ்-ஏ, ஹெபடைட்டிஸ்-பி, அடைப்புக் காமாலை என்பது அவற்றின் பெயர்கள். ஆனால், ஒருவருக்குக் காமாலை வருவதற்கு 50க்கும் மேற்பட்ட காரணங்கள் உள்ளன. இந்தக் காரணங்களைத்தான் உன் நண்பன் 'வகைகள்' என்று தவறாகப் புரிந்திருக்கலாம் என்பது என் ஊகம்.

● ஆர். கார்வண்ணன், ஆர். பாஸ்கரன், கோ. தோப்பு.


? எங்களுக்கு இரவில் கண்கள் தெரிவதில்லை. இதற்குத் தகுந்த ஆலோசனை கூறுங்கள், டாக்டர்!

! இரவில் மட்டும் பார்வை தெரியவில்லை என்றால் அது 'மாலைக் கண் நோயின்' அறிகுறி. உடனடியாக ஒரு கண் மருத்துவரிடம் நீங்கள் இருவரும் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். மாலைக்கண் நோய்தான் என்பது உறுதியாகி விட்டால் அதற்குரிய சிகிச்சைகளை மேற்கொண்டு குணமாக்கி விடலாம். மாலைக்கண் நோய் நம் உடம்பில் வைட்டமின் ஏ என்ற சத்துக் குறைவதால் உண்டாகிறது. வைட்டமின் ஏ ஊசி, மாத்திரை, டானிக்குகள் மூலம் இந்த நோயை உடனே சரி செய்து விடலாம். காரட், தக்காளி, பூசணி, மாம்பழம், முட்டை, ஈரல், வெண்ணெய், மீன் எண்ணெய், காட்லிவர் ஆயில் போன்றவற்றில் வைட்டமின் ஏ நிறைந்துள்ளது. இவ்வுணவுகளை அடிக்கடி சேர்த்துக் கொண்டால் மாலைக் கண் நோய் வரவே வராது.

● வெ. ஜெகதீசன், தொம்பக் குளம்.

? மழைக்காலங்களில் ஜலதோஷம் பிடித்துக் கொண்டால் காது அடைத்துக் கொள்கிறதே, இது ஏன்? விளக்கம் தேவை.

! ஈஸ்டாக்கியன் குழாய் என்ற சிறிய குழாய் ஒன்று நடுக்காதையும், தொண்டையையும் இணைக்கிறது. காற்றின் அழுத்தம் காதுக்குள் அதிகரிப்பதைத் தடை செய்கிறது. இந்தக் குழாய். ஜலதோஷம் பிடித்துக் கொள்ளும் போது இந்தக் குழாய் அடைத்துக் கொள்கிறது. இந்தக் குழாய் வழியாகக் காற்று தடையின்றிச் சென்று வர இயல்வதில்லை. இதன் காரணமாக காதுக்குள் அடைத்துக் கொண்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது.



● கோ. கேசவமணி, மேலப்பாதி.

? Brain Fever நோயின் முன் அறிகுறிகள் என்ன?

! கடுமையான காய்ச்சல், தாங்க முடியாத தலைவலி, கட்டுக்கடங்காத வாந்தி, கழுத்து வலி, கழுத்தை மேலும் கீழும் அசைக்க முடியாத நிலைமை, நோயாளி எதைக் கண்டாலும் அரள்வது, மிரள்வது, தானாகப் பேசிக் கொள்வது, தொடர்பின்றிப் பேசுவது, உளறுவது, வலிப்பு போன்றவை மூளைக்காய்ச்சல் நோயின் முன்னறிவிப்புகள்.

● பி. ராஜேஸ்கண்ணா, தாளப்ப நாயக்கன்பட்டி.

? குளிர்ந்த நீரில் குளிப்பது

நல்லதா? சுடுநீரில் குளிப்பது நல்லதா?

! சுத்தமான நீரில்!

● த. வரதன், திருவாரூர்.

? கைகளில் அதிகமாக நெட்டி முறிப்பதால் 'ஆர்த்திரைட்டிஸ்' என்கிற மூட்டுவலி நோய் வந்து விடும் என்று கூறுகிறார்களே, உண்மையா?

! உண்மையில்லை! அதற்காக கைகளை அடிக்கடி நெட்டி முறிக்க வேண்டும் என்கிற அவசியமுமில்லை!

● பத்ம. சிவாஜி, நீடாமங்கலம்.

? தலைக்கு சிகைக்காய் சோப்பு பயன்படுத்தலாமா, டாக்டர்?

! பயன்படுத்தலாம்!

● எம். ராஜ்குமார், திருப்பூர் - 3.

? மிகவும் அழகாக வரிசையாக இருந்த என் முன்பற்கள் இப்போது அமைப்பு மாறி விட்டதால் இடுக்குகள் தோன்றியுள்ளன. இதை சரி செய்ய இயலுமா, டாக்டர்?

! பல் சீரமைப்பு நிபுணரிடம் சென்றால் உன் பிரச்னைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும். கம்பிக்கட்டு (wiring) மூலம் உன் பற்களில் ஏற்பட்டுள்ள இடுக்குகளின் இடைவெளியைச் சரி செய்து விடுவார்.

● ஜி. வைரமுத்து, திருத்தங்கல்.

? காண்டாக்ட் லென்ஸ் என்பது என்ன? இதை அணிந்து கொண்டால் கிட்டப் பார்வை சரியாகிவிடுமா? இந்த லென்ஸ் விலை எவ்வளவு? தெளிவாகப் பதில் கூறவும்.

! காண்டாக்ட் லென்ஸ் என்பது கண்களில் ஏற்படுகின்ற பார்வைக் குறைபாடுகளை சரிசெய்யப் பயன்படும் ஒரு வகை செயற்கை லென்ஸ். இது கண்ணில் உள்ள கருப்பு விழியின் மேல் பொருத்தப்படுகிறது. இதன் மூலம் கிட்டப்பார்வைக் குறைபாட்டைக் குணப்படுத்த முடியும். இதன் விலை ரூபாய் 1000லிருந்து 5000 ரூபாய் வரை உள்ளது.

● கோ. கேசவமணி, மேலப்பாதி.

? Scan எடுக்கும் போது திரையில் எப்படி உள்ளுறுப்புகள் தெரிகின்றன?

! Scan பலவகை உண்டு. அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் இதில் ஒரு வகை. இந்தக் கருவி கேளா ஒலி அலைகளை உடம்புக்குள் அனுப்புகிறது. அவை உள்ளுறுப்புகளில் பட்டு எதிரொலிக்கிறது. அந்த எதிரொலிகள் எந்த உறுப்பு களிலிருந்து கிளம்புகிறதோ அந்த உறுப்புகளின் பிம்பத்தை ஸ்கேன் திரையில் காண்பிக்கின்றன. இயல்பான பிம்பம் எப்படி இருக்கும் நோய் நிலைகளில் அது எப்படி இருக்கும் என்பதை மருத்துவர் அறிவார் இதன்படி அந்த உள்ளுறுப்புகளில் நோய் உள்ளதா. இல்லையா என்பது உறுதி செய்யப்படுகிறது. இரண்டாவதாக, எக்ஸ் கதிர்களின் மூலம் உடம்பின் உள்ளுறுப்புகளின் பிம்பத்தைப் பெறுவது. C.T. Scan, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனை விட இதன் பிம்பங்கள் தெளிவாக இருப்பது இதன் சிறப்பு. ஆனால், எக்ஸ் கதிர்களால் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதால், C.T. Scan ஐ அடிக்கடி ஒருவருக்குப் பயன்படுத்த முடியாது. மூன்றாவதாக MRI Scan. இது மின் காந்த அலைகளை உடம்புக்குள் அனுப்பி உள்ளுறுப்புகளின் பிம்பங்களைப் பெறுகிறது. ஸ்கேன்களில் இப்போதைக்கு இதுதான் சூப்பர் ஸ்டார்!





காசு சேர்ப்போம் முன்னாலே..

சேமிப்பு என்றதுமே நம்முடைய கவனத்திற்கு வருவது உண்டிதான். இந்த உண்டிப் பெட்டிகளில்தான் எத்தனை எத்தனை வகைகள்! தகரத்தால் தான் ஆன பூட்டுப் போட்ட உண்டிகள்! மண்ணால் ஆன குண்டு உண்டிகள்! மரப்பெட்டி உண்டிகள் என்று எத்தனையோ வகை உண்டிகள்! இப்பொழுதெல்லாம் மாம்பழம், பலாப்பழம், குருவி, ஆப்பிள் வடிவ வண்ண உண்டிகள்கூட வந்து விட்டன. எந்த ஊரில் திருவிழா நடைபெற்றாலும் வரிசை வரிசையாகக் கடைகள் முளைக்கும். இந்தக் கடைகளில் கண்டிப்பாக உண்டிகளுக்குத் தனி இடம் இருக்கும்.

உண்டிகளை சிறு சேமிப்பு இயக்கத்தின் ஏஜெண்டுகள் என்று கூடக் கூறலாம். இவை குழந்தைகளுக்கு மட்டும் இன்றி பெரியவர்களுக்கும்கூட சேமிப்பு உணர்வை வளர்க்கத் தூண்டுகோலாக உள்ளன. இப்பொழுதெல்லாம் வங்கிகளில் சிறுவர் பெயரில் சேமிப்புக் கணக்கைத் துவக்கினால், அவர்களே கைக்கு அடக்கமான ஒரு வண்ண உண்டியைப் பரிசாகத் தருகிறார்கள். குழந்தைகளின் சேமிப்பு உணர்வை இந்த அழகு உண்டிகள் வளர்க்கின்றன. இவைகளுக்கு சாவி கூட உண்டு.

நம்முடைய முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் வங்கிகள் இல்லை. அதனால் தங்கள் சேமிப்பை எல்லாம் அவர்கள் தங்க வெள்ளி நகைகளாகவே வைத்திருந்தனர். களிமண் சுவர்களில் தங்க வெள்ளிக் காசுகளைப் புதைத்து வைக்கும் பழக்கம் சமீப காலம் வரை இருந்தது. சேமிப்பு என்றதுமே இது ஏதோ பணக்காரர்களுக்கானது என்ற எண்ணம்






பலருக்கும் தோன்றுகிறது. இது சரியல்ல. சிறு சேமிப்பு என்பது எத்தகைய ஏழைக்கும் உரியது. ஒரு ரூபாய் சம்பாதித்தால், ஐந்து காசைச் சேர்த்து

கவலை இல்லை பின்னாலே!





வைத்தால் கூட சிறுசேமிப்புத்தான். இது நம்மையறியாது வளர்ந்து சமயத்தில் கை கொடுத்து உதவும். உண்மையில் செல்வந்தர்கள் இடும் பெரும் சேமிப்பை விட, சிறு சேமிப்பின் மொத்த அளவு பல மடங்கு அதிகமானது என்பதை அரசு அறிக்கைகள் உணர்த்துகின்றன. அதனால்தான் அரசு, சிறுசேமிப்பு இயக்கத்தை மேலும் மேலும் வலுவான பரந்த இயக்கமாக்க உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சிறு சேமிப்புக்கும் சிறுவர்க்கும் என்ன தொடர்பு என்ற சந்தேகம் எழலாம். இன்று சிறு சேமிப்புத் திட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் சிறுவர்களே! பள்ளிகளிலேயே இவர்களுக்கென 'சஞ்சாயாகா சேமிப்புத் திட்டம்' உள்ளது. அதிக அளவிலான சேமிப்பைக் காட்டுபவர்களுக்குப் பரிசும் தருவதால் இதற்கு நல்ல ஆதரவும் பெருகி வருகிறது.



தங்களுக்கு பஸ் செலவுக்காகவும், டிபனுக்காகவும் தரப்படும் சில்லறைக் காசுகளில் மிச்சமிருப்பதை உண்டியில் போட்டு, அதை சஞ்சாயிகா திட்டச் செமிப்பில் சேர்க்கிறார்கள். நகரங்களில் உள்ள சிறுவர்களுக்கு பாக்கெட் மணி கிடைக்கிறது. இதன் சேமிப்பையும் இவர்கள் சஞ்சயிகாவில் போடுகிறார்கள். திருவிழா, பண்டிகைகளுக்காகத் தரும் பணம், உறவினர்கள் தரும் பணம் போன்றவற்றை கிராமத்துச் சிறுவர்கள் சேமிக்கிறார்கள். இவையெல்லாம் நாட்டின் வளர்ச்சி திட்டங்களுக் குத்தான் பயன்படுகின்றன என்பது பெருமைப் படவேண்டியதாகும்.

சிறுசேமிப்பு என்றதுமே தேனியையும், எறும்பையும் சின்னமாகக் காட்டுகிறார்கள். சிறுவரைப் பொறுத்தவரை உண்டியே இதற்குப் பொருத்தமான சின்னமாக இருக்கும்.

அட்டையில் மாம்பழ உண்டியலில் பணம் சேமிப்பவர்கள் சிறுமி பவித்ரா, சிறுவன் வி. பரத். வண்ணப் படம் : ஸ்ரீஹரி.

எந்த நாட்டுக் கொடிகள்? போட்டி முடிவு

அப்பா! எத்தனைபேர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியும் போது வியப்பாக இருக்கிறது. பெரும்பாலனவர்கள் சரியான விடை! மற்ற மாநிலங்களில் இருந்து பங்கு கொண்டோர் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது! குலுக்கல் முறையில் ரூபாய் பத்து பரிசு பெறுவோர்.

1. பா. அச்சுதன், சேத்துப்பட்டு, தி.ச. மாவட்டம்.
2. ஐ. குமரன், கோட்டுச்சேரி.
3. ஏ. பாரூக் ஹசன், பனைக்களம்.
4. ஆர். பார்த்தசாரதி, மதுரை - 7.
5. பி.கே. ரகுநாதன், கம்புரம்.
6. எம். முகம்மது இஸ்மாயில். புளியங்குடி
7. பி. பாலசந்திர சோழன், ஜெயம்கொண்டான்.
8. என். பகதி சரண்யா, திருவனந்தபுரம் -1.
9. எஃப். ரஜீக் அகமத், காரைக்கால் - 2.
10. ந. தமிழ்ச்செல்வி, திருவானைக்கா.
11. இரா. அறிவுக்கரசன், நந்திமங்கலம், ஆந்திர மாநிலம்.
12. ஐயப்பன், விருதுநகர்.
13. பி. அந்தோனிசாமி, வடக்கன்குளம்.
14. பி.என். சாந்தலட்சுமி, பாரூர் அஞ்சல்.
15. சா. சந்தோஷ், செக்கானுரணி.
16. பா. பூங்குழலி, சென்னை - 41.
17. ம. அஜித், திருச்செந்தூர்.
18. ராதிகா, புதுடில்லி - 67.
19. எல். மரியா அந்தோணிகுமார், துறையூர்.
20. என். ரம்யா, சென்னை - 5.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி!

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.


மாத்திரை போதும்!
ஊசி வேண்டாம்!

Registered with the Registrar of Newspaper of India. Registered No. TN / MS (S) 281 * Licensed to post without prepayment
under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka